திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வானூர் பகுதியில் வறட்சி:அதிகாரிகள் அவசர ஆலோசனை**

வானூர் வட்டத்தில் வளர்ச்சி மற்றும் வறட்சி குறித்த அவசர ஆலோசனைக் கூட்டம், திங்கள்கிழமை நடைபெற்றது.

வானூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு ஒன்றிய தலைவர் சிவா தலைமை வகித்தார் இக் .கூட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வெங்கடேசன், செங்குட்டுவன், துணைத்தலைவர் சாமிநாதன், பொறியாளர்கள் சக்திவேல், அசோக்குமார் மற்றும் 65 ஊராட்சித் தலைவர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

65 ஊராட்சிகளுக்கும் குடிநீர் பிரச்னையை போக்க, போர் போடுவதற்காக ரூ.75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், பிற்படுத்தப்பட்ட மண்டல வளர்ச்சி பணிகள் அடிப்படையில் கலையரங்கம், காரிய கொட்டகை, நெற்களம், சிமெண்ட தார் சாலைகள் -, தடுப்புச்சுவர் அமைப்பது போன்ற 50 பணிகள் செய்வதற்கு ரூ ஒரு கோடியே.26 லட்சத்து 47 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**மரக்கன்று நடும் விழா**

புதுச்சேரி என் பசுமைப் புரட்சி இயக்க .ஆர்.2-ஆம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி, அரியூர் பகுதியில் மரக்கன்றுகள் நடும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இயக்கத் தலைவர் டிமரக்கன்றுகள் நடப்பட்டு .அச்சுதன் தலைமை வகித்தார்., முதியோருக்கு இலவச வேட்டி, சேலைகள், இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் ஆகியவை வழங்கப்பட்டன.

**எஸ்புதூர் அருகே உழவர் பெருவிழா.**

சிவகங்கை மாவட்டம் எஸ்புதூர் வட்டாரம் வெள்ளியங்குடிபட்டி . வருவாய் கிராமத்தில் உழவர் பெருவிழா நடைபெற்றது.

விழாவிற்கு வேளாண் துணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார்ஒன்றியக் குழுத் . .தலைவர் ராஜமாணிக்கம் முன்னிலை வகித்தார்

விழாவில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு மற்றும் விவசாய இடுபொருள்களை வழங்கி வேளாண் துணை இயக்குநர் சிறப்புரையாற்றினார்.

இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வேலுச்சாமி, ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்துப் பேசினார்.

உழவர்களுக்கு செயல்படுத்தப்படும் திட்டங்களை கால்நடை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், பட்டுப்பூச்சி வளர்ப்பு, மீன்வளம் ஆகிய துறை அலுவலர்கள் எடுத்துக் கூறினர்.

மண் மாதிரி ஆய்வு முடிவுகள் ஒருங்கிணைந்த உழவர் கையேடு உழவர்களுக்கு வழங்கப்பட்டது.

சிறுதானிய பயிர்கள் மற்றும் பாரம்பரியப் பயிர்கள் குறித்த விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டது.

விழாவில் வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணன், ஒன்றியக் குழு துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், ஊராட்சி மன்றத் தலைவர் அமராவதி முத்துராமலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வறட்சியைச் சமாளிக்க மானிய உதவியுடன் தீவன உற்பத்தி**

வறட்சியைச் சமாளிக்க மானியத்துடன் கூடிய தீவன உற்பத்தியை விவசாயிகள் மேற்கொள்ளலாம் என, மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டத்தில் 1600 ஏக்கர் பரப்பில் குறுகிய காலத்தில் )60) நாள்கள் வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய தீவனச் சோளம் பயிரிட்டு, அந்தந்த கிராமப் பகுதியிலேயே பசுந்தீவனம் உற்பத்தி செய்து, அவர்களே பயன்படுத்துவதோடு தேவைக்கு அதிகமான பசுந்தீவனத்தை அப்பகுதியில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவன உற்பத்தி செய்ய ஏக்கருக்கு ரூ.13,600-இல் 50 சதவீத மானியம் ரூ.6,800-ஐ மூன்று தவணைகளில் முதல் தவணையாக, விதைத்த பின் ரூ.3,400-ம், களை எடுத்தல் மற்றும் வளர்ந்த பின் இரண்டாவது தவணையாக ரூ.1,400ம் உற்பத்தி செய்த தீவனப் பயிரை பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பும்போது மூன்றாவது தவணையாக ரூ.2,000-ம் வழங்கப்படும்.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தீவனப் பயிரை விற்கும்போது பசுந்தீவனமாகவோ, உலர் தீவனமாகவோ மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மாவட்டக் குழு நிர்ணயிக்கும் வகையில் 50 சதவீதத் தொகை வழங்கப்படும்போக்குவரத்துச் செலவினம் . .அந்தந்த பால் உற்பத்தியாளர் சங்கங்களையே சார்ந்தது

உபரியான தீவனத்தை பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் விற்பனை செய்யும்போது 50 சதவீத மானியத்துடன் சேர்த்து 100 சதவீத மானியம் பெற வசதி செய்யப்பட்டுள்ளதுகோவை . மாவட்ட விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் இத் திட்டத்தில் பயன்பெற அருகில் உள்ள கால்நடை மருத ்துவ நிலையங்களை அணுகலாம்.

**உழவர் பெருவிழா**

திருப்பூர் மாவட்ட வேளாண்மைத் துறையின் சார்பில்

15 வேலம்பாளையம் கரியகாளியம்மன் கோவில் திருமண மண்டபத்தில் உழவர் பெருவிழா திங்கள்கிழமை நடைபெற்றது.

இதற்கு திருப்பூர் மாநகராட்சி மண்டலத் தலைவர் விராதாகிருஷ்ணன் தலைமை வக.ித்தார் . வேளாண்மை உதவி இயக்குநர் .மாநகராட்சி கவுன்சிலர் சத்யா முன்னிலை வகித்தார்

லட்சுமிகாந்தன், 50 சதவீத மானியத்துடன் கூடிய மக்காச்சோள விதை, விசைத் தெளிப்பான் கருவிகளை விவசாயிகளுக்கு வழங்கினார்.

இதில், மண் மாதிரி சேகரிக்கப்பட்டு உயிர் விதை நேர்த்தி செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது . வேளாண்மைப் பொறியியல் துறையின் .அனைவருக்கும் இடுபொருட்கள் வழங்கப்பட்டன .சார்பில் பவர் டிரில்லர் செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது

தோட்டக்கலை மற்றும் வேளாண் துறையின் மூலமாக பொருள்காட்சியும், வேளாண் தொழில்நுட்ப கருத்துக் கண்காட்சியும் நடைபெற்றதுதோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் . அந்தோணி பால்ராஜ், கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர் கணேசமூர்த்தி, துணை வேளாண்மை அலுவலர் ராயப்பன், விவசாயிகள்

பங்கேற்றனர்.

**இன்று உழவர் பெருவிழா நடைபெறும் கிராமங்கள்**

திருவண்ணாமலை மாவட்டத்தில் புதன்கிழமை மே)8) நடைபெறும் உழவர் பெருவிழாக்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு விவசாயிகளுக்கு மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இர.சக்கரவர்த்தி அழைப்பு விடுத்துள்ளார்.

திருவண்ணாமலை ஒன்றியம் ஆருத்திராப்பட்டு, சுவாளவெட்டி., டிகல்லேரி., துரிஞ்சாபுரம் ஒன்றியம் கூத்தலவாடி, வடகரிம்பலூர், கீழ்பென்னாத்தூர் ஒன்றியம் நாடழகானந்தல், நாகெங்கம்பட்டு., செங்கம் ஒன்றியம் நரடாபட்டு, கட்டமடுவு, தண்டராம்பட்டு ஒன்றியம் நெடுகவாடி, போந்தை, புதுப்பாளையம் ஒன்றியம் ஜப்திகாரியந்தல், சிகெங்கம்பட்டு., போளூர் ஒன்றியம் கல்வாசல், முனியந்தாங்கல், சீங்காடு ஆகிய கிராமங்களில் புதன்கிழமை காலை 10 மணிக்கு உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன.

அதேபோல, கலசப்பாக்கம் ஒன்றியம் மட்டவெட்டு, தென்மாதிமங்கலம், சேத்துப்பட்டு ஒன்றியம் கொளக்கரவாடி, நரசிங்கபுரம், ஆரணி ஒன்றியம் நாச்சபுரம், மேற்கு ஆரணி ஒன்றியம் கல்பூண்டி, வந்தவாசி ஒன்றியம் நாவல்பாக்கம், சிறுநாவல்பாக்கம், தெள்ளாறு ஒன்றியம் கொரகோட்டை, அகரகொரகோட்டை, பெரணமல்லூர் ஒன்றியம் தாடிநொளம்பை, செப்டாங்குளம், செய்யாறு ஒன்றியம் தென்பூண்டிபட்டு, அனக்காவூர் ஒன்றியம் அக்கூர், எடவல், வெம்பாக்கம் ஒன்றியம் கோடயம்பாக்கம், ஆலத்தாங்கல், சுமங்கலி, பெருங்கட்டூர் ஆகிய கிராமங்களிலும் திங்கள்கிழமை காலை உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இவ்விழாக்களில் வேளாண் கண்காட்சியும் இடம்பெறுகிறதுஅதிக மகசூல் பெறுவதற்கான . எனவே .தொழில்நுட்பங்களை வேளாண் துறை அதிகாரிகள் எடுத்துரைக்கின்றனர், விவசாயிகள், தங்கள் பகுதியில் நடைபெறும் உழவர் பெருவிழாக்களில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என்று மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இர.சக்கரவர்த்தி தெரிவித்துள்ளார்.

**பழையனூரில் உழவர் பெருவிழா**

திருவண்ணாமலையை அடுத்த பழையனூர் கிராமத்தில் உழவர் பெருவிழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஊராட்சித் தலைவர் கேசக்கரபாணி .துணைத் தலைவர் டி .அய்யனார் தலைமை வகித்தார். பெரியசாமி .திருவண்ணாமலை வேளாண்மை உதவி இயக்குநர் இரா .முன்னிலை வகித்தார் .சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பேசினார்

உதவி தோட்டக்கலை அலுவலர் கன்னியப்பன், பட்டு வளர்ச்சித் துறை சின்னதம்பி, கரும்பு ஆய்வாளர் ஜெயச்சந்திரன், உதவி விதை அலுவலர் வேலு ஆகியோர் அந்தந்த துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கிப் பேசினர்நிகழ்ச்சியில் ., மாவட்ட கவுன்சிலர் பிமீனாட்சி பெருமாள்., உதவி வேளாண்மை அலுவலர் ஏகோவிந்தராஜன் உள்ளிட்ட . .பலர் கலந்து கொண்டனர்

போளூர்

ஜமுனாமரத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த தும்பகாடு கிராமத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணகி தலைமை வகித்தார்வேளாண்மை . விதைச்சான்று உதவி இயக்குநர் பேபிபர்வதம் .அலுவலர் சித்ரா வரவேற்றார், தோட்டக் கலைத் துறை உதவி வேளாண்மை அலுவலர் வசந்தி, உதவி வேளாண்மை அலுவலர் உலகநாதன், பட்டு வளர்ச்சித் துறை அலுவலர் பாலகிருஷ்ணன் ஆகியோர் அரசின் வேளாண் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர்.

**மே14-இல் அலங்கார மீன் வளர்ப்புப் பயிற்சி**

அலங்கார மீன் வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் மே 14ஆம் தேதி நடைபெற உள்ளது.

அன்று காலை 9 மணிக்கு தொடங்கும் இந்தப் பயிற்சி முகாமில், அலங்கார மீன்களின் வகைகள், உணவுப் பழக்கம், இனப்பெருக்க முறைகள், தொட்டி அமைப்பு மற்றும் வளர்ப்புக் குளங்கள் பராமரிப்பு, நீராதார மேலாண்மை மற்றும் வளர்ப்பு பொருளாதாரம் உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

அதிக லாபம் ஈட்டக்கூடிய, முட்டை இட்டு குஞ்சு பொறிக்கும் மீன் இனங்கள் குறித்தும் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் பயிற்சியில் பங்கேற்கலாம்.

விருப்பமுள்ளவர்கள் மே 13ஆம் தேதிக்குள் தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பெறலாம் என நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பசுந்தீவன உற்பத்திக்கு 50 சத மானியம்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கால்நடைகளுக்கு பசுந்தீவனம் உற்பத்தி செய்ய 50 சதம் மானியம் வழங்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் டிராஜே.பி.ஷ தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் டி:ராஜேஷ் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு.பி.

வறட்சிக் காலத்தில் கால்நடைகளைப் பராமரிக்க தேவையான தீவன சோளம் 1,300 ஏக்கரில் உற்பத்தி செய்ய தமிழக அரசு நிவாரண நிதி வழங்கியுள்ளதுமாவட்டத்தில் நீர் ஆதாரம் ., கால்நடைகளை கொண்டுள்ள விவசாயிகள் 0.5 முதல் ஓர் ஏக்கர் வரை தீவனப் பயிர் செய்ய 50 சதம் மானியம் வழங்கப்பட உள்ளதுபயனாளிகள் உற்பத்தி செய்யும் பசுந்தீவனம் ., கால்நடைகள் பயன்பாட்டுக்குப் போக மீதம் உள்ள தீவனம் அருகில் உள்ள ஆவின் பால் கூட்டுறவு நிலையத்தில் விற்பனை செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.

அங்கு விற்பனை செய்யப்படும் தீவனத்துக்கு மாவட்ட ஆட்சியரால் விலை நிர்ணயம் செய்யப்படும் கால்நடைகளை வளர்ப்போர் தங்களுக்கு தேவையான தீவனத்தை .50 சதம் மானியத்துடன் அருகில் உள்ள ஆவின் பால் கூட்டுறவு நிலையத்தில் பெற்று கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஓர் ஏக்கருக்கு தீவனம் உற்பத்தி செய்ய 50 சதம் மானியமாக விதைகள் உள்பட ரூ.6,800 வழங்கப்படும்இந்த வாய்ப்பை கால்நடை வளர்க்கும் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள . .வேண்டும் என்றார் ஆட்சியர்

**வேளாண் பொருள்கள் குறித்த விழிப்புணர்வுப் பேரணி**

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூரில் பாரம்பரியமிக்க வேளாண் பொருள்களின் மகத்துவம் குறித்த விழிப்புணர்வுப் பேரணி, கருத்தரங்கு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பேரணியை, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சிராஜேந்திரன்.வி., கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் முகமது ஜெபருல்லா ஆகியோர் தொடக்கிவைத்தனர்.

பர்கூர் பேருந்து நிலையத்தில் தொடங்கிய இந்தப் பேரணி நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று, பி.மாதேப்பள்ளியில் நிறைவு பெற்றது.சி.ஆர்.

பின்னர், நடைபெற்றக் கருத்தரங்கில் பர்கூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஸ்டீபன் ஜெயக்குமார், தோட்டக்கலை உதவி இயக்குநர் அண்ணாமலை, காதி சர்வோதேய மேலாளர் ராஜாராம் (ஓய்வு), பையூர் மண்டல ஆராய்சி நிலைய உதவிப் பேராசிரியர் தண்டபாணி, விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுலர் சேவியர் ஆகியோர் பேசினர். இதைத் தொடர்ந்து, உழவர் பெருவிழா நடைபெற்றது இரட்டிப்பு மகசூல் .உள்ளிட்டவை குறித்து பர்கூர் வட்டார வேளாண்மை அலுவலர் சிவந்தி விளக்கினார்.

ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறைகள் உள்ளிட்டவை பற்றி விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டதுகால்நடைத் துறையின் மூலம் செயற்கைமுறை . கருவூட்டல், குடல்புழு நீக்கம் கால்நடைகளுக்கு செய்யப்பட்டன.

**வறட்சி நிவாரணத்தில் பாரபட்சம் கூடாதுவிவசாயிகள் கோரிக்கை :**

ஆலங்குடி பகுதியில் அரசால் வழங்கப்படும் வறட்சி நிவாரணத்தை பாரபட்சமின்றி பாதிப்புக்குள்ளானோருக்கு வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பருவ மழை குறைவு, மும்முனை மின்சாரம் 20 மணியிலிருந்து 3 மணியாக குறைப்பு இவைகளால் விவசாயம் மற்றும் விவசாய தொழிலாளர்கள் பெருமளவில் பாதுக்கப்பட்டுள்ளனர்.

வறட்சியால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படுமென்ற தமிழஅரசின் அறிவிப்பு விவசாயிகளுக்கு ஆறுதலை அளித்துள்ளது.

இருப்பினும் ஆலங்குடி பகுதியில் பெரும்பாலான கிராமங்களில் வறட்சியால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் பட்டியலில் பெயர் இல்லை.

ஆகையால், இது குறித்து தமிழகஅரசு வறட்சியால் பாதிப்புக்குள்ளான விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கவேண்டும் .இப்பகுதியையும் மத்திய அரசு ஆய்வுக்குழு ஆய்வு மேற்கொள்ள வேண்டுமெனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் :22.41 அடி**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 22.41 அடியாக இருந்ததுஅணைக்கு .

வினாடிக்கு91 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது அணையிலிருந்து வினாடிக்கு .496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரிக்கை**

பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டுமென, உற்பத்தியாளர்கள் தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டத்தில் உள்ள பாலையூர், தொண்டப்பாடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட கூட்டுறவு, தனியார் பால் உற்பத்தியாளர்கள் சார்பில் தமிழக முதல்வருக்கு அனுப்பிய கோரிக்கை மனு:

வேப்பந்தட்டை வட்டத்தில் உள்ள விவசாயிகள் பிரதான தொழிலாக கறவை மாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்தற்போது ., பால் லிட்டருக்கு கொள்முதல் விலையாக ரூ .18 முதல் ரூ .19 வரை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்நிலையில் விலைவாசி உயர்வால் பால் உற்பத்திக்கான செலவுத் தொகை பல மடங்கு அதிகரித்துள்ளதுஇதனால் ., கறவை மாடு வளர்க்கும் விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர்குறிப்பாக ., தற்போது ஏற்படும் கடும் வறட்சியால் கால்நடைகளுக்குத் தேவையான வைக்கோல் உள்ளிட்டவற்றுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது .இதனால் வைக்கோல் கட்டு ஒன்று ரூ .130, சோளப்பயிர் கட்டு ஒன்று ரூ .150-க்கு வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளதுஅதேபோல ., மாட்டுத் தீவனம் மற்றும் புண்ணாக்கு விலையும் பல மடங்கு உயர்ந்துள்ளது. எனவே, பால் கொள்முதல் விலையை உயர்த்தி, குறைந்தபட்சம் லிட்டர் ஒன்றுக்கு ரூ .30 வழங்க தமிழக முதல்வர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**அதிக இழப்புக்கு தாமத சாகுபடியே காரணம்திருவாரூர்/**

நெல் உற்பத்தியில் அதிக இழப்பு ஏற்பட தாமத சாகுபடியே காரணம் என வறட்சி பகுதிகளை பார்வையிட வந்த மத்தியக் குழுவிடம் விவசாயிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் வறட்சிப் பகுதிகளை ஆய்வு செய்ய வந்த நிபுணர் குழுவின் ஒரு பிரிவினர் மத்தியத் திட்டத் துறை ஆலோசகர் மானேஷ் சவுத்ரி தலைமையில் திருவாரூர் (வேளாண்மை) மாவட்டத்தில் முதல்முதலாக வடுவூர் .மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டனர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நிபுணர் குழுவினர் ஆய்வு செய்து விவசாயிகளிடம் வறட்சிக் குறித்து விளக்கம் கேட்டனர்.

"போதிய நீர் இல்லாததால், குறுவை, சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டதுபின்னர் கிடைத்த நீரை . கொண்டு நம்பிக்கையுடன் காலதாமதமாக சாகுபடியை தொடங்கியதால் சாகுபடி செய்த பயிர்களுக்கு போதிய தண்ணீர் கிடைக்கவில்லைஇதனால் ., பயிர்கள் கருகிவிட்டனதாமத . சாகுபடியால்தான் பெரிய அளவில் உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டது' என விவசாயிகள் தெரிவித்தனர்.

ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் சிநடராசன் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழ .க முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி ஆகியோர் கூறியது கடந்த :2011-12- ம் ஆண்டில் வடுவூர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் 2,637 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது, 2012-13-ல் 904 டன் கொள்முதல் செய்யப்பட்டது.

மாவட்டத்தில் கடந்த ஆண்டு மொத்தம் 6.65 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது நிகழாண்டு .2.69 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது . மாவட்டத்தில் சுமார்30 சதவீதம் நெல் கருக்காயாக மாறியுள்ளதுமாவட்டத்தில் பெரும்பாலான . .விவசாயம் நிலத்தடி நீர் பம்பு செட் மூலம் மேற்கொள்ளப்பட்டது கடந்த ஆண்டு 416 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டன நிகழாண்டு .356 நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது தற்போது .50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகின்றன என்றனர்.

விவசாயிகள் அதிருப்திபாண்டி வேப்பஞ்சேரி :யில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் விவசாயக் கருவிகளின் செயல் விளக்கம் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்த பின்னர் கால்நடை மருத்துவ முகாமை நிபுணர் குழுவினர் பார்வையிட்டனர்அப்போது ., விவசாயிகள் ஆண்டுதோறும் மத்தியக் குழுவினர் வருகின்றனர்ஆனால் ., எந்தவித பயனும் இல்லைசரியான முறையில் . .விவசாயிகளுக்கு நிவாரணம் பெற்று தருவதில்லை என்று கூறினர்

பின்னர் கள்ளிக்குடிகிராமத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை குழுவினர் பார்வையிட்டனர்அப்போது ., வறட்சி பாதித்த பகுதிகள் குறித்து வைக்கப்பட்டிருந்த படவிளக்கத்தையும் குழுவினர் பார்வையிட்டனர்.

ஏக்கருக்கு ரூ .15 ஆயிரம் வேண்டும்: அங்கு விவசாயிகள் தரப்பில் மன்னார்குடி எஸ்ரங்கநாதன் ., விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர்கள் பிமாசிலாமணி .எஸ்., ஜிசுந்தரமூர்த்தி ., சத்தியநாராயணா, நெடுவை ராஜதுரை, மருதவனம் ராமச்சந்திரன், கள்ளிக்குடி ஜி . பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் நிபுணர் குழுவிடம் கூறியது:

காவிரி பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்காவிரி மேலாண்மை வாரியம் அமைத்து ., வரும் ஆண்டு விவசாயத்துக்கு போதிய தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் .

விவசாயிகளின் அனைத்து கடன்களையும் நிபந்தனையின்றி தள்ளுபடி செய்ய வேண்டும் . .தமிழக அரசு அறிவித்த நிவாரணத் தொகை ஏக்கருக்கு ரூ15 ஆயிரம் முழுமையாக வழங்கப்படவில்லை என்பதை கருத்தில்கொண்டு, மத்திய அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட ஏக்கருக்கு ரூ .15 ஆயிரம் வழங்க வேண்டும்.

இதன் பின்னர், தமிழக அரசு சார்பில் விவசாயிகளுக்கு அமைத்து தரப்பட்ட பண்ணைக் குட்டைகளை அதிகாரிகள் பார்வையிட்டனர்நிறைவாக ., பாமணியில் ஆய்வு மேற்கொண்ட குழுவினர் மகளிர் சுய உதவிக் குழுவினர் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடல் நடத்தினர்.

ஆய்வுக் குழுவில் இடம் பெற்றிருந்த புகையிலை மேம்பாட்டு இயக்குநர் மனோகரன் (பொ) திருச்சி :அளித்த பேட்டி, தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் வறட்சியின் பாதிப்பால் நெற்பயிர்கள் மட்டுமன்றி, தென்னை, நிலக்கடலை உள்ளிட்ட பணப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதையும் குழுவினர் பார்வையிட்டோம்கடுமையான வறட்சியால் . கால்நடைகளுக்கு கூட தீவனம், குடிநீர் கிடைக்கவில்லைவறட்சியின் தன்மையை முழுமையாக . .இதுகுறித்து மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்புவோம் என்றார் மனோகரன் .உணர்ந்துள்ளோம் காளிராஜ் மகேஷ்குமார் .ஆய்வின்போது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் எஸ், வேளாண் இணை இயக்குநர் கணேசன், துணை இயக்குநர் மயில்வாகனன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெயலட்சுமி அம்பிகாபதி ஆகியோர் உடனிருந்தனர்.

தினமலர்

**கோழிப்பண்ணை அமைக்க தமிழக அரசு 25 சதவீதம் மானியம்**



தமிழகத்தில், கோழிப் பண்ணை இல்லாத பகுதிகளில், அவற்றை அதிக அளவில் அமைக்க, அரசு திட்டமிட்டுள்ளதுகுறிப்பாக ., 7 பின்தங்கிய பிராந்தியங்களில், கோழிப் பண்ணை தொகுப்புகளை உருவாக்க முடிவு செய்துள்ளது.

**திட்டச்செலவு:**இப்பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், தொழில் முனைவோர், சுயஉதவிக் குழுவினர் ஆகியோர், கோழிப் பண்ணை அமைப்பதை ஊக்குவிக்கும் வகையில், திட்டச் செலவில், 25 சதவீதம் மானியம் வழங்கப்படும்இத்துடன் ., அவர்களுக்கு, தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கியல் பல்கலைக்கழகம் மூலம், வர்த்தக ரீதியிலான கோழி வளர்ப்பு குறித்த, 5 நாள் பயிற்சியும் வழங்கப்படும்.

இந்த திட்டத்திற்காக, தமிழக அரசு, 22.35 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதுதற்போது., மத்திய அரசின் கோழிப் பண்ணை துணிகர முதலீட்டு நிதியம் .எப்.சி.வி.பி),), நபார்டு வங்கி வாயிலாக, கோழிப் பண்ணை அமைக்க விரும்பும் தனிப்பட்ட நபர்களுக்கு, 25 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறதுதிட்டச் செலவின் எஞ்சிய தொகையை ., வங்கிக் கடன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழக அரசு, அதன் கோழிப் பண்ணை தொகுப்பு திட்டத்தை, மத்திய அரசின் பி.எப்.சி.வி., அமைப்புடன் ஒருங்கிணைந்து செயல்படுத்த திட்டமிட்டுள்ளதுஇதன் மூலம்., தமிழகத்தின் பின் தங்கிய பகுதிகளில், கோழிப்பண்ணை அமைக்க விரும்புவோர், திட்டச் செலவில், மத்திய, மாநில அரசின் பங்கான, 50 சதவீத மானியத்தை பெறலாம் என்பது குறிப்பிடத்தக்கதுநடப்பு .

நிதியாண்டில், தமிழக கோழிப் பண்ணை துறையின் கடன் தகுதி, 1,330 கோடி ரூபாயாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது.
நாட்டின் மொத்த முட்டை உற்பத்தியில், தமிழகத்தின் பங்களிப்பு, 20 சதவீதமாக உள்ளது . இம்மாநிலத்தின் முட்டை உற்பத்தி, ஆண்டுக்கு, 2,000 கோடி என்ற அளவிலும், வர்த்தக மதிப்பு, 7,500 கோடி ரூபாயாகவும் உள்ளதுஇது., வரும் 2015ம் ஆண்டு, 9,000 கோடி ரூபாயாக உயரும் என, "அசோசெம்' அமைப்பு மதிப்பிட்டுள்ளதுகோழிப் பண்ணை விவசாயிகளில் பெரும்பாலோர்., மாதம், 10 ஆயிரம் முதல் 1 லட்சம் ரூபாய் வரை வருவாய் ஈட்டுகின்றனர்.
**நாமக்கல் மாவட்டம்:**தமிழகத்தில், நாமக்கல் மாவட்டம், முட்டை உற்பத்தியிலும், பல்லடம் பகுதி, பிராய்லர் கோழி உற்பத்தியிலும் முதலிடத்தில் உள்ளனமாநிலத்தில் ., கோழி வளர்ப்பு மற்றும் முட்டை உற்பத்தியை பரவலாக்க, தமிழக அரசின் கோழிப்பண்ணை தொகுப்பு திட்டம் உதவும் என, எதிர்பார்க்கப்படுகிறது.
**முட்டை உற்பத்தி:**தமிழகத்தில் கோழி மற்றும் முட்டை உற்பத்தி குறித்து, மத்திய அரசின் கால்நடை, பால் பண்ணை, மீன் வளர்ப்பு துறையின் வழிகாட்டுதலின் பேரில் ஆய்வு நடத்தப்பட்டதுஇந்த ஆய்வில்., 2011-12ம் நிதியாண்டில், தமிழகத்தில் நாட்டுக் @காழிகள் மூலம், 40.20 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளனஇதர கோழிகள் மூலம் ., 1,145 கோடி முட்டைகள் உற்பத்தியாகி உள்ளனஒட்டு மொத்த முட்டை உற்பத்தி ., முந்தைய நிதிஆண்டை விட, 2.94 சதவீதம் அதிகரித்துள்ளது.

**கோதுமை கொள்முதல் இலக்கு 3.30 கோடி டன்னாக குறைப்பு**



புதுடில்லி நடப்பு:2013-14ம் சந்தைப்படுத்தும் பருவத்தில், மத்திய அரசின் கோதுமை கொள்முதல், இலக்கு, 25 சதவீதம் குறைக்கப்பட்டு, 3.30 கோடி டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதுஇதனால்., மத்திய அரசுக்கு, 3,000 கோடி ரூபாய் மிச்சமாகும் என, உணவு அமைச்சகத்தை சேர்ந்த

உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். கோதுமை உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரித்ததால், சென்ற ஏப்ரலில் துவங்கிய, நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில், 4.41 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ய, மத்திய அரசு, இலக்கு நிர்ணயித்திருந்ததுஇது ., இதற்கு முந்தைய வேளாண் பருவத்தில், 3.81 கோடி டன்னாக இருந்ததுஇந்நிலையில்., மத்திய பிரதேசம் மற்றும் உத்தரபிரதேச மாநிலங்களில், தனியார் நிறுவனங்கள், விவசாயிகளிடமிருந்து, கோதுமை கொள்முதல் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்இதனால் ., நடப்பு சந்தைப் பருவத்தில், மத்திய அரசு, கோதுமை கொள்முதல் செய்யும் இலக்கை, 3.30 கோடி டன்னாக குறைத்துள்ளது இதன்படி, பஞ்சாப் மாநிலத்திலிருந்து, 1.10 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதுஇது தவிர ., அரியானா )70 லட்சம் டன்(, மத்திய பிரதேசம் )90 கோடி டன்(, உத்தர பிதேசம் )30 லட்சம் டன்) மற்றும் பீகார் (25 லட்சம் டன்ஆகிய ( மாநிலங்களிலிருந்தும் குறிப்பிடத்தக்க அளவிற்கு கோதுமை கொள்முதல் செய்ய .ஐ.சி.எப்) இந்திய உணவு கழகத்தின்.திட்டமிடப்பட்டுள்ளது,) புள்ளிவிவரத்தின்படி, மத்திய அரசு, இது வரையிலுமாக, குவிண்டால் ஒன்றுக்கு, 1,350 ரூபாய் குறைந்தபட்ச ஆதரவு விலையில், 2 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்துள்ளது. சென்ற ஏப்ரல் 1ம் தேதி நிலவரப்படி, பொதுத் துறையான எப்.ஐ.சி.,யின் கைவசம், 2.42 கோடி டன் கோதுமை கையிருப்பு உள்ளதுஇதையடுத்து ., நடப்பாண்டில், எப்.ஐ.சி., கிடங்குகளில், ஒட்டு மொத்த கோதுமை கையிருப்பு, 5.72 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது.

**வறட்சியால் பலரும் இடம் பெயரும் அவலம் மத்திய குழுவிடம் விவசாயிகள் குமுறல்**

ராமநாதபுரம்வறட்சியால் பிழைப்பு .குடிநீர் இல்லாததால் கால்நடைகளை பலர் விற்றுவிட்டனர்"": தேடி திருப்பூர், தூத்துக்குடி என வெளியூர்களுக்கு பலர் இடம்பெயர்த்துள்ளனர்," என , வறட்சி பகுதிகளை பார்வையிட்ட மத்திய குழுவினரிடம், ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் குமுறினர் .

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து19 ஆயிரத்து 308 எக்டேரில் நெல் விவசாயம் செய்யப்பட்டதுஇதில் ., ஒரு லட்சத்து 4,500 எக்டேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இதே போல் 19 ஆயிரத்து 150 எக்டேர் மிளகாய் விவசாயத்தில், கடலாடி தாலுகா எஸ் தரைக்குடியில் மட்டும்.2,966 எக்டேர் பாதிக்கப்பட்டுள்ளது .471 எக்டேர் கொத்தமல்லி பாதித்துள்ளதுஇப்பகுதிகளை மத்திய வ .ேளாண்மைத்துறை கூடுதல் செயலர் பிரேவேஷ் சர்மா தலைமையில் மத்திய குழு ஆய்வு மேற்கொண்டனர்சின்னஏர்வாடியில் கடல்நீரை குடிநீராக்கும் .

திட்டத்தை பார்வையிட வருவதாக தெரிவிக்கப்பட்டதால், ஏராளமானோர் திரண்டு மத்திய குழுவினரிடம் பிரச்னைகளை முறையிட காத்திருந்தனர் ஆனால் .குழு, சாயல்குடி தரைக்குடி சென்றதால் ஏமாற்றமடைந்தனர்தரைக்குடி வாலம்பட்டி.எஸ்., செவல்பட்டி கிராமங்களில் விவசாயிகளிடம் குடிநீர் பிரச்னை குறித்து கேட்டபோது, ""குடிநீர் இல்லாததால் கால்நடைகளை பலர் விற்றுவிட்டனர்வறட்சியால் பிழைப்பு தேடி திருப்பூர் ., தூத்துக்குடி என வெளியூர்களுக்கு பலர் இடம்பெயர்த்துள்ளனர்," என்றனர்விரைவில் நிவாரண தொகை கிடைக்கும்" .' என மத்திய குழு தெரிவித்தது.

**மழை தொடரவேண்டுமென விவசாயிகள் எதிர்பார்ப்பு திண்டுக்கல் மாவட்டத்தில் கோடை : உழவிற்கு நம்பிக்கை**

திண்டுக்கல்கோடை உழவிற்கான மழையை எதிர்பார்த:ு, ஏமாந்துபோயிருந்த விவசாயிகளுக்கு, தற்போது பெய்துள்ள மழை ஓரளவிற்கு நம்பிக்கையை ஏற்படுத்தி, விளைநிலத்தில் கவனம் செலுத்தும் நிலையை உருவாக்கியுள்ளது. திண்டுக்கல்லில் அவ்வப்போது இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்து வருகிறது . இடைவிடாமல் தொடர்ந்து பெய்யும் மழையினால் மண்ணும், பலரின் மனங்களும் குளிர்ந்தது . .விவசாயிகளை பொறுத்தவரை கோடை உழவு என்பது மிகவும் முக்கியமான பணியாகும் சித்திரை, வைகாசியில் கோடை உழவு செய்து, ஆனியில் நிலத்தை உலரவிட்டு, ஆடியில் விதைக்க வேண்டுமென்பது முன்னோர் எழுதி வைத்த அறிவுரை. இன்றளவும், விவசாயிகள் இந்த நடைமுறையைத்தான் கடைபிடித்து வருகின்றனர். இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் கோடை உழவு செய்ய முடியுமா என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டிருந்ததுஅப்படியே மழை பெய்தாலும் ., கலப்பை முழுமையாக நிலத்திற்குள் புதையும் வகையில் அதன் தாக்கம் இருக்க வேண்டுமென்பது விவசாயிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விதியாகும்தற்போது பெய்துள்ள மழை ., இந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்துள்ளது.

மொத்தத்தில், திண்டுக்கல் மாவட்டத்தில் பெய்யத்துவங்கியுள்ள கோடை மழை, ஓரளவிற்கு நிலத்தடி நீரை உயர்த்தி குடிநீர் பஞ்சத்தை தற்காலிகமாக தீர்த்து வைக்கும் என்பதோடு, விவசாயிகளுக்கும் வரப்பிரசாதமாக அமைந்திருப்பது அனைத்து தரப்பினர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**திருந்திய நெல் சாகுபடி முறையை விவசாயிகள் பின்பற்ற வேண்டும்வேளாண்துறை அறிவுரை :**

கும்பகோணம்திருந்திய நெல் சாகுபட" :ி முறையை விவசாயிகள் பின்பற்றி அதிக மகசூல் பெற வேண்டும்' என அத்தியூரில் நடந்த உழவர் பெருவிழாவில் வேளாண் துறையினர் தெரிவித்தனர்.

கும்பகோணம் அடுத்த அத்தியூரில் உழவர் பெருவிழா நடந்தது.விழாவிற்கு பஞ் ., மன்றத் தலைவர் நேரு தலைமை வகித்தார்ஒன்றிய பெருந்தலைவர் மக .ாலிங்கம் சிறப்புரையாற்றினார்வட்டார . .அட்மா திட்ட தலைவர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார் விழாவில், வேளாண் துணை இயக்குநர் கிருஷ்ணகுமார் பேசுகையில், ""வேளாண் துறையில் பல நவீன தொழில்நுட்பங்கள் கையாளப்பட்டு வருகிறதுஅதன்படி ., விவசாயிகளும் மேற்கொண்டால் அதிக மகசூல் எடுக்கலாம்.

ஒவ்வொரு நிலத்திற்கும் அதன் தன்மைக்கு ஏற்பட உரமிட வேண்டும்எனவே ., விவசாயிகள் தங்களுடைய நிலத்தின் தன்மையை தெரிந்து கொள்ள மண்மாதிரியை எடுக்க வேண்டும் . திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி அதிக மகசூல் பெற வேண்டும்," என்றார்.

இதேபோல், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி மற்றும் தீவனப்புல் வளர்த்தல் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

விழாவில், வேளாண் அலுவலர் செல்வமணி, துணை வேளாண் அலுவலர் மகாலிங்கம், வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு பேசினர்.

வேளாண் உதவி அலுவலர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

**அலட்சியம்வாழைக்கு நிவாரணம் கிடைப்பதில் சிக்கல்...வறட்சி பட்டியல் அனுப்ப அதிகாரிகள் !**

கரூர்வறட்சியல் ஏற்பட்ட வாழை பாதிப்பு குறித்த விபரபட்டியலை :, அரசுக்கு அனுப்புவதில் தோட்டக்கலை துறை அதிகாரிகள் அலட்சியம் காட்டியதால், கரூர் மாவட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை அடுத்தடுத்து பொய்த்ததாலும், காவிரியில் பாசனத்துக்கு கர்நாடகம் தண்ணீர் திறக்க மறுத்ததால், விவசாயம் சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டதுஇதையடுத்து மாவட்ட வாரியாக ., அமைச்சர்களை கொண்ட குழு வறட்சி பாதித்த பகுதிகளை பார்வையிட்டு, அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்தது.

இதனடிப்படையில் வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக் கலைத்துறை மூலம் வறட்சி பாதித்த பகுதிகள், வருவாய் கிராமம் வாரியாக கணக்கெடுக்கப்பட்டதுஇதில் ., 50 சதவீத பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் டெல்டா அல்லாத மாவட்டங்களில், 50 சதவீதத்துக்கும் மேல் நெல் உற்பத்தி பாதித்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 5,000 ரூபாய், பாசன ஆதாரமுள்ள நிலங்களில், 50 சதவீதத்துக்கு மேல் மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 4,000 ரூபாய், பாசன ஆதாரமற்ற நிலங்களில், 50 சதவீதத்துக்கு மேல் மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு, 3,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில், 4,237 ஹெக்டேர் நிலப்பரப்பில் வாழை சாகுபடி செய்யப்படுகிறதுஇதில் .

காவிரி ஆற்று பாசன பகுதியான கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய சுற்று வட்டார பகுதிகளில் பெருமளவில் பயிரிடப்படுகிறதுதற்போது பாசனத்துக்கு தண்ணீர் கிடைக்காததால் ., இப்பகுதியில் வாழைகள் கருகி விட்டன.
இதையடுத்து தமிழக நிதியமைச்சர் தலைமையிலான குழு, குளித்தலை அருகே நங்கவரம், மேட்டுமருதூர், கருங்காலபள்ளி இடங்களில் பகுதிகளில் பயிரிடப்பட்ட வாழைகளை ஆய்வு மேற்கொண்டார்முதல்வர் அறிவிப்பு பின் ., தங்களுக்கு வறட்சி நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், வாழை விவசாயிகள் ஆறுதலுடன் இருந்தனர்ஆனால் தோட்டக்கலை துறை . அதிகாரிகள், அரசுக்கு பட்டியல் அனுப்புவதில் அலட்சியம் காட்டியதால், இழப்பீடு பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.
இதுகுறித்து தோட்டக்கலைத்துறை ஊழியர் ஒருவர் கூறியதாவது:
டெல்டா விவசாயிகளுக்கு நெல் பயிரிகளுக்கு நிவாரணத்தொகை வழங்கப்பட்ட பின், மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பிற பயிர்களின் விபரங்களை, அரசு கேட்டதுஆனால் . தோட்டக்கலை துறை அதிகாரிகள், பணப்பயிர் என கூறி, வாழை பயிர் பாதிப்பு குறித்த விபரங்களை அனுப்பவில்லைஅமைச்சர் குழு ஆய்வு மேற்கொண்ட பின்னரும் ., அதிகாரிகள் வாழை பாதிப்பு குறித்து விபர பட்டியலை அனுப்புவதில் அலட்சியம் காட்டி உள்ளனர்.
சட்டசபையில் முதல்வர், ஏற்கனவே உள்ள பட்டியல் அடிப்படையில் வறட்சி நிவராணத் தொகையை அறிவித்து விட்டார்நமது மாவட்டத்தில் வாழைக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்த . பட்டியல் இல்லாததால், விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை அளிப்பதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது.
வாழை சாகுபடியில் ஏக்கருக்கு, ஒரு லட்சம் ரூபாய் வரை செலவு செய்து, உற்பத்தி பொருட்களை, இரண்டு லட்சம் ரூபாய் விற்பனை செய்ய முடியும்இதனால் ஏக்கருக்கு விவசாயிகளுக்கு . குறைந்தபட்சம், 75 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும்ஆனால் அரசு அறிவித்த இழப்பீடு . .தொகை மிகவும் குறைவு என புலம்பி வருகின்றனர்
தற்போது இந்த இழப்பீடு தொகை கூட கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.
இவ்வாறு அவர் கூறினார்.
தோட்டக்கலை துணை இயக்குனர் சதாசிவம் கூறியதாவது:
கடந்த ஃபிப்ரவரி மாதம் அனுப்பிய பட்டியல் அடிப்படையில் வறட்சி நிவரணம் அறிவிக்கப்பட்டு உள்ளதுதற்போது வாழை பாதிப்பு விபரம் பற்றி பட்டியல் தயாரிக்கப்பட்டு ., அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்மீண்டும் அரசு அறிவித்தால் ., வாழைக்கு இழப்பீடு தொகை கிடைக்கலாம்.
இவ்வாறு அவர் கூறினார்.

**பற்றாக்குறைபெரம்பலூரில் ம !ாட்டு தீவனம்பால் விலை உயர்த்த கோரிக்கை ...**

பெரம்பலூர்மாட்டுத்தீவனம் பற்றாக்குறையால் :, பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என, முதல்வர் ஜெயலலிதாவுக்கு, கூட்டுறவு மற்றும் தனியார் பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை மனு அனுப்பியுள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை, பாலையூர், தொண்டப்பாடி மற்றும் பல்வேறு ஊர்களைச் சேர்ந்த, நூறுக்கும் மேற்பட்ட கூட்டுறவு, தனியார் பால் உற்பத்தியாளர்கள் இணைந்து, தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளனர்:அதில் கூறியிருப்பதாவது .

வேப்பந்தட்டை தாலுகா பகுதியில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் கறவை மாடுகளை வளர்த்து, அதன் மூலம் கிடைக்க கூடிய வருவாயை கொண்டு வாழ்ந்து வருகின்றனர்தற்போது . பால் லிட்டர் ஒன்றுக்கு கொள்முதல் விலையாக,18 ரூபாய் முதல், 19 ரூபாய் வரை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது .இந்நிலையில் சமீபகாலமாக ஏற்பட்டு வரும் விலைவாசி உயர்வால், பால் உற்பத்திக்கான செலவு தொகை பல மடங்கு அதிகரித்துள்ளது.

இதனால் கறவை மாடுகள் வளர்க்கும் அனைத்து விவசாயிகளுக்கும் பெரும் நஷ்டம் ஏற்பட்டு வருகிறதுகுறிப்பாக தற்போது ஏற்பட்டு வரும் கடுமையான வறட்சியினால .◌, மாடுகளுக்கு பச்சை புல் மற்றும் தேவையான தண்ணீர் கிடைக்கவில்லைஇதனால் காய்ந்த வைக்கோல் புல் . கட்டு ஒன்றுக்கு, 130 ரூபாயும், சோளப்பயிர் கட்டு ஒன்றுக்கு, 150 ரூபாயும் கொடுத்து, விலைக்கு வாங்கி மாடுகளுக்கு போட்டு வளர்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாடுகளுக்கு போடக்கூடிய தீவனம் மற்றும் புண்ணாக்குகளின் விலையும் பல மடங்கு உயர்ந்துள்ளதுவெயில் காலம் என்பதால் ., மாடுகளை குளுப்பாட்ட தண்ணீர் கிடைக்காமல் பெரும் அவதிபட்டு வருகிறோம்இன்றைய சூழ்நிலையில் சாதாரண கூலி வேலைக்கு . செல்பவர்கள் கூட, நாள் ஒன்றுக்கு, 200 ரூபாய் முதல், 500 ரூபாய் வரை சம்பாதிக்கின்றனர். ஆனால் லட்கணக்கான ரூபாய் முதலீடு செய்து, கறவை மாடுகளை வாங்கி, விவசாய நிலங்களில் பணப்பயிர் செய்யாமல், மாடுகளுக்கு தீவனப்பயிர் செய்து, அதிகாலை முதல், இரவு வரை, மாடுகளை பராமரித்து, மாட்டு சாணங்களை அள்ளிக்கொட்டி, பட்டிகளை சுத்தப்படுத்தி அளவுக்கதிகமாக கஷ்டப்படும் விவசாயிகள், பாலை கறந்து விற்பதால், நாள் ஒன்றுக்கு, 200 ரூபாய் கூட கிடைப்பதில்லை.

"உழுதவன் கணக்கு பார்த்தால் ஒரு படி கூட மிஞ்சாது' என்பார்கள்அதே நிலைதான் தற்போது . இதே நிலை நீடி .கறவை மாடுகள் வளர்க்கும் விவசாயிகளின் நிலைத்தால் விவசாயிகள் இத்தொழிலை கைவிடும் சூழ்நிலை உருவாகும்.

தற்போது குடிதண்ணீர் ஒருலிட்டர், 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறதுஆனால் பாலுக்கு . தண்ணீரைவிட குறைவான விலை வழங்கப்படுவது என்பது, விவசாயிகளுக்கு இழைக்கப்படும் மாபெரும் துரோகம் ஆகும்.

எனவே ஊருக்கெல்லாம் பால் வழங்கும் விவசாயிகளின் வயிற்றில் பாலைவார்க்கும் வகையில்,

தமிழக முதல்வர் பால் கொள்முதல் விலையை, குறைந்தபட்சம் லிட்டர் ஒன்றுக்கு, 30 ரூபாயாக ஆக உயர்த்தி அறிவிக்க வேண்டும்.

**ஜெனரேட்டர் மூலம் கரும்பு பயிருக்குதண்ணீர் பாய்ச்சும் விவசாயிகள்**

தியாகதுருகம்மின்வெட்டு பிரச்னையால் டிராக்டரில் ஜெனரேட்டரை இணைத்து பாசன : மோட்டார் மூலம் நீர் இறைத்து கரும்பு பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் தீவிர முயற்சி பருவமழை கடந்த ஆண்டு ஏமாற்றியதால் கள்ளக்குறிச்சி.மேற்கொண்டு வருகின்றனர், தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் நீர்நிலைகள் வறண்டு கிடக்கிறதுநிலத்தடி நீர்மட்டம் . சாகுபடி செய்த கரும்பு .குறைந்து கிணற்று பாசன விவசாயிகள் கடுமையாக பாதித்துள்ளனர் இந்நிலையில் மின்வெட்டு பிரச்னை பாடாய் .பயிர்களை காப்பாற்ற போராடி வருகின்றனர் தினம்.படுத்தி வருகிறது3 மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் உள்ளதுபல நாட்களில் . இதை விடவும் குறைந்த நேரமே மின்சாரம் இருப்பதால் கிடைக்கும் நீரை பயிர்களுக்கு பாய்ச்ச .முடியாமல் கரும்பு பயிர்கள் கருகி வருகின்றன

டிராக்டரில் ஜெனரேட்டர் இதற்கு தற்காலிக தீர்வாக ஜெனரேட்டரை வாடகைக்கு எடுத்து பாசன மோட்டாரை இயக்கி நீர்பாய்ச்சும் பரிதாப நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்சில விவசாயிகள் டிராக்டருடன் . ஜெரேட் டரை இணைத்து அதிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை கொண்டு பாசனமோட்டாரை .இயக்கி கிணற்று நீரை இறைத்து வாடும் பயிர்களை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் இதன்மூலம் அரை .ஒரு லிட்டர் டீசலுக்கு ஒன்றரை மணிநேரம் ஜெனரேட்டர் இயங் குகிறது கோடை வெயிலால் நிலம் வறண்டு கிடப்பதால் அதிக .ஏக்கர் நிலத்திற்கு நீர் பாய்ச்ச முடிகிறது இது கரும்பு பயிரிட்ட விவசாயிகளுக்கு கூடுதல் செலவீனங்களை .நீரை பாய்ச்சவேண்டியுள்ளது ஏற்படுத்தியுள்ளதால் எதிர்பார்த்த பயன் கிடைக்குமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

**பெருவளூரில் உழவர் பெருவிழா**

அவலூர்பேட்டைமேல்மலையனூர் .மேல்மலையனூர் ஒன்றியத்தில் உழவர் பெருவிழா நடந்தது: ஒன்றியம் பெருவளூர், சொக்கப்பள்ளம், பாப்பாந்தாங்கல் கிராமங்களில் வேளாண் துறை சார்பில் உழவர் பெருவிழா நடந்ததுவேளாண் உதவி .ஊராட்சி தலைவர் ராதிகா முன்னிலை வகித்தார். இயக்குநர் பழனி வேலு தலைமை தாங்கி அரசின் மானிய திட்டங்கள், தொழில் நுட்பங்கள், நவீன இயந்திரங்களின் பயன்பாடு குறித்து விளக்கினார்கறவை மாடுகளுக்கு கருத்தரிப்பு பரிசோதனை . குறித்து கால்நடை டாக்டர் திருமலை தாஸ் பேசினார்பட்டு வளர்ச்சி ., பொறியியல் துறை உள்ளிட்ட அதிகாரிகள் , உதவி வேளாண் அலுவலர்கள் விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

**பள்ளிப்புதுப்பட்டில் உழவர் பெருவிழா**

கண்டமங்கலம் கண்டமங்கலம் ஒன்றியம் பள்ளிப் புதுப்பட்டு ஊராட்சியில் உழவர்:பெருவிழா நடந்ததுஒன்றிய .விழாவிற்கு ஊராட்சி தலைவர் கனிமொழி ஜெயராம் தலைமை தாங்கினார்.

கவுன்சிலர் பொன்மலர்ராஜா, ஊராட்சி துணை தலைவர் கவிதா சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தார்வேளாண்மை உதவி இயக்குனர் சம்பத்.ஊராட்சி செயலர் அருணா வரவேற்றார் ., வேளாண்மை அலுவலர்கள் அரிகிருஷ்ணன், கவுஸ், விதை சான்று உதவி இயக்குனர் வேலாயுதம், ஆத்மா திட்ட வட்டார தொழில்நுட்ப அலுவலர் மஞ்சு, உதவி விதை அலுவலர் தென்னரசு, விதை சான்று அலுவலர் சரவணன் ஆகியோர் வேளாண்துறையின் திட்டங்கள் குறித்து சிறப்புரையாற்றினர்ஒன்றிய சேர்மன் சர்மிளாதேவி நெடுஞ்செழ.ியன், பி.ஓ.டி., கலியமூர்த்தி, ஒன்றிய அ.க.மு .தி., செயலாளர் ராமதாஸ், மாவட்ட பேரவை தலைவர் நெடுஞ்செழியன் ஆகியோர், விவசாயிகளுக்கு வேளாண் உபகரணங்களை வழங்கினர்முன்னதாக . முகாமிற்கான ஏற்பாடு .வேளாண்மை திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடந்தது களை உதவி வேளாண் அலுவலர்கள் அந்தோணி சாமி, ராதிகா, ரமாதேவி, சதஸ்ரீ, விமலா ஆகியோர் செய்திருந்தனர்.வார்டு உறுப்பினர் அன்பழகன் நன்றி கூறினார் .

**கோட்டக்குப்பத்தில் உழவர் பெருவிழா**

வானுர்வானூர் தாலுகா கோட்டக்குப்பத்தில் விவசாயிகளுக்கு உழவர் பெருவிழா : வானூர் வேளாண்.நடந்ததுமை உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார் தலைமை தாங்கினார் . தாசில்தார் .கோட்டக்குப்பம் பேரூராட்சி தலைவர் ரபியத்துல் பஷிரியா வரவேற்றார் குமாரபாலன், உழவர் ஆர்வலர் குழு தலைவர் கணபதி முன்னிலை வகித்தனர்வானூர் ஒன்றிய . சேர்மன் சிவா கலந்துகொண்டு பாரம்பரிய பயிர்கள், பாரம்பரிய உணவுகள் குறித்து பேசினார் . துணை சேர்மன் சாமிநாதன், பேரூராட்சி அ.க.மு.தி., நகர செயலாளர் கணேசன், நெசல் ஊராட்சி தலைவர் கோவிந்தன், ஒன்றிய கவுன்சிலர்கள் அங்கையர்கண்ணி, முருகன், வேளாண்மை அலுவலர் ஆரோக்கியராஜ், அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் நரசிம்மராஜ், உதவி வேளாண்மை அலுவலர்கள் மோகன்குமார், சக்திவேல், செந்தில்குமார், வித்யாவதி மற்றும் விஜயலட்சுமி உள்பட பலர் கலந்துக் கொண்டனர்நிகழ்ச்சியில்., தோட்டக்கலைத் துறை சார்பில் தானே பாதிப்புக்குள்ளான 252 முந்திரி சாகுபடி விவசாயிகளுக்கு மானியத்தில் பயிறுவகை சிறுதளைகள் வழங்கப்பட்டது.

**உழவர் மன்றங்கள் திறப்பு**

திண்டிவனம்அடசல்.மரக்காணம் ஒன்றியத்தில் உழவர் மன்றங்கள் துவக்கப்பட்டது:, புதுப்பாக்கம், ஊரணி, ஏந்தூர், வன்னிப்பேர், வைடப்பாக்கம் , நகர், வடக்கோட்டிப்பாக்கம் ஆகிய பகுதிகளில் உழவர் மன்றம் துவக்கப்பட்டது ஊராட்சி.தலைவர்கள் செந்தில்குமார், குணசேகரன், சடகோபன் ஆகியோர் தலைமை தாங்கினர்நபார்டு வங்கி மாவட்ட மேலாண்மை அலுவலர் . விக்ரமன், உழவர் மன்றங்களை திறந்து வைத்தார்.

**கிராமங்களில் உழவர் பெருவிழா**

தலைவாசல்தலைவாசல் அருகே :, வேப்பம்பூண்டி, தேவியாக்குறிச்சி, மணிவிழுந்தான் கிராமங்களில், வேளாண்த்துறை சார்பில், உழவர் பெருவிழா நடந்தது. இதில், வேளாண்த்துறை மானிய திட்டங்கள், மண் மாதிரி சேகரித்தல், தோட்டக்கலை, கால்நடைத்துறையின் திட்ட பயன்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டதுதொடர்ந்து ., பாரம்பரியமிக்க பொருட்களின் பயன்பாடு குறித்து, விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதில், பஞ்சாயத்து தலைவர்கள் வேப்பம்பூண்டி பாஸ்கரன், தேவியாக்குறிச்சி அங்கம்மாள், மணிவிழுந்தான் உதயகுமார், யூனியன் துணை சேர்மன் ராணி, ஒன்றிய கவுன்சிலர்கள் ஜோதிமணி, துரைசாமி, வேளாண் உதவி இயக்குனர் ஜானகி (பொறுப்பு), தோட்டக் கலை உதவி இயக்குனர் ராஜன், கால்நடை மருத்துவர் தேவேந்திரன், வேளாண் அலுவலர்கள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்புக்கு மானியம் வழங்கல்**

தர்மபுரிதேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில் பல்நோக்கு : பண்ணை குட்டைகள் அமைத்து மீன் வளர்க்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.
கலெக்டர் லில்லி வெளியிட்ட அறிக்கை:
தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில் பல்நோக்கு பண்ணைக்குட்டைகள், 25 எண்ணிக்கை, விவசாயிகளது நிலத்தில், இரண்டு ஆயிரத்து, 500 சதர மீட்டர் பரப்பில் மஹாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் வெட்டப்பட்டு, அதில், மீன் வளர்ப்பு மேற்கொள்ள மீன் குஞ்சுகள் மற்றும் மீன் தீவனம் வாங்க, 50 சதவீதம் மானிய தொகையாக, 23 ஆயிரம் ரூபாய் முதலாம் ஆண்டுக்கு மீன் வளர்ப்பு துறையால் வழங்கப்படுகிறது.
இத்திட்டத்தின் கீழ் வெட்டப்படும் பண்ணை குட்டைகள் அமையும் நிலம் களிமண் பாங்காகவும், நீர் ஆதாரம் கொண்டதாகவும் இருத்தல் அவசியம், பல்நோக்கு பண்ணை குட்டைகளில், இரண்டு ஆயிரத்து, 500 எண்ணிக்கை நன்கு வளர்ச்சியடைந்த கட்லா, ரோகு, மிர்கால், புல்கெண்டை மற்றும் சாதா கெண்டை இன மீன் குஞ்சுகள் இருப்பு செய்து, எட்டு மாத வளர்ப்பில் ஆயிரம் கிலோ மீன் உற்பத்தி செய்யலாம்.
தேர்வு செய்யப்படும் விவசாயிகளுக்கு மீன் வளர்ப்பு குறித்து இரண்டு நாட்கள் பயிற்சி அளிக்கப்படும் மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ள நில நீர் வசதி கொண்ட .சிறு, குறு மற்றுறம் தாழ்த்தப்பட்ட பழங்குடியின விவசாயிகளுக்கு மட்டும் உரிய ஆவணங்களுடன் கிருஷ்ணகிரி உள்நாட்டு மீன்கள், உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகி பயன் பெற்று கொள்ளலாம். மேலும் விபரங்கள் பெற விரும்புவோர், 04343 - 235745, மொபைல்ஃபோன் எண் 94430 79167

ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**குளிர்பதன கிடங்கு அமைக்கும் பணி தீவிரம் கோபி விவசாயிகள் மகிழ்ச்சி**

கோபிசெட்டிபாளையம்கோபியில் நான்கு கோடி ரூபாய் மதிப்பீட்டில் :, குளிர்பதன கிடங்கு அமைக்கும் பணி மும்முரமாக நடக்கிறது.
கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி, எல்.பி.பி., பாசன பகுதிகளில் பல ஆண்டாக நெல், கரும்பு, வாழை, மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறதுவிவசாய கூலி ஆட்கள் . பற்றாக்குறை காரணமாக, மாற்று பயிரான மல்பெரி, மரவள்ளி கிழங்கு, சேனை கிழங்கு, தோட்டப்பயிர்களாக வெண்டைக்காய், கத்தரி மற்றும் பூக்கள் வகைகளான மல்லிகை, சம்பங்கி பூ மற்றும் சிவப்பு சாமந்திகளை அதிகளவில் விவசாயிகள் பயிரிட துவங்கினர்கோபி பகுதிகளில் . இருந்து, கோவை, சேலம், நாமக்கல், திருப்பூர், கர்நாடகா மற்றும் கேரளா போன்ற மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.
ஒவ்வொரு ஆண்டும் விளைபொருட்கள் சீஸன் நேரத்தில், விலை குறைந்து விடுவதால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்எனவே ., கோபி பகுதியில் குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர்முன்னாள் அமைச்சர் . செங்கோட்டையன், வேளாண்மை துறை அமைச்சராக இருந்தபோது, கோபியில் குளிர்பதன கிடங்கு அமைப்பதற்கான நடவடிக்கை எடுத்தார்.
மானிய கோரிக்கையின்போது, கோபியில் நான்கு கோடி ரூபாய் மதிப்பீட்டில் குளிர்பதன கிடங்கு அமைக்கப்படும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்சென்ற ஆண்டு மார்ச் மாதம் ., கான்ஃபரன்ஸ் மூலம் பணியை துவக்கி வைத்தார்.
வேளாண் விற்பனை சங்கத்தின் சார்பில், அளுக்குளி பஞ்சாயத்து பிள்ளையார்கோவில் துறையில், மூன்றரை ஏக்கர் நிலம் தேர்வு, அதற்கான பணிகள் துவங்கப்பட்டதுகுளிர்பதன கிடங்கு . அமையும் இடம், வருவாய் துறைக்கு சொந்தமானது என்பதால் நில மதிப்பீட்டின் படி, வேளாண் விற்பனை சங்கம், வருவாய் துறைக்கு, 30 லட்ச ரூபாய் செலுத்தாததால் பணி கிடப்பில் போடப்பட்டது.
இந்நிலையில், வருவாய் துறைக்கு செலுத்த வேண்டிய, 30 லட்சம் ரூபாயை வேளாண் விற்பனை சங்கம் செலுத்தியதால், பணிகள் துவங்கியது .15 கடைகள், 100 மெட்ரிக் டன் விளை பொருட்கள் வைக்க இரண்டு குடோன்கள், ஒரு ஆஃபீஸ் ஆகியவை கட்டும் பணி தீவிரமாக நடந்து வருகிறது . .சில மாதங்களில் பணி நிறைவடையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்

**ஜூலை மாதத்துக்குள் முடிக்க உத்தரவு ரூ.7.8 கோடியில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

ஈரோடு :ஈரோடு மாவட்டத்தில், 7.8 கோடி ரூபாயில் செயல்படுத்தப்பட்டு வரும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை, வரும் ஜூலை மாதத்துக்குள் முடிக்க உயர் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில், பவானி, அந்தியூர், அம்மாபேட்டை, பெருந்துறை, சென்னிமலை, நம்பியூர், பவானிசாகர், சத்தியமங்கலம், தாளவாடி ஆகிய ஒன்பது ஒன்றியங்கள், அடிக்கடி வறட்சியின் பிடியில் சிக்குகிறது.

இப்பகுதியில், மானவாரி பயிர்களான தீவனச்சோளம், ராகி, நிலக்கடலை, எள், ஆமணக்கு, துவரை, பாசிப்பயிறு, தட்டைப்பயிறு, மரவள்ளிக்கிழங்கு ஆகியவை பயிரிடப்படுகிறது. குறைவான மழையை விவசாயிகள் நம்பி இருப்பதால், மத்திய, மாநில அரசுகள் சார்பில், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம், திருத்தியமைக்கப்பட்ட நவப்ரா திட்டம், தொகுப்பு மேம்பாட்டு திட்டங்கள் ஆகியவை செயல்படுத்தப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில், நீர்வடிப்பகுதிகள் அடையாளங்கள் காணப்பட்டு, கடந்த, 2005-06ம் ஆண்டில், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின்படி, கோடை உழவு செய்தல், மண்வரப்பு ஏற்படுத்துதல், பண்ணைக் குட்டை அமைத்தல், உதிரிக்கல் மற்றும் கம்பிவலை தடுப்பணை அமைத்தல், தடுப்பணைகள் அமைத்தல், பண்ணை உற்பத்தித் திட்டங்களை மேம்படுத்துதல் ஆகியன செயல்படுத்தப்படுகிறது. இந்தாண்டு மார்ச் மாதத்துக்குள், இத்திட்டத்தை முடிக்க வேண்டும்ஆனால் ., ஈரோடு பகுதியில், சில இடங்களில் இத்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளதுபெருந்துறை ஒன்றியத்தில் எட்டு . கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, 1.8 கோடி ரூபாய், சத்தியமங்கலம் ஒன்றியத்தில் பத்து கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, மூன்று கோடி ரூபாய், அந்தியூர் ஒன்றியத்தில் பத்து கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, மூன்று கோடி ரூபாய் என மொத்தம், 7.8 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடந்து வருகிறது.

கடந்த மார்ச் மாதத்துடன் முடிக்க வேண்டிய பணிகள், இன்னும் நிறைவு செய்யப்படாமல் உள்ளதுஎனவே ., வரும் ஜூலை மாதத்துக்குள், ஒதுக்கப்பட்ட திட்ட பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இதுகுறித்து நீர்வடிப்பகுதி திட்ட அதிகாரிகள் கூறியதாவது:
வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளை, ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அப்பகுதி மக்களை ஒருங்கிணைத்து ஒரு குழு அமைத்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிர்ணயிக்கப்பட்ட தேதியில் பணிகள் நிறைவு பெறாததால், வரும் ஜூலை மாதத்துக்குள் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

**தோட்டத்தை நாசம் செய்த யானைகள் சத்தியமங்கலம் அருகே பரபரப்பு**

சத்தியமங்கலம்சத்தியமங்கலம் அருகே கிராமத்துக்குள் புகுந்த நான்கு ஆண் யானைகள் :, விவசாய பயிரை துவம்சம் செய்ததுபத்து மணி நேரம் போராடி ., வனத்துறையினர் காட்டுக்குள் விரட்டினர்.
கோவை மாவட்டம் சிறுமுகை வனப்பகுதியில் இருந்து, ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வனக்கோட்டத்துக்கு உட்பட்ட விளாமுண்டி வனத்துக்கு இடம்பெயர்ந்த நான்கு ஆண் யானைகள், பவானிசாகர், புன்செய்புளியம்பட்டி கிராமத்துக்குள் புகுவதும், பயிர்களை நாசம் செய்வதும் வாடிக்கையாக உள்ளது.
நேற்று முன்தினம் இரவு விளாமுண்டி வனப்பகுதியில் இருந்து வெளியேறிய யானைகள் கூட்டம், சத்தியமங்கலம் அடுத்த உக்கரம், நாகரனை ஆகிய கிராமங்கள் வழியாக மோடர்பாளையம் சென்றதுஅங்கு தெற்கு தோட்டத்தை சேர்ந்த விவசாயி சாமிக்கவுண்டரின் தோட்டத்துக்குள் . புகுந்த யானைகள் கூட்டம், சோளப்பயிரை நாசம் செய்தது. தோட்டத்துக்குள் புகுந்த யானைகளை விரட்ட,பொதுமக்கள் சத்தமிட்டனர்யானைகள் . நகராததால், வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சத்தியமங்கலம் மாவட்ட வனஅலுவலர் ராஜ்குமார் உத்தரவின்பேரில், பவானிசாகர் ரேஞ்சர் பெர்னார்ட் தலைமையிலான வனத்துறையினர், சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். வனத்துறையினர் பல மணி நேரம் போராடியும், யானைகளை தோட்டத்துக்குள் இருந்து விரட்ட முடியவில்லைஎனவே ., வனத்துறையினர், பட்டாசுகளை வெடித்து யானைகளை விரட்ட முயற்சித்தனர்.
பட்டாசுகள் வெடித்ததால், தோட்டத்தில் இருந்து யானைகள் மெதுவாக நகர ஆரம்பித்தது . தொடர்ந்து, பட்டாசுகளை வெடித்த வனத்துறையினர், விளாமுண்டி வனப்பகுதியை நோக்கி யானைகளை விரட்டினர்பத்து மணி நேர போராட .ுடத்துக்கு பின், யானைகள் வனப்பகுதிக்குள் சென்றதால், விவசாயிகள் நிம்மதி அடைந்தனர்.
இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:
கடந்த இரண்டு ஆண்டாக, இந்த நான்கு யானைகளின் தொந்தரவு உள்ளதுஅடிக்கடி ஊருக்குள் . புகும் யானைகள், தோட்டங்களை நாசம் செய்கிறதுஇந்த நான்கு யான .ைகளால், அடிக்கடி பாதிப்பு ஏற்படுகிறதுஎனவே ., வனப்பகுதியில் இருந்து யானைகள் வெளியேற முடியாதபடி, வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**நீர் நிர்வாகத்தில் பொதுப்பணித்துறை குளறுபடி கீழ்பவானி விவசாய சங்கம் குற்றச்சாட்டு**

ஈரோடுநீர் நிர்வாகத்தில் பொதுப்பணித்த :ுறை அதிகாரிகள் குளறுபடி செய்வதாக, கீழ்பவானி விவசாய சங்க தலைவர் நல்லசாமி குற்றம் சாட்டினார்.
கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கத்தின் தலைவர் நல்லசாமி, நேற்று நிருபர்களிடம்

கூறியதாவது:

காவிரித் தீர்ப்பின்படி, காவிரியின் ஓராண்டு சராசரி நீர்வளம், 740 டி.சி.எம்., தமிழ்நாடு, 419 டி.சி.எம்., கர்நாடகம், 270 டி.சி.எம்., கேரளம், 14 டி.சி.எம்., புதுச்சேரி, ஏழு டி.சி.எம்., என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காவிரி வடிநிலத்தில் இருக்கும், கீழ்பவானி அணை நீரில் இருந்து, கீழ்பவானி பாசனத்துக்கு, 28 டி.சி.எம்., பழைய பவானி பாசனத்துக்கு, 8.2 டி.சி.எம்., என தீர்ப்பில் வரையறை உள்ளது . கீழ்பவானி அணைக்கு ஆண்டுக்கு, 56 டி.சி.எம்., தண்ணீர் வருகிறதுஆனால் ., நடப்பு ஆண்டு வறட்சி நிலவுவதால், 23 டி.சி.எம்., தண்ணீர் மட்டுமே வந்துள்ளது.

தீர்ப்பின் அடிப்படையில், கீழ்பவானிக்கு, 16 டி.சி.எம்.,யாக குறைத்து வழங்கி இருக்க வேண்டும் . ஆனால், 10 டி.சி.எம்., மட்டுமே வழங்கப்பட்டதுஆனால் ., பழைய பவானி பாசனத்துக்கு, 4 டி.சி.எம்.,க்கு பதில், 12 டி.சி.எம்., தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது.

காவிரித் தீர்ப்பு, அரசாணை, விதிமுறை என எதையும் நீர் நிர்வாகத்தில் பொதுப்பணித் துறை அதிகாரிகள் கடைபிடிக்கவில்லைஇதற்கிடையே ., தடப்பள்ளிஅரக்கன்கோட்டை பாசனத்துக்கு - உயிர்நீர் என்ற பெயரில், கடந்த ஏப்ரல் மாதம், 29ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இது, பொதுப்பணித் துறை அதிகாரிகளின் உச்சக்கட்ட குளருபடிபவானி ஆறு மற்றும் பழைய . பவானி பாசனக்கால்வாய் பகுதியில் இருக்கும், ஆலை நிர்வாகங்களின் வழிகாட்டுதலின் பேரில், நீர் நிர்வாகத்தை பொதுப்பணித்துறை அதிகாரிகள் கடைபிடிக்கின்றனர்.

காவிரித் தீர்ப்பை நடைமுறைப்படுத்தாததால், கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கத்தின் சார்பில், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடிவு செய்துள்ளோம், என்றார்.

கீழ்பவானி விவசாயிகள் சங்க செயலாளர்கள் தங்கராசு, கோபிநாத், தமிழ்நாடு கள் இயக்க மாநில அமைப்பாளர் ராமசாமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் ராமசாமி உட்பட பலர் உடனிருந்தனர்.

**வேளாண் பொருட்கள் விழிப்புணர்வு பேரணி**

சென்னிமலைசென :ினிமலையில் வேளாண் பொருட்களின் மதிப்பை வெளிப்படுத்தும் வகையில், வேளாண்மை துறை சார்பாக நடந்த விழிப்புணர்வு பேரணியில், பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

சென்னிமலை காமராஜ் நகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் அருகே, வேளாண்துறை சார்பில் வேளாண் பொருட்கள் விழிப்புணர்வு பேரணி நடந்ததுடவுன்பஞ்சாயத்து தலைவர் . வேளாண்மை உதவி இயக்குனர் வாசுதேவன் .சண்முகசுந்தரம் தலைமை வகித்தார், ஊராட்சி ஒன்றிய துணைத்தலைவர் துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய பஞ்சாயத்து தலைவர் கருப்புசாமி, பேரணியை துவக்கி வைத்தார்.

பாரம்பரிய பொருட்களான இளநீர், சீகைக்காய் உள்ளிட்ட இயற்கை வேளாண் பொருட்களின் பயன்பாடுகளை விளக்கும் வாசகங்கள் அடங்கிய பேனரை, மாணவ, மாணவிகள் ஏந்தி சென்றனர்.
காங்கயம் ரோடு, பஸ் நிலையம் உட்பட சென்னிமலை நகரின் முக்கிய வீதிகளின் வழியே வந்த பேரணி, கமராஜ்நகர் பள்ளியில் நிறைவடைந்தது.
வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை, கால்நடைத்துறை உட்பட பல்வேறு துறையினர் கலந்து கொண்டனர்வேளாண்மை அதிகாரி ராஜாத்தி ., துணை வேளாண்மை அதிகாரி தங்கவேல், கார்த்திகேயன் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**மத்தியக்குழுவினர் நேரில் ஆய்வு திருவாரூர் விவசாயிகள் கண்ணீர்**

திருவாரூர்வறட்சிப் பகுதிகளை பார்வையிட வந்த மத்தியக்குழுவினரிடம் :, திருவாரூர் மாவட்ட விவசாயிகள் கண்ணீருடன் இழப்புகளை எடுத்து கூறினர்.
திருவாரூர் மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகளை, மத்திய அரசின் திட்டங்கள் துறை துணை ஆலோசகர் மானேஷ் சவுத்ரி தலைமையிலான மத்தியக் குழுவினர், நேற்று மாலை, 4.30 மணிக்கு, திருவாரூர் மாவட்ட எல்லையான வடுவூருக்கு வந்தனர்அங்கு செயல்படும் அரசின் நேரடி நெல் . .கொள்முதல் நிலையத்தை பார்வையிட்டனர்
அப்போது, கலெக்டர் நடராஜன், "கடந்தாண்டு மாவட்டத்தில், 6.65 லட்சம் மெட்ரிக்., டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டதாகவும், நடப்பாண்டு வறட்சியின் காரணமாக, 2.35 லட்சம் மெட்ரிக்., டன் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்பட்டது' என்று மத்திய குழுவினரிடம் புள்ளி விவரத்துடன் விளக்கினார்.
நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகள் இல்லாமல் காலியாக கிடந்த இடத்தை மத்தியக்குழுவினர் பார்வையிட்டனர்அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் ., "குறுவை சாகுபடி முற்றிலுமாக இல்லைதாமதமாக கிடைத்த தண்ணீரை வைத்து ஓரளவு சம்பா சாகுபடி . அதுவும் .செய்திருந்தோம், உரிய நேரத்தில் தண்ணீர் கிடைக்காமல் கருகிவிட்டது' என்று மத்தியக்குழுவினரிடம் கண்ணீர் மல்க கூறினர்.
மத்தியக்குழுவில் இடம்பெற்றுள்ள புகையிலை கழக வளர்ச்சி வாரிய இயக்குனர் மனோகரன், ""உங்களது கோரிக்கைகளை மத்திய அரசிடம் எடுத்துக்கூறுவோம்," என்றார்தொடர்ந்து ., முத்துப்பேட்டை வழியாக, பாண்டி என்ற இடத்துக்கு மத்தியக்குழுவினர் சென்றனர்அங் .கு, வேளாண்துறை மூலம் நடக்கும் உழவர் பெருவிழாவை பார்வையிட்டு, அங்கிருந்த விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தனர்.
கல்லக்குடி என்ற இடத்தில், 100 நாள் வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த பண்ணைக்குட்டைகளை பார்வையிட்டனர்சிங்களாந்தி என்ற இடத்தில் வற .ட்சியின் காரணமாக

பகுதி முழுவதும் குடிநீருக்கு மக்கள் அல்லல்படுவதால், வெளியூரிலிருந்து லாரிகள் மூலம் குடிநீர் கொண்டு வரப்பட்டு, மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் ஏற்றப்படுவதை பார்வையிட்டனர்.

**உழவர் பெருவிழா**

வேதாரண்யம் தாணிக்கோட்டகத்தில் நடந்த உழவர் :பெருவிழாவில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.
வேதாரண்யம் அடுத்த தாணிக்கோட்டகத்தில் வேளாண்துறை சார்பில் உழவர் பெருவிழா நடந்ததுஇதில் ., வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரகாசன் தலைமை வகித்தார்துணை . இந்நிகழ்ச்சியில் தோட்டக்கலைத்துறை .இயக்குனர் ராமதிலகம் வரவேற்றார் உதவி அலுவலர் வைரவமூர்த்தி, நாகை பொறியியல்துறை அலுவலர் கவுதமன், கால்நடை டாக்டர் ராஜா ஆகியோர், வேளாண்மை தொழில்நுட்ப முறை குறித்து விளக்கி பேசினர். தொடர்ந்து, விவசாயிகளுக்கு இடுபொருட்கள், வேளாண்மை உபகரணங்கள் வழங்கப்பட்டன . இதில், பஞ்., தலைவர் வேதையன், ஆத்மா குழு தலைவர் கலைச்செல்வம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தலைவர் முருகானந்தம் உள்பட பலர் பங்கேற்றனர்

**கிணறுகளில் தண்ணீர் பற்றாக்குறை செடிகளில் காய்ந்து வரும் தக்காளி**

சாணார்பட்டிசாணார்பட்டி பகுதிகளில் மழையின்றி விவசாயக்கிணறுகளில் தண்ணீர் : பற்றாக்குறையால் கடும் வறட்சி நிலவுகின்றனவயல்களில் சாகுபடி செய்யப்பட்ட தக்காளி . திண்டுக்கல் மாவட்டத்தில்.செடிகள் காய்ந்து வெம்பியள்ளன, ஒட்டன் சத்திரம், வடமதுரை, வத்தலக்குண் டு போன்ற தக்காளி மார்க்கெட்டிற்கு அடுத்து, கோபால்பட்டி தக்காளி மார்க்கெட் பிரசித்திப்பெற்றதுஇப்பகுதிக .ளில் ஒவ்வொரு ஆண் டும் தை முதல் ஆவணி வரை தக்காளி வரத்து காணப்படும் கடந்த .5 ஆண்டுகளுக்கு முன் இப்பகுதிகளில் அதிகளவில் தக்காளி வரத்து அதிகம் காணப்பட்டதுஆனால் ., விவசாயக்கூலிகள் பற்றாக்குறை, விவசாய செலவு உட்பட பல காரணங்களால் விளை நிலங்களெல்லாம் மா, தென்னை நடவு செய்யப்பட்டதுஇதனால் ., தற்சமயம் தக்காளி சாகுபடி குறைவாக காணப்படுகிற து.

இந்தாண்டு கணவாய்பட்டி, கணவாய்பட்டி, திபாரைப்பட்டி., குரும்பப்பட்டி, மருநூத்து, சாமிநாதபுரம், மணியகரான்பட்டி, ஆவிளிப்பட்டி உட் பட சில ஊர்களில் மட்டுமே சுமார் 50 ஏக்கர் வரை சாகர், 5005 ரக தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளதுகடந்த தைப்பட்டத்தில் நடவு . செய்யப்பட் ட தக்காளியில் சாகுபடி அதிகரித்து காணப்பட்டதால், கடந்த மார்ச், ஏப்ரலில் இதன் விலை கிலோ ரூபாய் 5 முதல் 10 க்கு விற்கப்பட்டதுஅதன்பின்னர் நடப்பட்ட மாசி பட்டம் . தக்காளி விளைச்சலுக்கேற்ற மழையின்றி கிணறுகளில் தண்ணீர் குறைந்து ஏற்பட்ட வறட்சியால் தண்ணீர் பாய்ச்ச முடியவில்லைஇதனால் ., செடியில் இலை கருகல் ஏற்பட்டும், தக்காளி வெம்பல்

ஏற்பட்டு சாகுபடி குறைந்ததுஇதனால்., மார்க்கெட்டிற்கு வரத்து குறைந்து தற்சமயம் விலையேற்றம் காணப் படுகிறதும .ுதல் ரகம் 15 கிலோ கொண்ட தக்காளி பெட்டி ரூ .470 முதல் 500 வரையிலும், 2ம் ரகம் ரூ .275 முதல் ரூ.350 வரையிலும் விற்கப்படுகிறது.

**சொட்டுநீர் பாசன கருவிகளை தேர்வு செய்ய விவசாயிகளுக்கு அனுமதி**

திண்டுக்கல் சொட்டு நீர் பாசனத்திற்காக பயன்படுத்தப்படும் கருவிகள்:தரமில்லாதவை என்று விவசாயிகள் புகார் தெரிவித்ததால், அவர்களுக்கு விருப்பமான நிறுவன கருவிகளை வாங்கிக்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளதுதண்ணீர் பற்றாக்குறையினால் விளைநிலங்கள் . இதற்காக .தரிசாக மாறுவதை தடுப்பதற்காக சொட்டு நீர் பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது சிறு, குறு விவசாயிகளுக்கு முழு அளவிலான மானியம் வழங்கப்படுகிறதுபெரிய அளவிலான . விவசாயிகளுக்கு75 சதவீத மானியத்துடன் கருவிகள் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளதுகாய்கறி . பயிர்களை தவிர தென்னை, மா போன்றவற்றிற்கு இடைவெளி விடப்பட்டிருக்கும்எனவே . எவ்வளவு ஏக்கரில் பயிர் செய்யப்பட்டுள்ளதோ அதற்கேற்ப மானியம் வழங்க தோட்டக்கலைத்துறையினர் முடிவு செய்துள்ளனர்.

வறட்சியால் விளைநிலங்கள் தரிசாக மாறுவதை தடுப்பதற்காக, சொட்டு நீர் பாசனத்தை கடைபிடிக்குமாறு அனைத்து விவசாயிகளையும் வலியுறுத்தவேண்டுமென அரசு, தோட்டக்கலைத்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளது. தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் சந்திரசேகர் கூறியதாவது திண்டுக்கல் மாவட்டத்தில் : 2013- 14 ல் ஆயிரத்து 300 ஹெக்டேர் பரப்பளவில் சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென அரசு குறியீடு நிர்ணயித்துள்ளதுசொட்டு நீர் பாசனத்திற்கான கருவிகள் . தரமில்லாமல் இருப்பதாக விவசாயிகள் சிலர் புகார் தெரிவித்திருந்தனர்எனவே ., விவசாயிகள் நேரடியாக அவர்கள் விரும்பும் நிறுவனத்தின் கருவிகளை வாங்கி பயன்படுத்திக்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது, என்றார்.

**மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு கால்நடைகள் வழங்கும் விழா**

பழநி:பழநி கோயிலுக்கு சொந்தமான, கோசாலா கால்நடைகளை, திண்டுக்கல் மாவட்ட மகளிர் சுயஉதவிக் குழுவுக்கு இலவசமாக வழங்கும் விழா நடந்தது. பழநி கோயில் இணைஆணையர் பாஸ்கரன் முன்னிலை வகித்தார். மகளிர் சுயஉதவி குழுவிற்கு கால்நடைகளை வழங்கி கலெக்டர் பேசுகையில்;""பல ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கால்நடைகள் மகளிர் சுயஉதவி குழுவினருக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. அவற்றை முறையாக வளர்க்கவேண்டும். அடிமாட்டிற்கு விற்றுவிடக்கூடாது," என்றார். திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த, மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு, தலா ஒரு பசு, கன்றுவுடனும், இரண்டு

காளை மாடுகள் வீதம் வழங்கப்பட்டது. தாசில்தார் விஜயலட்சுமி, மாவட்ட மகளிர் திட்ட இயக்குனர் பிரேமா, மாவட்ட ஊராட்சி தலைவர் பிரித்தியாதேவி பங்கேற்றனர்.

**விவசாயத்தில் தொடர் நஷ்டம் பெண் விவசாயி தற்கொலை**

தேனிதேனி மாவட்டம்:, வருஷநாடு அருகே, விவசாயத்தில் ஏற்பட்ட நஷ்டத்தால், மனம் உடைந்த பெண் விவசாயி, விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். வருஷநாடு அருகே அருகுவெளியை சேர்ந்த விவசாயி இளங்கோவன் மனைவி அபினயா,22. திருமணம் ஆகி 8 ஆண்டுகள் ஆகிறதுஇவர்களுக்கு பரணிதரன் .,4, மோனிஷா,2, என்ற குழந்தைகள் உள்ளனர் கடந்த இரண்டு .ஆண்டுகளாக நிலவிய வறட்சியால் அபினயாவுக்கு விவசாயத்தில் பலத்த நஷ்டம் ஏற்பட்டதுமேலும் கடன் வாங்கி .இதனால் கடன் பட்டார் . .அருகுவெளியில் உள்ள தனது தோட்டத்தில் ஆழ்குழாய் கிணறு அமைத்து விவசாயம் செய்தார் ஆழ்குழாய் கிணறு பைப்புகள் உடைந்து விட்டனஇந்த பைப்புகளை மா .ற்றிய பின், ஆழ்குழாய் கிணற்றுக்குள் மண் சரிந்து, மூடி விட்டதுஇதனால் தண்ணீர் இல்லாமல் விவசாயத்தை தொடர . தொடர் நஷ்டத்தால் .முடியவில்லை, மனம் உடைந்த அபினயா, தோட்டத்திலேயே விஷம் குடித்து இறந்தார்.கடமலைக்குண்டு போலீசார் விசாரிக்கின்றனர் .

**டெல்டாவில் வழங்கும் நிவாரணம் வேண்டும் மத்திய குழுவிடம் விவசாயிகள் வலியுறுத்தல்**

ராமநாதபுரம்டெல்டா பகுதி விவசாயிகளுக்கு வழங்கும் நிவாரணத்தொகையை":, எங்களுக்கும் வழங்கினால் தான், கடனை தீர்க்க முடியும்," என , வறட்சி பகுதிகளை பார்வையிட்ட மத்திய குழுவினரிடம், ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் குமுறினர்ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு . லட்சத்து19 ஆயிரத்து 308 எக்டேரில் நெல் விவசாயம் செய்யப்பட்டதுஇதில் ., ஒரு லட்சத்து 4,500 எக்டேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது இதே போல் .19 ஆயிரத்து 150 எக்டேர் மிளகாய் விவசாயத்தில், கடலாடி தாலுகா எஸ் தரைக்குடியில் மட்டும். 2,966 எக்டேர் பாதிக்கப்பட்டுள்ளது .471 எக்டேர் கொத்தமல்லி பாதித்துள்ளது. இப்பகுதிகளை மத்திய வேளாண்மைத்துறை கூடுதல் செயலர் பிரேவேஷ் சர்மா தலைமையில் மத்திய குழு ஆய்வு மேற்கொண்டனர் நாரணமங்கலத்தில் விவசாயி அம்புரோசிடம் .மத்திய குழுவினர் விசாரித்தபோது, "கடும் வறட்சியால் விவசாயத்தில் பெரும் இழப்பு ஏற்பட்டது . தண்ணீர் பிரச்னை கடுமையாக .கால்நடைகளுக்கு தீவனம் வாங்க கூட முடியவில்லை உள்ளதால், கால்நடைகளை வளர்க்க முடியவில்லைதற்போது வெளியூர் வியாபாரிகள் இங்கு . வந்து, கால்நடைகளை குறைந்த விலைக்கு வாங்கி செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது, என்றார்பின் . நாரணமங்கலம் கண்மாயில், 100 நாள் வேலை உறுதியளிப்பு திட்டத்தில் வேலை செய்தவர்களிடம் குழு விசாரித்தபோது, ""வறட்சியின் காரணமாக, இந்த வேலையைத்தான் நம்பி

உள்ளோம்கூலியை அதிகரிக்க வேண்டும் .," என்றனர். எருமைபட்டி விவசாயிகள், ""டெல்டா பகுதி விவசாயிகளுக்கு வழங்கும் அளவிற்காவது, எங்களுக்கு வறட்சி நிவாரண தொகை கொடுத்தால்தான், ஒரளவு கடன் சுமையை சமாளிக்க முடியும்," என்றனர்குடிநீர் கிடைக்காமல் "" பிச்சங்குறிச்சி விவசாயிகள் மற்றும் மகளிர் குழுவினர். மிகவும் சிரமப்படுகிறோம் கடந்தாண்டு அரிசி .லாரியில் சப்ளை செய்ய வேண்டும் .25 கிலோ ரூ.700க்கு வாங்கினோம், தற்போது 1,200க்கு வாங்குகிறோம்மகளிர் குழுவிற்கு ., கூடுதல் கடன் வழங்க வேண்டும்," என்றனர்.

**சரக்கு வாகனமான விவசாயடிரெய்லர்"'கள்**

கீழக்கரைகீழக்கரை:, திருப்புல்லாணி பகுதியில் விவசாய பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டிய டிராக்டர் மற்றும் டிரெய்லர்"'கள் வணிக பயன்பாட்டிற்கு அதிகமாக பயன்படுத்தப்படுகின்றனகீழக்கரை., திருப்புல்லாணி பகுதியில் விவசாய பயன்பாட்டிற்காக வாங்கப்பட்ட டிராக்டர்கள், டிரெய்லர்கள் ஏராளமாக உள்ளதுமழை ப .ொய்த்து போனதால் விவசாயிகள் தனியாருக்கு வாடகைக்கு, டிராக்டர், டிரெய்லர்களை விடுகின்றனர்இதில் மணல் . மற்றும் செங்கல் கொண்டு செல்வதற்கும், மக்களை ஏற்றி வருவதற்கும் பயன்படுத்தி வருகின்றனர்வட்டார போக்குவரத்து .இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது . அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**உழவர் பெருவிழா**

சாயல்குடிசாயல்குடி அருகே நரிப்பையூர்:, குதிரை மொழியில் உழவர் பெருவிழா நடந்தது . மூக்கையூர் ஊராட்சி தலைவர் அவிலா தெராஸ், அன்புச்செல்வி தலைமை வகித்தனர் . விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரம் வாடகைக்கும், நிலங்களில் கிணறு அமைத்து தரப்படுவதாக, தொடக்க வேளாண் உதவி இயக்குனர் முருகன், வேளாண் பொறியியல் துறை அலுவலர் யாதவராஜ் கூறினர்.

சாயல்குடிசாயல்குடி அருகே நரிப்பையூர்:, குதிரை மொழியில் உழவர் பெருவிழா நடந்தது . மூக்கையூர் ஊராட்சி தலைவர் அவிலா தெராஸ், அன்புச்செல்வி தலைமை வகித்தனர் . விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரம் வாடகைக்கும், நிலங்களில் கிணறு அமைத்து தரப்படுவதாக, தொடக்க வேளாண் உதவி இயக்குனர் முருகன், வேளாண் பொறியியல் துறை அலுவலர் யாதவராஜ் கூறினர்.

விருதுநகர் மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியால், 70 ஆயிரத்து 837 எக்டேர் பயிர்கள் கருகிய நிலையில், விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளதுஇதில் விழி பிதுங்கிய . விவசாயிகள்,வாங்கிய கடனை அடைக்க முடியாமலும்,வருமானத்திற்கு வழயின்றி,பிழைப்புக்காக ஊரை காலி செய்யும் அவல நிலையில் உள்ளனர் மாவட்டத்தில்.997 கண்மாய்கள், 35ஆயிரத்து 293 கிணறுகள், பிளவக்கல் பெரியார், கோவிலாறு, வெம்பக்கோட்டை,குல்லூர் சந்தை, ஆணைக்குட்டம், கோல்வார்பட்டி, இருக்கன்குடி உள்ளிட்ட நீர் தேக்கங்கள் மூலமாக, விவசாயிகளால் ஆண்டுதோறும் 71ஆயிரத்து 283 எக்டேரில் பாசனம் செய்யப்பட்டதுஇதன் . மூலம் மகசூலும் ஓரளவு கிடைக்க, மன நிம்மதியுடன் விவசாயத்தில் ஈடுப்பட்டு வந்தனர் விவசாயிகள்ஆண்டுதொறும் பெய்யும் . ஆனால் கடந்த ஆண்டிலோ நிழ்ந்ததோ வேறு. மழை,கடந்த ஆண்டில் குறைவாகவே பெய்ய, விவசாயிகளை புரட்டி போட்டது வறட்சிஅணைகள்., கண்மாய்கள் அனைத்தும் வறண்டனநிலத்தடி நீர் மட்டமும் வெகுவாக . குறைந்ததுநீரின்றி.இதனால் கடந்த ஆண்டின் சாகுபடி முற்றிலும் குறைந்தது., சாகுபடி செய்யப்பட்ட பயிர்களை காப்பாற்ற முடியாது, அனைத்து பயர்களும் கருனஇதற்கு ., மானாவாரி பயிர்கள் கூட தப்பவில்லை, நெல், கடலை, பயறுகள், சிறு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் என, 66 ஆயிரத்து497 எக்டேரில் பயிரிடப்பட்ட மானாவாரி பயிர்களில், 65ஆயிரத்து 985 எக்டேர் பயிர்களும் கருகியதுதோட்டகலைப்பயிர்களான காய்கறிகள் ., பழங்கள், நறுமணப்பயிர்கள், மலர் என, 4ஆயிரத்து163 எக்டேரில் பயிர் செய்யப்பட்ட பயரிகளில், 4039 எக்டேர் பயிர்களும் கருகி, கால்நடைகளுக்கு தீவனமாக மாறியது.

கிணறுகளிலும் நீர் மட்டம் பாதிக்கப்பட்டதால், இதை நம்பி சாகுபடி செய்யப்பட்ட பயிர்களும் கருகினஒரு சில இடங்களில் கிணற்று நீர் இருந்தும் மின் தடை காரணமாக ., தண்ணீர் பாய்ச்ச முடியாமல்,இதன் பயிர்களும் கருகியதுகரும்பு ., வாழை, வெற்றிலை உள்ளிட்ட பயிர்களும் கருக, விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளதுஇதில் பாதித்த விவசாயிகளில் ஒருவர்., தனது நிலத்திலே விஷம் குடித்து தற்கொலை செய்த சம்பவமும் மாவட்டத்தில் நடந்துள்ளது . விவசாயத்திற்காக வங்கிய கடனை அடைக்க முடியாது,ஏராளமான விவசாயிகள் விழி பிதுங்கி உள்ளனர்பலர் வருமானத்திற்கு வழியின்றி.,பிழைப்பிற்காக ஊரை காலி செய்யும் நிலைக்கு வந்துள்ளனர்இது தொடர்பாக விவசாயிகள் பலரும் தங்களது குமுறல்களை வெளிபடுத்தி . :இதோ அவர்களின் குமுறல்கள்.உள்ளனர்

விஜயமுருகன்விருதுநகர் மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள :(விருதுநகர்) நிவாரணத்தொகை என்பது .யானைப்பசிக்கு சோளப்பொறி வழங்கிய கதையாக உள்ளது"50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட மானவாரி நிலங்களில், ஒரு ஏக்கருக்கு மூன்று ஆயிரம், இறவை சாகுபடிக்கு

நான்கு ஆயிரம் வழங்கப்படுகிறது :(சிவகாசி)திருவேங்கட ராமானுஜம் .இது போதுமானதல்ல . சிவகாசி பகுதியில் 3000 ஏக்கரிலும் மக்காசோளம் பயிரிடப்பட்டிருந்தது .30 நாள் பயிரான நிலையில், மழை இல்லாமல் அனைத்தும் கருகியது கிணற்றுபாசனத்தில் .600 ஏக்கரில் மக்காசோளம் பயிரிட்டும்,மின்தடையால் 10 சதவீத அளவே மகசூல் பெற முடிந்ததுநஞ்சை . நிலங்களில்600 ஏக்கரில் நெல், கரும்பு சாகுபடி செய்தனர் .20 சதவீத அளவிற்கே மகசூல் பெற முடிந்தது .80 சதவீதம் கருகியது.

கருப்பையா சாத்தூர் தாலுகாவில் நெல் விவசாயம் அடியோடு : (அணைக்கரைபட்டி) ஏக்கருக்கு .பாதிக்கப்பட்டுள்ளது30 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து, கிணற்று தண்ணீரில் நாற்று பாவியும்,தொடர் மழையின்றி நாற்றுகள் கருகி, கால்நடைகளுக்கு தீவனமாக மாறிவிட்டதுமானாவாரி பயிர்களான மக்காச்சோளம் கூட ., இரண்டு அடி உயரம் வளர்ந்து கருகிவிட்டதுகண்மாய்க்குள் வளரும் வேலி செடி ., கண்மாய் வரத்து கால்வாய்களை சீரமைப்பது கூட இல்லைஇதை சீரமைத்தாலே.,மழைகாலங்களில் ஓரளவு தண்ணீர் தேங்கும் .

பயிர்கள் .மழை இல்லாததால் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது :(நரிக்குடி)பாண்டி அனைத்தும் கருகிய நிலையில், கால்நடைகளுக்கு தீவனமாக மாறிவிட்டன ஏக்கருக்கு .10 ஆயிரம் ரூபாய் வரை செலவிட்டும், பயிர்களை காப்பாற்ற முடியவில்லை கடலை பயிரிலும் ஏக்கருக்கு .10 ரூபாய் வரை நஷ்டமாகி உள்ளதுவட்டிக்கு கடன் வாங்கியும் ., இருக்கிற ஒரு சில நகைகளை அடமானம் வைத்தும், விவசாயம் செய்தோம்சிறிய மழையின் போது கிடைக்கும் நீரை . சேமிக்கலாம் என்றால், கண்மாய்கள் முறையாக தூர்வாரப்படாமல் உள்ளதுஇதனால் மழை நீர் . .உறிஞ்சப்பட்டு வீணாகிறது

கோவிந்தன் நெல் மகசூலுக்காக:(வத்திராயிருப்பு), நாற்றுப்பாவுதலில் இருந்து நடவு செய்து உரமிடுவது வரை, ஒவ்வொரு விவசாயியும், ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் மேல் செலவு செய்துள்ளனர்பெரும்பாலான விவசாயிகள .ஂ, வறட்சியால் மகசூலை முழுமையாக இழந்துள்ளனர்இந்த இழப்புகளால் ., விவசாயிகள் மீண்டும் விவசாயம் செய்ய முடியாத நிலைக்கு ஆளாகி உள்ளனர்அரசு இழப்பீடு வழங்கினால் .வங்கிகளிலும் விவசாயக்கடன் மறுக்கப்படுகிறது. மட்டுமே, மீண்டும் விவசாயத்தை தொடரமுடியும்ஸ்ர) நாகராஜன்.பி .ீவில்லிபுத்தூர்கடந்த :( ஓராண்டாக ஏற்பட்டுள்ள வறட்சியால், நெல், மக்கா சோளம், பருத்தி போன்றவைகள் விதைத்து முளை வந்த நிலையில், தண்ணீரின்றி கருகி போனது ஏக்கருக்கு .20 ஆயிரம் ரூபாய் செலவாகி உள்ளது ஆனால் ஏக்கருக்கு.3 ஆயிரம் மட்டுமே வறட்சி நிவாரணமாக கொடுக்கின்றனர்.

சிவசாமி வறட்சியால் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் :(காரியாபட்டி), அடுத்த மாவட்டங்களை எதிர்நோக்கி உள்ளோம்விவசாயத்தால் பலர் கடனாகி ., ஊரை காலி செய்து, பிழைப்புக்காக

வெளியூர் செல்லும் நிலையில் உள்ளனர்அரசு வழங்கும் வறட்சி நிவாரண கணக்குகளை கூட ., முறையாக எடுக்கவில்லைபலரது நிலங்களை கணக்கெடுக்காததால் ., நிவாரணம் கிடைப்பதில் சிக்கல் உள்ளதுவரத்துக்கால்வாய்களை சீரமைத்தாலே ., இப்பகுதி விவசாயம் மீண்டும் செழிப்படையும்.

ஜீவானந்தம்எப்போதும் இல்லாத அளவிற்கு தற்போது வறட்சியால் :(ராஜபாளையம்), விவசாயம் முற்றிலும் பாதித்து உள்ளதுஉரவிலை உயர்வால் ., விவசாயிகள் கண்ணீர்விடும் நிலை உள்ளது . விளைநிலம் அருகே ஆழ்துளை குழாய் .கிணறுகளில் குறைந்த அளவே தண்ணீர் உள்ளது அமைத்து, கிணற்றிற்குள் தண்ணீரை சேமிக்கிறோம்அந்த கிணற்று தண்ணீரை தான் . மின்மோட்டார் மூலம் விவசாயத்திற்கு பயன்படுத்துகிறோம ◌இதில் ., காலை, மாலை என, மின்தடை ஏற்படுவதால், அதிலும் சிக்கல் உள்ளது .25 ஆண்டுகளாக வளர்த்த தேக்குமரம் கூட பட்டுபோகும் அளவிற்கு உள்ளது .2012 ல் ஏமாற்றிய மழைமாவட்டத்தில் கோடைப்பருவமான மார்ச், ஏப்., மே மாதங்களில் , கடந்த ஐந்து ஆண்டுகளில் சாரசரியாக 169.70 மி.மீ., மழை பதிவான நிலையில், 2012 கோடைப்பருவத்தில் 69.21 மி.மீ., மழையே பதிவாகி உள்ளது.அக் ., நவ., டிச., மாத வட கிழக்கு பருவ மழை 431.30 மி.மீ., பதிவாக, 2012 ல் 173 மி.மீ., மழையே பெய்துள்ளது ஆண்டு சராசரி மழையளவு .811.70 மி.மீ.,பெய்த நிலையில், 2012ல் 563.62.மி.மீ., மழையே பெய்துள்ளது இதன் மூலம் சராசரியாக.30.58 சதவீதம் மழை குறைந்துள்ளதுகடந்த . ஆண்டில் சாகுபடி காலங்களான, செப்., முதல் நவ., வரை குறைந்த அளவிலே மழை பெய்ததால், மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலவி,விவசாயிகளை திக்குமுக்காட செய்துள்ளதுஇது . மட்டுமன்றி குடிநீர் பிரச்னையால், மக்களும் பல வித இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

நிவாரணத்தில் குளறுபடி

மாவட்டத்தில் வறட்சியால், 70ஆயிரத்து 837 எக்டேர் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன . பாதிக்கப்பட்ட1லட்சத்து 37 ஆயிரத்து 532 விவசாயிகளுக்கான நிவாரணத்தொகையாக, 59 கோடி ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்துள்ளதுஇது தொடர்பாக நடந்த கணக்கெடுப்பில் ., குளறுபடி நடந்துள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் பலர், குற்றம் சாட்டி வருகின்றனர்பாதிப்பு . கணக்கெடுப்பை, முறையாக நடத்த வேண்டும் எனவும், விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்மாவட்த்தில் இன்று ஆய்வு மேற.◌கொள்ளும் மத்திய ஆய்வு குழு, இதன் மீதும் முறையான விசாரணை நடத்தி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதும்,ஒட்டுமொத்த விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**உழவர் விழா**

அருப்புக்கோட்டைஅருப்புக்கோட்டை வில்லிபத்திரியில:ி உழவர் விழா நடந்ததுஊராட்சி . வேளாண் உதவி இயக்குனர் மோகன்தாஸ் .தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார் சவுமியன், வேளாண் அலுவலர் சந்திரசேகர், துணை தோட்ட கலை அலுவலர் கண்ணாமணி, வேளாண் பொறியில் துறை உதவி பொறியாளர் முத்துராயப்பன் பேசினர்பல்வேறு தொழில் . நுட்ப கண்ிகாட்சி, கால்நடை துறை சார்பில் மருத்துவ முகாம் ஏற்படுத்தப்பட்டது.

**காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது எப்போது? 10–ந் தேதிக்குள் பதில் அளிக்க மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு**

புதுடெல்லி, -

காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் நதிநீர் முறைப்படுத்தும் அமைப்புகளை உருவாக்கும் தேதியை வரும் 10–ந் தேதிக்குள் அறிவிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு அதிரடி உத்தரவிட்டது.

<u>கர்நாடகம் பிடிவாதம்</u>

காவிரியில் தண்ணீர் பங்கீடுவது தொடர்பாக கர்நாடக அரசுக்கும், தமிழக அரசுக்கும் நீண்ட நாட்களாக பிரச்சினை இருந்து வருகிறது. இதுதொடர்பாக அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் தனது இறுதி தீர்ப்பை வெளியிட்டது. ஆனால் நடுவர் மன்ற இறுதி தீர்ப்பு அரசு கெஜட்டில் வெளியிடப்படாததால் கர்நாடக அரசு அதில் குறிப்பிடப்பட்ட தண்ணீரை திறந்து விட தொடர்ந்து பிடிவாதம் செய்தது.இதை எதிர்த்து தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். முதல்–அமைச்சரின் முனைப்பான சட்டப்போராட்டத்தினால் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி தீர்ப்பை அரசு கெஜட்டில் வெளியிட சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது. அதைத் தொடர்ந்து காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.

<u>அமைப்புகளை உருவாக்க தாமதம்</u>

இந்த தீர்ப்பை அமல்படுத்த காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் நதிநீர் முறைப்படுத்தும் அமைப்புகளை மத்திய அரசு அமைக்க வேண்டும். ஆனால் இந்த அமைப்புகளை அமைக்க மத்திய அரசு காலம் தாழ்த்தி வந்தது.இதைத்தொடர்ந்து தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா இந்த இரு அமைப்புகளை உருவாக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதினார். ஆனாலும் இந்த அமைப்புகள் உருவாக்கப்படவில்லை.

<u>சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு வழக்கு</u>

இதனால் காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் நதிநீர் முறைப்படுத்தும் அமைப்புகளை உருவாக்க உடனடியாக உத்தரவிட வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது.இந்த வழக்கு தொடர்பாக பதில் மனு தாக்கல் செய்ய மத்திய அரசு மற்றும் காவிரி

தண்ணீர் பெறும் கர்நாடக உள்ளிட்ட மாநிலங்களுக்கு சுப்ரீம் கோர்ட்டு நோட்டீசு அனுப்பியது. தமிழக அரசின் மனுவுக்கு எதிராக கர்நாடக அரசு எதிர் பிரமாண பத்திரம் தாக்கல் செய்தது.இதற்கு பதில் அளித்து மத்திய அரசு தாக்கல் செய்த மனுவில், கர்நாடகத்தில் தேர்தல் நடப்பதால் இதற்கான பணிகள் தற்காலிகமாக நிறுத்திவைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டு இருந்தது.

புதிய மனு தாக்கல்

இந்த நிலையில் தமிழக அரசு புதிதாக ஒரு மனுவை தாக்கல் செய்தது. அதில் கர்நாடகாவில் தேர்தல் முடிவடைந்துவிட்டதால், காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் நதிநீர் முறைப்படுத்தும் குழுவை உடனே தொடங்க வேண்டும். அந்த அமைப்புகளை உடனே உருவாக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது.

மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு கெடு

இந்த மனு சுப்ரீம் கோர்ட்டில் நேற்று விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள் வரும் 10–ந் தேதி (வெள்ளிக்கிழமை)க்குள் மத்திய அரசு காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் நதிநீர் முறைப்படுத்தும் அமைப்புகளை உருவாக்கும் தேதியை அறிவிக்க வேண்டும் என்று கெடு விதித்தனர். மேலும் இந்த வழக்கு விசாரணையையும் வரும் 10–ந் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டனர்.

**இளநிலை பட்டப்படிப்புகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கும் புதியமுறை கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் அறிமுகம்**

கோவை

இளநிலை பட்டப்படிப்புகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கும் புதியமுறை வேளாண் பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

இளநிலை பட்டப்படிப்பு

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்சி. வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல், மனையியல், பட்டு வளர்ப்பு, வேளாண்மை பொறியியல், பி.டெக். உயிர் தொழில்நுட்பவியல், உயிர் தகவலியல், வேளாண் தொழில் மேலாண்மை, வேளாண்மை தகவல் தொழில்நுட்பம், தோட்டக்கலை, உணவுபதன் செய் பொறியியல், ஆற்றல் மற்றும் சுற்றுச்சுழல் பொறியியல் என 13 இளநிலை பட்டப்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதுதவிர வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் பொள்ளாச்சி, பெரம்பலூர், கலவை, தேனி, தஞ்சாவூர், காரைக்கால் ஆகிய பகுதிகளில் செயல்படும் 6 இணைப்பு கல்லூரிகளில் வேளாண் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த படிப்புகளில் முதலாம் ஆண்டில் மொத்தம் 1,330 இடங்கள் உள்ளன. இந்த இடங்களில் 2013–2014–ம் கல்வி ஆண்டில் மாணவ–மாணவிகள் சேர்க்கப்பட உள்ளனர்.

ஆன்லைனில் விண்ணப்பம்

இந்த கல்வி ஆண்டில் இணையதளம் வாயிலாக(ஆன்லைன்) விண்ணப்பிக்கும் புதியமுறையை பல்கலைக்கழக முதன்மையர் ஆர்.ராஜராஜன் அறிமுகம் செய்து வைத்தார். இந்த

முறையில் www.tnau.ac.in என்ற வேளாண் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து பின்னர் பதிவு செய்ய வேண்டும்.

மாணவர்கள் இணையதளத்தை திறந்தவுடன் இளநிலை பட்டப்படிப்பு சேர்க்கை என்ற பகுதிக்கு சென்று தங்களின் இ–மெயில் முகவரி, பெயர் மற்றும் பிறந்த தேதியை பதிவு செய்ய வேண்டும். பின்னர் ஆன்லைன் விண்ணப்பத்தில் தெரிந்த தகவல்களை பூர்த்தி செய்து வைத்து கொள்ள வேண்டும். அதன்பின்னர் எப்போது வேண்டுமானாலும், இணையதளத்தில் உள்ள விண்ணப்பங்களை பார்க்கவும், பூர்த்தி செய்யவும் முடியும்.

<u>பின்பற்ற வேண்டியவை</u>

மாணவர்கள் விண்ணப்பிக்க போதுமான அளவு கால அவகாசம் உள்ளது. இதனால் மாணவர்கள் தேர்வு முடிவு வெளியானதும், மதிப்பெண் சான்றிதழ் பெற்று அதில் உள்ள மதிப்பெண்களை கவனமாக பூர்த்தி செய்ய வேண்டும். இதேபோல் எந்த சாதிப்பிரிவு என்பதையும் தெளிவாக குறிப்பிட வேண்டும். விண்ணப்ப கட்டணம் செலுத்துவதற்கான செல்லான் இணையதளத்தில் இருந்து டவுன்லோடு செய்து பயன்படுத்தி கொள்ளலாம்.

இறுதியில் செல்லுபடியாகும் நாளில் விண்ணப்பத்தை முழுமையாக பூர்த்தி செய்து, டவுன்லோடு செய்து அதனுடன் தேவையான கல்வி சான்றிதழ்கள், விண்ணப்ப கட்டணத்திற்கான டி.டி. ஆகியவற்றை இணைத்து, கையொப்பமிட்டு நேரிலோ, விரைவு தபால் மூலமாகவோ, கூரியர் மூலமாகவோ முதல்வர் மற்றும் தலைவர், மாணவர் சேர்க்கை, வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். இதற்கு வருகிற ஜூலை மாதம் 7–ந் தேதி கடைசிநாள் ஆகும்.

<u>தர பட்டியல்–கவுன்சிலிங்</u>

அதன்பின்னர் பிளஸ்–2 தேர்வில் பெற்ற மதிப்பெண்களை அடிப்படையாக கொண்டு தர பட்டியல் தயாரிக்கப்பட்டு, கவுன்சிலிங் மூலம் மாணவர்கள் சேர்த்து கொள்ளப்படுவார்கள். ஒற்றைச்சாளர முறையில் கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் மாணவர் சேர்க்கை நடைபெறும்.

மாணவர் சேர்க்கைக்கான தர பட்டியல் ஜூன் மாதம் 17–ந் தேதி வெளியிடப்படும். பொதுப் பிரிவு, சிறப்பு ஒதுக்கீடு மற்றும் தொழில்கல்வி பிரிவினருக்கான முதல் கட்ட கவுன்சிலிங் வருகிற ஜூலை மாதம் 1–ந் தேதி தொடங்கி 8–ந் தேதி வரையும், 2–ம் கட்ட கவுன்சிலிங் 15 மற்றும் 16–ந் தேதிகளில் நடைபெறும். மாணவர் சேர்க்கைக்கு பின் வகுப்புகள் வருகிற ஜூலை மாதம் 25–ந் தேதி தொடங்குகிறது. இந்த தகவலை கோவை வேளாண் பல்கலைக்கழகம் தெரிவித்து உள்ளது.

**வெப்பச்சலனம் காரணமாக தென்மாவட்டங்களில் நாளை சில இடங்களில் மழைபெய்யும் வானிலை மையம் தகவல்**

சென்னை,

தமிழ்நாட்டில் அக்னி நட்சத்திரம் என்கிற கத்திரிவெயில் காலம் நடந்துவருகிறது. அதன்காரணமாக கோடை வெயில் மக்களை வாட்டி வறுத்தெடுத்து வருகிறது. குறிப்பாக திருச்சி,

மதுரை, வேலூர், நெல்லை ஆகிய மாவட்டங்களில் அதிக வெயில் அடிக்கிறது. மற்ற நாட்களை விட நேற்று வெயில் சற்று குறைவாக இருந்தது.

வெப்பச்சலனம் காரணமாக தமிழ்நாட்டில் தென்மாவட்டங்களில் சில இடங்களில் நாளை (செவ்வாய்க்கிழமை) மழைபெய்யும் என்று வானிலை மைய அதிகாரி தெரிவித்தார்.

காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் நெல்லை மாவட்டம் செங்கோட்டையில் 2 செ.மீ. மழையும், ஈரோடு மாவட்டம் தாளவாடியில் 1 செ.மீ. மழையும் பதிவாகி உள்ளது.

சென்னையில் பகலில் வெயிலின் தன்மை சற்று குறைவாக இருந்தது. இருப்பினும் மெரினா கடற்கரையில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது.

**காஞ்சீபுரத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க கோரி கரும்பு, விதைகளுடன் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

காஞ்சீபுரம்

காஞ்சீபுரத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க கோரி கரும்பு, விதைகளுடன் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

<u>விவசாயிகள் ஆர்ப்பாட்டம்</u>

காஞ்சீபுரத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வலியுறுத்தி கரும்பு, விதைகளை வைத்துக்கொண்டு மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகே விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு அனைத்து விவசாய சாகுபடி பயிர்கள் உற்பத்தியாளர் விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் டி.கே.குருமூர்த்தி தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் மு.திருவேங்கடம் ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் குறித்து பேசினார்.

<u>18 மூட்டை நெல்</u>

காஞ்சீபுரம் மாவட்டத்தில் 26 ஆயிரம் ஹெக்டேரில் நெல், கரும்பு, நிலக்கடலை உள்ளிட்ட பயிர்கள் விளைவிக்கப்பட்டன. இதில் 18 ஆயிரம் ஹெக்டேர் நிலம் வறட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. ஆனால், விவசாயத்துறை அதிகாரிகளோ முறையான ஆய்வு நடத்தாமல் கரும்பு விவசாயிகள் மட்டும் பாதிக்கப்பட்டு உள்ளதாக அரசுக்கு அறிக்கை அளித்து உள்ளனர்.

ஒரு ஏக்கர் நிலத்தில் சராசரியாக 30 மூட்டை வரை நெல் அறுவடை செய்யலாம். ஆனால் இந்த ஆண்டு 18 மூட்டை நெல்தான் அறுவடை செய்யப்பட்டு உள்ளது. இதற்கான கணக்குகள் மாவட்ட நிர்வாகத்திடம் இல்லை.

<u>உரிய நிவாரணம்</u>

அதிகாரிகளின் அலட்சியத்தால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். எனவே அனைத்து விவசாயிகளுக்கும் உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் ராஜவேல், மாவட்ட துணைத்தலைவர்கள் டி.என்.ஆர்.சேகர், வெங்கடேசன், சங்க ஆலோசகர் மலையம் சம்பத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வேலூரில் காய்கறிகள் திடீர் விலை உயர்வு**

வேலூர்,

வேலூர் மாவட்டத்தில் காய்கறி விலை திடீரென்று உயர்ந்தது.

காய்கறி விலை

வேலூரின் பிரதான காய்கறி மார்க்கெட்டான நேதாஜி மார்க்கெட்டுக்கு, ஆந்திரா, கர்நாடகம், ஊட்டி, கொடைக்கானல் மற்றும் பகுதிகளில் இருந்து தினமும் இரவில் லாரிகளில் காய்கறி மூட்டைகள் வந்து இறங்குகிறது. பின்னர் அந்த மூட்டைகள் அங்கிருந்து வேலூர் மாவட்டம் முழுவதும் விநியோகம் செய்யப்படுகிறது.

வேலூர் டவுனில் டோல்கேட், காகிதப்பட்டறையில் உள்ள உழவர் சந்தையும், காட்பாடியில் உள்ள உழவர் சந்தையும் அந்தந்த பகுதி மக்களின் காய்கறி தேவையை பூர்த்தி செய்து வருகின்றன. மற்ற ஊர்களை காட்டிலும் வேலூரில் காய்கறி விலை எப்போமும் கட்டுக்குள்ளே இருக்கும். ஆனால் கோடைக்காலம் தொடங்கியதை தொடர்ந்து மார்க்கெட்டுக்கு காய்கறிவரத்து வெகுவாக குறைந்துள்ளது.

இதன்காரணமாக காய்கறி விலையும் வீர்ரென்று ஏறியுள்ளது. கடந்த சில

வேலூரில் நேற்று காய்கறியின்(உழவர்சந்தை) விலை விவரம் வருமாறு:–

விலை நிலவரம்

பீன்ஸ்–ரூ.40, தக்காளி–ரூ.26, அவரை–ரூ.36, கத்தரி–ரூ.20, முட்டை கோஸ்–ரூ.14, உருளைக்கிழங்கு ரூ.22, கேரட்–ரூ.30, பீட்ரூட்–ரூ.28. முருங்கைக்காய்–24, புடலங்காய் 16, பாகற்காய்–24, பச்சை மிளகாய்–40, கறிவேப்பிலை–ரூ.18.முள்ளங்கி–ரூ.12., வெண்டைக்காய்–ரூ.24.

இது போல அனைத்து வகையான காய்கறிகளின் விலையும் கடந்த சில நாட்களை ஒப்பிடும் போது ரூ.3 முதல் ரூ.10 வரை உயர்ந்து விட்டது. அதிலும் பச்சை மிளகாய், கருவேப்பிலை விலைகள் தாறுமாறாக உயர்ந்து உள்ளது.

காய்கறி மார்க்கெட், உழவர்சந்தைகளை தாண்டி குடியிருப்பு பகுதிகளில் இருக்கும் சிறிய சிறிய கடைகளில் காய்கறி விலை தாறுமாறாக உள்ளது. மேற்கண்ட விலைகளில் ரூ.4 முதல் 8 வரை உயர்த்தியே விற்கப்படுகிறது.

காய்கறி விலை திடீர் உயர்வு குறித்து காய்கறி மொத்த விற்பனையாளர் ஒருவரிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:–

விலை உயர்வு ஏன்?

தக்காளி, முள் கத்தரி, அவரை போன்றவைகள் பொருத்தவரை வேலூர் சுற்று வட்டார பகுதிகளில் விளைந்து மார்க்கெட்டு வருகிறது. தற்போது இந்த காய்கறின் விளைச்சல் காலம் முடிந்து விட்டது தான் விலை உயர்வுக்கு காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

பீன்ஸ், முட்டைகோஸ், கேரட், உருளைக்கிழங்கு போன்றவைகள் பெரும்பாலும் ஆந்திரா, கர்நாடகா, ஊட்டி, கொடைக்கானல், மேட்டுப்பாளையம் போன்ற மலைப்பிரதேசங்களில் இருந்து மார்க்கெட்டு வருபவை. கோடைகாலம் நடைபெறுவதாலும், தண்ணீர் பிரச்சினை அதிகமாக

இருப்பதாலும் மேற்கண்டவை விளைவிக்கும் பயிர்கள் காய்ந்து விட்டதாக கூறுகிறார்கள். அதனால் அந்த காய்கறிகளின் வரத்தும் குறைந்து விட்டது. இதுதான் விலை உயர்வுக்கு காரணமாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**தர்மபுரி பகுதியில் பலா பழம் விற்பனை படுஜோர்**

தர்மபுரி,

தர்மபுரி பகுதியில் பலா பழம் விற்பனை படு ஜோராக நடைபெற்று வருகிறது.

பலா பழம்

முக்கனிகளில் ஒன்றான பலா பழம் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருமே சுவைத்து சாப்பிடுவர். அளவில் பார்ப்பதற்கு பெரிதாக உள்ள இந்த பலா பழம் கோடை காலமான ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் அதிக அளவில் விற்பனைக்கு வரு கிறது. தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும், சுவை மிக்க இந்த பலா பழங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பெரும்பாலும் பலா பழங் களை பொதுமக்கள் முழு பழமாக வாங்குவதை தவிர்த்து தள்ளு வண்டிகளில் வைத்து தனித்தனி சுளைகளாக விற் பனை செய்வதையே வாங்கி சுவைத்து மகிழ் கின்றனர்.

ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை அனைவருமே வாங்கி சுவைத்து மகிழும் இந்த பலாபழம் தற்போது எங்கு பார்த்தாலும் விற்ப னைக்கு குவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மலைப் பகுதிகளில் விளையும் இந்த பலா பழங்கள் பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வரு கிறது.

கேரள பலாபழம்

தர்மபுரி பகுதியில் தற்போது பலா பழம் விற்பனை படு ஜோராக நடைபெற்று வரு கிறது. தர்மபுரி மாவட்டத்தில் மாரண்டஅள்ளி பகுதியில் பலா பழங்கள் விளைந்தாலும் அந்த பழங்கள் பெங்களூர் பகுதிக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது. தர்மபுரி பகுதிகளில் தற்போது விற்பனை செய்யப் படும் பழங்கள் கேரள மாநிலம் திருச்சூர், கோட் டை ளயம், பாலக்காடு போன்ற பகுதி களில் இருந்து லாரிகள் மூலம் கொண்டு வரப்படு கிறது.

இந்த பழங்களை தர்மபுரி பகுதியில் சுமார் 10-க்கும் மேற் பட்ட மொத்த வியாபாரிகள் கொள்முதல் செய்து சிறு வியாபாரிகள், தள்ளு வண்டி வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்ற னர். இந்த பழங்கள் அளவை பொறுத்து ரூ.50 முதல் ரூ.200 வரை விற்பனை செய்கிறார்கள். இந்த பழங் களை தள்ளுவண்டி வியாபாரிகள் வாங்கி சென்று மு¬ றயாக வெட்டி பலாசுளை களை தனியாக பிரித்து எடுத்து விற்பனை செய்து வருகின் றனர்.

விற்பனை படுஜோர்

தற்போது வியாபாரிகள் பொது மக்களை கவரும் வகையில் தள்ளுவண்டியில் பலா பழங்களை வைத்து விற்பனை செய்து வருகின்ற னர். பழங்கள் மீது “ஈ”க்கள் மொய்க்காமலும், தூசுகள் படியாமலும் பாதுகாப்பாக வைத்து விற்பனை செய்து வருகின்றனர். பழத்தின் அளவை பொறுத்து சுளை ரூ.2 முதல் 3 வரை விற்பனை செய்கின்றனர். இதனை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி சுவைத்து மகிழ்கின்ற னர்.

தர்மபுரி பகுதிகளில் இந்த பலா பழங்களை விற்பனை செய்ய வியாபாரிகள் மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றனர். பழத்தை வாங்கி அதனை அறுத்து பக்குவமாக சுளையை எடுத்து அதனை விற்பனை செய்வதில் பெரும் சிரமம் இருந்தாலும் இந்த பழங்களை விற்பனை செய்வதன் மூலம் நல்ல லாபம் ஈட்டி வருகின்றனர். தர்மபுரி பகுதிகளில் மட்டும் 100-க்கும் மேற்பட்ட தள்ளு வண்டி வியாபாரிகள் பலா பழங்களை விற்பனை செய்து வருகின்றனர். பலா பழ சீசன் தொடங்கி உள்ள

நிலையில் தற்போது விலை கூடுதலாக இருந்தாலும் போக போக விலை குறையும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் உழவர் பெருவிழாவையொட்டி விவசாயிகள் பங்கேற்ற ஊர்வலம் பாரம்பரிய வேளாண்மை பொருள்களின் முக்கியத்துவம் குறித்து விளக்கம்**

கிருஷ்ணகிரி,

வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் ஒரு பகுதியாக பாரம்பரிய வேளாண்மை பொருள்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊர்வலம் நடைபெற்றது. இதில் திரளான விவசாயிகள் பங்கேற்றனர்.

<u>உழவர் பெருவிழா</u>

கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் உழவர் பெருவிழா நடைபெற்று வருகிறது. வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் ஒரு பகுதியாக பாரம்பரிய வேளாண்மை பொருள்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊர்வலம் நடைபெற்றது. விழிப்புணர்வு ஊர்வலத்தை வேப்பனப்பள்ளி ஒன்றியக்குழுத் தலைவர் முனியப்பன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஊர்வலத்தில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன், உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் ரவி, மண்டல ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ராமலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு பாரம்பரிய வேளாண்மை பொருள்களின் முக்கியத்துவம் குறித்து பேசினார்கள். ஊர்வலத்தில் கலந்து கொண்ட 400க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் தென்னங்கன்று வழங்கப்பட்டது. முடிவில் வேளாண்மை அலுவலர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

<u>இடிப்பள்ளி கிராமம்</u>

இடிப்பள்ளி கிராமத்தில் நடந்த உழவர் பெருவிழாவிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். அப்போது அவர் விவசாயிகளிடம் பேசியதாவது: நாற்று விட்டு நடவு முறையில் துவரை சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 1 டன் வரை மகசூல் பெறலாம் என கேட்டுக் கொண்டார். வேளாண்மை அலுவலர் செந்தில்குமார் மண் மாதிரி எடுக்கும் முறை குறித்தும், விதை நேர்த்தி செய்யும் முறை குறித்தும் செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.

வேளாண்மை வணிகத்துறை சார்பில் உதவி வேளாண்மை அலுவலர் நாகராஜ் மாங்காய் தரம் பிரிப்பது குறித்தும், அறுவடைக்கு பின்பு தொழில்நுட்பம் குறித்தும் விளக்கினார். தோட்டக்கலைத்துறை, பட்டு வளர்ச்சித்துறை, கால்நடைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு அந்தந்த துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கினார்கள். விழாவில் கருத்து கண்காட்சி, கலைநிகழ்ச்சி மற்றும் வீடியோ படம் மூலம் துறைகளின் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

**கோபி அருகே ரூ.4 கோடி செலவில் குளிர்பதன கிடங்கு கட்டும் பணி தீவிரம்**

ஈரோடு

கோபி அருகே ரூ.4 கோடி செலவில் குளிர்பதன கிடங்கு கட்டும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

விவசாயிகள் சிரமம்

கோபிசெட்டிபாளையம் தாலுகாவில் நெல், வாழை, மஞ்சள் மட்டுமின்றி, தோட்டக்கலைத்துறை பயிர்களான கத்தரிக்காய், வெண்டைக்காய், தக்காளி, சுரைக்காய், பாகற்காய், காலிபிளவர் உள்ளிட்ட பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

கோபி பகுதிகளில் விளைவிக்கும் காய்கறிகள் கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம் ஆகிய பகுதிகளில் உள்ள தினசரி மார்க்கெட்டுகள் மற்றும் உழவர் சந்தைக்கு விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு செல்கின்றனர். விளைச்சல் அதிகரிக்கும் காலங்களில் காய்கறிகள் மற்றும் பழங்களை பறித்து இருப்பு வைக்க முடியாமல் விவசாயிகள் சிரமப்பட்டனர்.

குளிர்பதன கிடங்கு

கோபிசெட்டிபாளையம் பகுதியில் காய்கறிகள் மற்றும் பழங்களை பதப்படுத்தும் வகையில் குளிர்பதன கிடங்கு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் எம்.எல்.ஏ.விடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கடந்த ஆண்டு சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின் போது கோபியில் விவசாய விளைபொருட்களை பதப்படுத்துவதற்காக ரூ.4 கோடி செலவில் குளிர்பதன கிடங்கு அமைக்கப்படும் என்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார்.

அதன்படி, குளிர்பதன கிடங்கு கட்டுவதற்கு கோபிசெட்டிபாளையம் அருகே அளுக்குளி ஊராட்சிக்கு உள்பட்ட பிள்ளையார்கோவில் துறை என்ற பகுதிகளில் வருவாய்த்துறைக்கு சொந்தமான 3½ ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது.

முதல்–அமைச்சர் தொடங்கி வைத்தார்

அதைத்தொடர்ந்து, குளிர்பதன கிடங்கு கட்டும் பணியை கடந்த ஆண்டு மார்ச் மாதம் தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா வீடியோ கான்பரன்சு மூலம் தொடங்கி வைத்தார். இந்த வளாகத்தில் 100 மெட்ரிக் டன் காய்கறிகளை சேமித்து வைக்கும் வகையில் குளிர்பதன கிடங்கும், அலுவலகம், விவசாயிகளுக்கு ஆலோசனை மையம், காய்கறிகளை வளாகத்திலேயே விற்பனை செய்யும் வகையில் 15 விற்பனைக்கூடம் ஆகியவை கட்டும் பணி நடந்து வருகிறது.

காய்கறிகள் மற்றும் பழங்களை அடுக்கி வைக்கும் வகையில் தனியாக குடோன் ஒன்று கட்டப்படுகிறது. இந்த பணிகளில் 50–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இரவு, பகலாக ஈடுபட்டு வருகின்றனர். இன்னும், 6 மாத காலத்தில் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**முதல்–அமைச்சர் கோரியபடி வறட்சி நிவாரண உதவியாக ரூ.20 ஆயிரம் கோடி வழங்குவதோடு விவசாயிகள் பயிர்கடன்களை முற்றிலும் தள்ளுபடி செய்ய வேண்டும்: மத்தியக்குழுவிடம், விவசாயிகள் வலியுறுத்தல்**

தஞ்சாவூர்,

முதல்–அமைச்சர் ஜெயலலிதா கோரியுள்ள படி ரூ.20 ஆயிரம் கோடி நிவாரணம் வழங்குவதோடு, விவசாயிகளின் பயிர்க்கடன்களை முற்றிலும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மத்தியக்குழுவிடம் விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

மத்தியக்குழுவிடம் வலியுறுத்தல்

தஞ்சை மாவட்டத்தில் வறட்சி பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்த மத்தியக்குழுவிடம், ராயமுண்டான்பட்டியை சேர்ந்த விவசாயி ஜீவக்குமார் கூறியதாவது:–

தமிழக அரசு அறிவித்துள்ள நிவாரண நிதி ஒரு சில பகுதிகளில் மட்டும் கிடைத்தது. குறிப்பாக குறுவை, சம்பா சாகுபடி இழப்பு ஏற்பட்ட நிலையில் சாகுபடி பாதிக்கப்பட்ட இடங்களுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரமும், தரிசாக போடப்பட்ட நிலங்களுக்கு ரூ.15 ஆயிரமும், விவசாய தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.10 ஆயிரமும் நிவாரணம் வேண்டும். இதற்கு முதல்–அமைச்சர் ஜெயலலிதா கோரியபடி ரூ.20 ஆயிரம் கோடி நிவாரண நிதியை மத்திய அரசு அளிக்க வேண்டும்.

<u>கடன் தள்ளுபடி</u>

சாகுபடி பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய பயிர்க்கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். ஆறு, ஏரிகளில் வெங்காயத்தாமரை, நெய்வேலி காட்டாமணக்கு செடிகள் படர்ந்து காணப்படுகின்றன. எனவே தூர்வார மாநில அரசுக்கு மத்திய அரசு உதவ வேண்டும். தூர்வாரும் பணிகளுக்கு மத்திய அரசு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். தற்போது மின் தட்டுப்பாட்டால் விவசாயம் மட்டும் இன்றி கால்நடைகளுக்கு கூட தண்ணீர் இல்லாமல் அவதிப்படும் நிலைஉள்ளது. எனவே மத்திய தொகுப்பில் இருந்து தமிழகத்திற்கு கூடுதலாக மின்சாரம் வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>வறட்சி நிவாரணம்</u>

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சாமி.நடராஜன் கூறியதாவது:–

காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி முற்றிலும் நடைபெற வில்லை. சம்பா சாகுபடியும் பாதிக்கப்பட்டது. எனவே பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும், விவசாய தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். மேலும் தமிழக அரசு கோரிய வறட்சி நிவாரண நிதியை மத்திய அரசு உடனே வழங்க வேண்டும். சம்பா சாகுபடி பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.25 ஆயிரமும், சாகுபடி செய்யாத நிலத்திற்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரமும், வேலை இல்லாமல் பாதிக்கப்பட்டு உள்ள விவசாய தொழிலாளர்கள் குடும்பத்திற்கு ரூ.10 ஆயிரமும் நிவாரணம் வழங்க வேண்டும்.

காவிரி நதி நீர் பிரச்சினையில் தமிழகத்தின் பாசன உரிமை தொடர்ந்து மறுக்கப்பட்டு வருவதால் காவிரி நீரை நம்பி உள்ள 12 மாவட்டங்களில் வேளாண்மை பாதிக்கப்படுவதால் காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பை செயல்படுத்த காவிரி மேலாண்மை வாரியத்தை உடன் மத்திய அரசு அமைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**தஞ்சை மாவட்டத்தில் வறட்சி பகுதிகளில் மத்தியக்குழுவினர் இன்று ஆய்வு**

தஞ்சாவூர்,

தஞ்சை மாவட்டத்தில் வறட்சி பகுதிகளில் மத்தியக்குழுவினர் இன்று ஆய்வு செய்கின்றனர்.

<u>இன்று ஆய்வு</u>

முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்று தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட மத்தியக்குழு வந்துள்ளது. வேளாண்மை பிரிவு துணை ஆலோசகர் மனாஸ்சவுத்திரி தலைமையில் 9 பேர் கொண்ட குழுவினர் இன்று(செவ்வாய்க்கிழமை) காலை தஞ்சை மாவட்டத்திற்கு வந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுகின்றனர்.

தஞ்சையை அடுத்த வல்லத்திற்கு 10.45 மணிக்கு வரும் மத்தியக்குழுவினர் அங்கு வறட்சி காலத்தில் கால்நடைகளுக்கு வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் தீவன உற்பத்தி பணிகளை பார்வையிடுகின்றனர். பின்பு அங்கிருந்து புறப்பட்டு மத்தியக்குழுவினர் ஆலக்குடிக்கு செல்கின்றனர். ஆலக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் உழவர் பெருவிழா மற்றும் கால்நடைகளுக்கான மருத்துவமுகாமில் மத்தியக்குழுவினர் கலந்து கொள்கின்றனர்.

<u>பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணி</u>

பின்பு அங்கிருந்து 11.40 மணிக்கு புறப்படும் மத்தியக்குழுவினர் நேராக சித்திரக்குடிக்கு செல்கின்றனர். அங்கு வறட்சி பகுதிகளை நேரில் பார்வையிட்டுகின்றனர். மேலும் சித்திரக்குடியில் நடைபெற்று வரும் போர்வெல் பணிகளையும் நேரில் பார்வையிடுகின்றனர்.

பின்பு அங்கிருந்து புறப்பட்டு 12.10 மணிக்கு ராயந்தூர் கிராமத்திற்கு செல்கின்றனர். அங்கு பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணிகளையும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையத்தையும் நேரில் மத்தியக்குழுவினர் பார்வையிடுகின்றனர். பின்பு மத்தியக்குழுவினர் தஞ்சை சுற்றுலா ஆய்வு மாளிகைக்கு வருகின்றனர். அங்கு மதிய உணவு சாப்பிடுகின்றனர்.

இதையடுத்து 12.40 மணிக்கு சீராளூர் செல்லும் மத்தியக்குழுவினர் அம்மா திட்ட பணிகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்கின்றனர். இந்த குழுவில் இயக்குநர்(புகையிலை மேம்பாடு) மனோகரன், நிதிசார் செலவினதுறை துணை இயக்குநர் ஸ்ரீகாந்த், மத்திய துணை செயலாளர் ஜோஸ், கண்காணிப்பு பொறியாளர் சுந்தரமூர்த்தி, வருவாய்த்துறையின் முதன்மை செயலாளர் ராஜீவ்ரஞ்சன், வேளாண்மைத்துறை முதன்மை அரசு செயலாளர் சந்தீப்சக்சேனா ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வு செய்கின்றனர். பிற்பகல் மத்திய குழுவினர் திருவாரூர் மாவட்டம் செல்கின்றனர்.

**தஞ்சையில் கால்நடை தீவன சாகுபடி குறித்து கூடுதல் இயக்குனர் நேரில் ஆய்வு நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டத்தையும் பார்வையிட்டார்**

தஞ்சை

தஞ்சையில் கால்நடை தீவன சாகுபடி குறித்து கால்நடை பராமரிப்புத்துறை கூடுதல் இயக்குனர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டத்தையும் பார்வையிட்டார்.

கூடுதல் இயக்குனர் ஆய்வு

தமிழக கால்நடை பராமரிப்புத்துறை கூடுதல் இயக்குனர் சையதுசமீம் நேற்று தஞ்சை வந்தார். பின்னர் அவர் தமிழக அரசின் வறட்சி நிவாரண திட்டத்தின் மூலம் கால்நடை தீவன சோளம் சாகுபடி செய்யப்பட்டு உள்ள இடங்களுக்கு சென்று பார்வையிட்டார். சோளம் சாகுபடிக்கு 50 சதவீதம் மானியம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது.

நாஞ்சிக்கோட்டை, ஏழுப்பட்டி, வஸ்தாசாவடி, வடக்குப்பட்டு, மருங்குளம் கால்நடை மருந்தக பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டு உள்ள கால்நடை தீவன சோளம் பயிர்களை சையது சமீம் பார்வையிட்டார். அவருடன் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் டாக்டர் ரவீந்திரன், கால்நடை டாக்டர் செல்லத்துரை, நாஞ்சிக்கோட்டை கால்நடை மருந்தக கால்நடை மருத்துவர் ஷெரீப் ஆகியோர் உடன் இருந்தனர்.

நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டம்

பின்னர் தஞ்சையை அடுத்த நாஞ்சிக்கோட்டை பகுதிகளில் நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ் வளர்க்கப்பட்டு வரும் கோழிக்குஞ்சுகளையும், கால்நடை பராமரிப்புத்துறை கூடுதல் இயக்குனர் சையதுசமீம் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**திருவாரூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழு நேரில் ஆய்வு**

திருவாரூர்

திருவாரூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழு நேற்று நேரில் பர்வையிட்டு ஆய்வு செய்தது.

மத்திய குழு

தமிழகத்தில் வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு ரூ. 19 ஆயிரத்து 665 கோடி அளவுக்கு நிவாரண நிதி வழங்கிட மத்திய அரசுக்கு தமிழக அரசு கோரிக்கை விடுத்தது. இந்த கோரிக்கையின் அடிப்படையில் மத்திய நிபுணர்குழு தமிழகத்தில் ஆய்வு பணியை மேற்கொள்வதற்கு வந்துள்ளது. இந்த மத்திய குழு 2 குழுக்களாக பிரிந்து தமிழகம் முழுவதும் வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டங்களை ஆய்வு செய்து வருகிறது. இதில் திருச்சியிலிருந்து ஒரு குழு புறப்பட்டு திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஆய்வினை மேற்கொண்டு வருகிறது.

மானேஷ்சவுத்ரி தலைமையிலான இக்குழுவில் மத்திய அரசின் புகையிலை மேம்பாட்டுக்கழக இயக்குநர் (பொறுப்பு) கே.மனோகரன், மத்திய அரசின் நிதித்துறை துணை இயக்குநர் வி.ஸ்ரீகாந்த், மின்சார துறை துணை செயலாளர் ஜோஷ், காவேரி மற்றும் தென்னக நதி அமைப்பின் கண்காணிப்பு பொறியாளர் ஆர்.சுந்தரமூர்த்தி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இக்குழு திருச்சியில் தொடங்கி தஞ்சை மாவட்டத்தை நேற்று காலை ஆய்வு செய்தது.

திருவாரூர் மாவட்டத்தில்...

அதனை தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு திருவாரூர் மாவட்ட எல்லையான வடுவூருக்கு வந்தது. அங்கு மாவட்ட கலெக்டர் சி.நடராசன், குழுவை வரவேற்றார். உடன் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு காளிராஜ் மகேஷ்குமார் இருந்தார். பின்னர் மத்திய குழு வடுவூரில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தது.

அப்போது திருவாரூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு ரூ.6 லட்சத்து 65ஆயிரம் மெட்ரிக் டன் நெல, கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு போதிய தண்ணீர் இல்லாததால் சாகுபடி பரப்பில் 3ல் ஒரு பங்கு மட்டுமே சாகுபடி நடைபெற்றுள்ளது. தற்சமயம் சுமார் 50 அதன் பின்னர் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மட்டுமே திறக்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் இதுவரை 2 லட்சத்து 69 ஆயிரம் மட்டுமே நெல் கொள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என கலெக்டர் சி.நடராசன் கூறினார்.

<u>நெற்பயிர்கள் கருகின</u>

விவசாயிகள் கூறுகையில் காவிரி நீர் இல்லாததால் குறுவை சாகுபடி முழுமையாக பாதிக்கப்பட்டது. சம்பா சாகுபடியும் உரிய முறையில் பயனளிக்கவில்லை. தண்ணீர் போதுமான அளவு கிடைக்காததால் சம்பா நெற்பயிற்கள் கருகிவிட்டது. என கூறினர். பின்னர் மத்திய குழு அதே பகுதியில் நிலத்தடி நீரை பாதுகாக்கின்ற வகையில் திருவாரூர் கலெக்டரின் புதிய முயற்சியால் குளங்களில் அமைக்கப்பட்ட நிலத்தடிநீர் செறிவூட்டும் திட்டம் மூலம் அமைக்கப்பட்ட குழாய்களை மத்திய குழு பார்வையிட்டது. அதுபற்றிய வவரங்களையும் கேட்டறிந்தனர்.

அதனை தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்டு திருத்துறைப்பூண்டி அருகே உள்ள வேப்பஞ்சேரியில் உழவர் விழா நடைபெருவதையும் பாரம்பரிய பொருட்களின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கத்தையும் குழுவினர் பார்வையிட்டனர். அதுசமயம் நடமாடும் மண்பரிசோதனை நிலைய வாகனத்தையும் பார்வையிட்டு வேளாண்துறை செயல்பாடுகள் குறித்த விவரங்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.

மத்திய குழுவினர் பார்வையிட வந்தபோது நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி, வேளாண் இணை இயக்குளர் கணேசன், துணை இயக்குநர் மயில்வாகணன், கூடடுறவு இணை பதிவாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

**திருவாரூரில் விவசாய கல்லூரி அமைக்க வேண்டும் அரசு ஊழியர் சங்க கூட்டத்தில் வலியுறுத்தல்**

திருவாரூர்

திருவாரூரில் விவசாய கல்லூரி அமைக்க வேண்டும் என்று அரசு ஊழியர் சங்க கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

<u>அரசு ஊழியர் சங்க கூட்டம்</u>

திருவாரூரில் அரசு ஊழியர் சங்கத்தின் மாநில அளவிலான பிரதிநிதித்துவ பேரவைக்கூட் டம் நடந்தது. கூட்டத்திற்கு மாநில தலைவர் தமிழ்ச்செல்வி தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் முத்துசுந் தரம், மாநில துணை தலைவர் வெற்றிராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன் னதாக வரவேற்பு குழு தலை வர் குருசந்திரசேகரன் வரவேற் றார்.

இதில் அரசு ஓய்வூதியர் சங்க மாநில தலைவர் ஸ்ரீதரன், ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட் டணி மாநில தலைவர் கண் ணன், சங்க பொது செயலாளர் பாலசுப்ரமணியன், பொருளா ளர் கணபதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் காப்பீட்டு கழக ஊழியர் சங்க தென் மண்டல பொது செயலாளர் சாமிநா தன் பேசுகையில்:–

புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல் படுத்த வேண்டும் என்று கூறினார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர் மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

<u>விவசாய கல்லூரி</u>

காவிரி டெல்டா மாவட்டங் களில் உரிய தண்ணீர் இன்றி விவசாயம் பாதிக்கப்பட்டுள் ளது. கர்நாடகத்திலிருந்து உரிய தண்ணீரை பெற்று தர வும் மத்திய அரசு தவறிவிட் டது. தமிழக அரசு நிவாரண நடவடிக்கைகளை உடன் தொடங்க வேண்டும். விவசா யிகள் பெற்றுள்ள பயிர் கடன் களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்.

மத்திய அரசு டெல்டா மாவட்டங்களுக்கு இயற்கை பேரிடர் நிதியிலிருந்து அரசி யல் வேறுபாடின்றி உரிய தொகையை வழங்க வேண்டும். திருவாரூரில் விவசாய கல்லூரி அமைக்க வேண்டும். கோடை கால சாகுபடியை முழுமையாக மேற்கொள்ள தடையின்றி மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். அரசு காலி பணி யிடங்களை நிரப்ப வேண்டும். அந்நிய முதலீட்டு அனுமதியை கைவிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

**கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு எள் வரத்து அதிகரிப்பு**

கள்ளக்குறிச்சி,

கள்ளக்குறிச்சி ஒழுங்கு முறை விற்பனை கூடத்துக்கு எள் வரத்து அதிகரித்துள்ளது.

வரத்து அதிகரிப்பு

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி கச்சிராயப் பாளையம் சாலையில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் உள்ளது. இங்கு மக்காச்சோளம், எள், உளுந்து, மணிலா, கேழ்வரகு போன்ற விளைப் பொருட்களை சுற்றுப்பகுதி கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். தற்போது எள் சீசன் தொடங்கியுள்ளதால் நாளுக்கு நாள் எள் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த வாரம், வாரத்தின் முதல் நாளன்று 400 மூட்டை எள் விற்பனைக்கு இருந்தது. அதிகபட்சமாக ஒரு மூட்டை ரூ. 6,150 வரை விற்பனை யானது.

விலை குறைந்தது

இந்த நிலையில் நேற்று முன்தினம் கள்ளக்குறிச்சி, சின்னசேலம், தியாகதுருகம் கூத்தக்குடி, ரிஷிவந்தியம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் தாணிப்பாடி, சதகுப்பம், பெருந்துறைப்பட்டு உள்பட பல்வேறு பகுதியில் இருந்து 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் 750 எள் மூட்டை களை விற்பனை செய்தனர்.

இவற்றுக்கு விருதுநகர், திருச்சி, மதுரை பகுதியை சேர்ந்த எண்ணெய் நிறுவனத்தினர் மறைமுகமாக விலை நிர்ணயம் செய்தனர். அதிகபட்சமாக ஒரு மூட்டை எள் ரூ. 5,956-க்கும், குறைந்த பட்சமாக ரூ.4,870-க்கும் விற்பனையானது. இது கடந்த வாரத்தை விட ரூ.100 குறைவாகும்.

**தஞ்சை உள்பட 5 மாவட்டங்களில் வறட்சி பகுதியை பார்வையிடுவதற்காக மத்திய நிபுணர் குழு திருச்சி வந்தது பாதிப்புகள் பற்றி கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் விளக்கி கூறினார்**

திருச்சி,

தஞ்சை உள்பட 5 மாவட்டங்களில் வறட்சி பகுதிகளை பார்வையிடுவதற்காக மத்திய நிபுணர் குழு திருச்சி வந்தது. அந்த குழுவினரிடம் கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் வறட்சி பாதிப்புகள் பற்றி பட விளக்க காட்சிகளுடன் விளக்கி கூறினார்.

<u>மத்திய நிபுணர் குழு வந்தது</u>

தமிழகத்தில் பருவமழை பொய்த்ததால் கடும் வறட்சி நிலவி வருகிறது. இந்நிலையில் தமிழக அரசு கேட்டுக்கொண்டதற்கு இணங்க மத்திய அரசு தமிழகத்திற்கு 10 பேர் கொண்ட நிபுணர் குழுவை அனுப்பி வைத்து உள்ளது. இந்த குழுவில் ஒரு பிரிவினர் நேற்று இரவு சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி வந்தனர். விமான நிலையத்தில் மத்திய நிபுணர் குழுவினரை திருச்சி மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் வரவேற்றார்.

விமான நிலையத்தில் இருந்து மத்திய நிபுணர் குழுவினர் நேராக திருச்சி சுற்றுலா மாளிகைக்கு (சர்க்யூட் அவுஸ்) வந்து தங்கினார்கள். மத்திய திட்டக்குழு துணை ஆலோசகர் மானேஷ் சவுத்ரி தலைமையில் மத்திய அரசின் புகையிலை மேம்பாட்டு கழக இயக்குனர் மனோகரன், துணை இயக்குனர் ஸ்ரீகாந்த், மின்சார துறை துணை செயலாளர் ஜோஸ், தென்னக நதிகள் அமைப்பின் கண்காணிப்பு பொறியாளர் சுந்தரமூர்த்தி ஆகியோர் மத்திய நிபுணர் குழுவில் இடம் பெற்று உள்ளனர். இவர்களுடன் தமிழக அரசு செயலாளர்கள் ராஜீவ் ரஞ்சன், சந்தீப் சக்ஷேனா ஆகியோரும் வந்து உள்ளனர்.

<u>கலெக்டருடன் ஆலோசனை</u>

சுற்றுலா மாளிகையில் திருச்சி மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் திருச்சி மாவட்டத்தில் வறட்சியால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றிய புகைப்படங்கள், தண்ணீர் இல்லாததால் கருகிய பயிர்கள். விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் பற்றிய வீடியோ காட்சிகளை 'பவர் பாய்ண்ட்' மூலம் மத்திய மத்திய நிபுணர் குழுவினருக்கு விளக்கி கூறி ஆலோசனை நடத்தினார். சுமார் 30 நிமிட நேரம் இந்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

<u>இன்று பார்வையிடுகிறார்கள்</u>

மத்திய நிபுணர் குழுவினர் இன்று காலை சுற்றுலா மாளிகையில் இருந்து புறப்பட்டு திருச்சி மாவட்டத்தில் திருவெறும்பூர் பகுதியை சேர்ந்த வேங்கூர் உள்பட சில இடங்களில் பார்வையிடுகிறார்கள். அதன் பின்னர் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு விவசாயிகளிடம் கருத்து கேட்கிறார்கள். இன்று இரவு திருவாரூரில் தங்கும் மத்திய நிபுணர் குழுவினர் நாளை மாலை மீண்டும் திருச்சிக்கு வந்து விமானம் மூலம் சென்னைக்கு புறப்பட்டு செல்கிறார்கள்.

**வேப்பந்தட்டையில் வறட்சி நிவாரணம் பெற புதிய கணினி சிட்டா தேவையில்லை தாசில்தார் தகவல்**

வேப்பந்தட்டை,

வேப்பந்தட்டையில் வறட்சி நிவாரணம் பெற புதிய கணினி சிட்டா தேவையில்லை என தாசில்தார் தெரிவித் தார்.

வறட்சி நிவாரணம்

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தாலுகா பகுதியில் தமிழக அரசின் சார்பில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப் பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வெள்ள நிவாரணம் வழங்கியதில் ஒரே பெயருள்ள ஒருவருடைய பணத்தை மற்றொருவர் வாங்கி விட்டதாக புகார் எழுந்தது. இது போன்ற தவறுகள் நடந்து விடக்கூடாது என்பதற்காக விவசாயியின் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டையுடன், கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்று சம்பந்தப்பட்ட கூட்டுறவு கடன் சங்கத்தில் பணத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தரேஸ் அகமது உத்தரவிட்டார். இதனைத்தொடர்ந்து வேப்பந் தட்டை பகுதியில் கடந்த சில நாட்களாக வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

வதந்தி

இதில் விவசாயிகள் புதியதாக கணினி சிட்டா எடுத்து வர வேண்டும் என யாரோ வதந்தியை பரப்பி விட்டனர். இதனால் விவசாயிகள் பெருந்திரளாக திரண்டு வேப்பந்தட்டை தாலுகா அலுவலகத்திற்கு ஒரே நேரத்தில் வந்து முற்றுகை யிட்டனர். இதனால் வேப்பந் தட்டை தாலுகா அலுவலகத் தில் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாக இது பற்றி அரும்பாவூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.இதனைத்தொடர்ந்து போலீசார் விரைந்து கூட் டத்தை வரிசைப்படுத்தினர். அதன் பின்னர் விசாரித்த போது வறட்சி நிவாரணம் பெறுவதற்காக புதிய கணினி சிட்ட பெற விவசாயிகள் திரண்டு வந்தது தெரிய வந்தது.

கணினி சிட்டா

இதனைத்தொடர்ந்து வேப்பந்தட்டை தாசில்தார் ஜோசப்பிரபாகரன் விவசாயி களை நேரில் சந்தித்து வறட்சி நிவாரணம் பெற 2 புகைப்படம், ரேசன்கார்டு நகல் மட்டும் போதுமானது. அதே நேரத்தில் புதிய கணினி சிட்டா தேவை இல்லை. ஏற்கனவே பெறப்பட்ட கணினி சிட்டா நகலோ, அல்லது நிலப் பட்டா புத்தக நகலோ, அல்லது பட்டா எண் தெரிவித் தாலோ போதுமானது எனக் கூறி விவசாயிகளை சமா தானப்படுத்தி அனுப்பினார். இதையும் நம்பாமல் பெரும் பாலான விவசாயிகள் புதிய கணினி சிட்டா வாங்கி கொண்டுதான் சென்றனர்.

**கீரமங்கலம் பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க கோரிக்கை**

கீரமங்கலம்,

கீரமங்கலம் பகுதியில் வறட்சியால் பாதிக்கப் பட்ட அனைத்து விவ சாயிகளுக்கும் பாகு பாடின்றி நிவாரணம் வழங்க வேண்டும் என்று கீரமங்கலம் பகுதி விவ சாயிகள் கோரிக்கை விடு த்துள்ளனர்.

<u>விவசாயிகள் பாதிப்பு</u>

கடந்த பல மாதங்களாக பருவ மழை இல்லாமல் தமிழகம் முழுவதும் அனைத்து விவசாயங்களும் பெருமளவு பாதிக்கப்பட்டன. விவசாயம் செய்யப்பட்டிருந்த பயிர்கள் தண்ணீர் இன்றி கருகின. இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டு, கடனாளிகளாக உள்ளனர்.

விவசாயிகளின் இந்த நிலையை அறிந்த தமிழக அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்தது. இந்த அறிவிப்பால் பாதிக்கப் பட்ட விவசாயிகள் நிம்மதி யடைந்தனர். விவசாயத்திற் காக வாங்கிய கடனில் ஓரளவு கடனை திருப்பி செலுத்தி விடலாம் என்று நினைத்திருந் தனர்.

நிவாரணம் வழங்க கோரிக்கை

இந்த நிலையில் நிவாரணம் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப் படும் என்றும் அறிவிக்கப் பட்டது. மேலும் 50 சதவீதத் திற்கு மேல் பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு இந்த நிவாரணம் கிடைக்கும் என்று கூறப்பட்டது. இது குறித்து புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் பகுதி விவசாயிகள் கூறுகையில், கீரமங்கலம் பகுதியில் ஒரு சில கிராமங்களுக்கு மட்டும் வறட்சி நிவாரணம் வந்துள்ள தாக தெரிகிறது. மற்ற கிராமங்களுக்கு நிவாரணம் பெறுவதற்கான பயனாளிகள் பட்டியல் வரவில்லை. பயிர் பாதிப்பு ஏற்பட்டு கடனாளி களாக இருக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் தமிழக அரசின் வறட்சி நிவாரணம் கிடைக்க அதிகாரிகள் நடவடி க்கை எடுக்க வேண்டும், என்று கோரிக்கை விடுத்தனர்.

**குன்னம் வட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை தாசில்தார் வழங்கினார்**

குன்னம்,

குன்னம் வட்டத்தில் வறட்சியால் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகையை தாசில்தார் செல்வம் வழங்கினார்.

வறட்சி நிவாரணம்

குன்னம் ஊராட்சியில் உள்ள குன்னம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் வறட்சி நிவாரணம் வழங்கும் பணியை குன்னம் தாசில்தார் செல்வம் தொடங்கி வைத்து பேசினார். விழாவில் மண்டல துணை தாசில்தார் கஜேந்திரன், தனி அலுவலர் செல்வராஜ், ஆகி யோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் ராஜன் வர வேற்றார்.

விழாவில் தாசில்தார் செல்வம் கூறியதாவது:-

பெரம்பலூரை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக தமிழக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து அரசு உயர்மட்டக் குழுவினர் பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு அதன் அறிக் கையை தமிழக முதல்வரிடம் அளித்தனர். இதைத் தொடர்ந்து நிவாரணத் தொகை வழங்க தமிழக முதல்வர் உத்தர விட்டார்.

42 ஆயிரம் விவசாயிகள்

குன்னம் வட்டத்தில் வறட்சி யால் பாதிக்கப்பட்ட 42 ஆயிரத்து 141 விவசாயி களுக்கு ரூ. 15 கோடியே 95 லட்சத்து 15 ஆயிரத்தை மொத்தம் 16 தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் நிவா ரணத்தொகை வழங்கும் பணி தொடங்கி உள்ளது.

இதில் வருவாய்த் துறை கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் புகைப்படத்துடன் கூடிய வறட்சி நிவாரண அடையாள அட்டை வழங்கப்பட்டு நிவாரணத்தொகை அளிக்கப் படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

கலந்து கொண்டவர்கள்

விழாவில் வருவாய் ஆய்வாளர் சரவணன், அம்மா பேரவை மாவட்ட பொருளா ளர் ஏ.கே. ராஜேந்திரன், ஒன்றிய கவுன்சிலர் முருகேசன் ஒன்றிய பொருளாளர் ராம லிங்கம் ஆகியோர்

உள்பட பலர் கலந்து கொண்டனர். இறுதியில் துணை செயலாளர் விஸ்வநாதன் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் பா.ஜ.க.செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்**

அரியலூர்,

புள்ளம்பாடி வாய்க்கால் பாசன விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று அரியலூரில் நடைபெற்ற பா.ஜ.க செயற்குழு கூட் டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

<u>பா.ஜ.க. செயற்குழு கூட்டம்</u>

அரியலூர் மாவட்ட பாரதீய ஜனதா கட்சியின் செயற்குழு கூட்டம் அரியலூர் அன்ன லட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் நடராஜன் தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார். மாநில செயலாளர் சுப்பிரமணியன் சிறப்புரை யாற்றினார். மாநில பொதுக் குழு உறுப்பினர் அபிராபி, மாவட்ட செயலாளர் அய்யப் பன், பழனிச்சாமி, சுமதி சேகர், மாவட்ட பொருளாளர் விஜய குமார் உள்பட பலர் பேசினார் கள். மாவட்ட செயலாளர் அய்யப்பன் தீர்மானங்களை வாசித்தார்.

<u>தீர்மானங்கள்</u>

கூட்டத்தில் ஜெயங் கொண்டம் பழுப்பு நிலக்கரி அனல்மின் திட்டத்தை உடனே தொடங்க வேண்டும். அரியலூர் ரெயில்நிலையத்தில் அனந்தபுரி, கன்னியாகுமரி, பாண்டியன், எக்ஸ்பிரஸ் ரெயில்கள் நின்றுசெல்ல நட வடிக்கை எடுக்க வேண்டும். திருமானூர் ஒன்றியத்தில் புள்ளம்பாடி வாய்க்கால் பாசன விவசாயிகளுக்கு ஏக்க ருக்கு ரூ.5ஆயிரம் வறட்சி நிவாரணம் வழங்க வேண் டும்.

கீழப்பழுவூர் ஆலந்துறை யார் கோவிலுக்கு சொந்தமான இடங்களில் உள்ள ஆக்கிரமிப் புகளை அகற்ற வேண்டும் என்பது உள்பட 14 தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டது.முடிவில் பொதுச்செயலாளர் வைரவேல் நன்றி கூறினார்.

**பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரியில் விளையாட்டு விழா**

பெரியகுளம்,

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே உள்ள தோட்டக்கலை கல் லூரியில் 23-ம் ஆண்டு விளையாட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் பொன்னுச்சாமி தலைமை தாங்கினார். மாணவர் மன்ற ஆலோசகர் ஜீவஜோதி வரவேற்றார். விளை யாட்டு மன்ற செயலாளர் மிதுன்குமார் ஆண்ட றிக்கை வாசித்தார்.

இணைச் செயலா ளர் அபிநயா உறுதி மொழியை ஏற்றுக் கொண்டார். விழாவில், கொடைக்கானல் மாவட்ட வன அலுவலர் வெங்கடேஷ் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் வழங்கினார். தனி நபருக்கான சாம்பியன் பட்டத்தை 4-ம் ஆண்டு மாணவர் பால கிருஷ்ணன், மகளிருக்கான தனிநபர் சாம்பியன் பட்டத்தை முதலா மாண்டு மாணவி சபிதா

ஆகியோர் பெற்றுக் கொண்டனர். குழு போட்டிக்கான சாம்பியன் பட்டத்தை திருப்பதி மற்றும் மாலதி ஆகியோர் பெற்றனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மாணவர் மன்ற செயலாளர் ஸ்ரீகாந்த் செய்திருந்தார். விழா முடிவில் விளையாட்டுத் துறை இயக்குனர் பார்த்திபன் நன்றி கூறினார்.

**பேரையூர் தாலுகாவில் 35,847 ஏக்கர் பயிர் பாதிப்பு 26,639 விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க பரிந்துரை விவசாயிகள் கணக்கில் வரவு வைக்கப்படும்**

மதுரை

பேரையூரில் 35 ஆயிரத்து 847 ஏக்கரில் பயிர்கள் கருகியதால், 26 ஆயிரத்து 639 விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அந்தந்த விவசாயிகளின் வங்கிக்கணக்கில் இழப்பீட்டுத்தொகை வரவு வைக்கப்பட உள்ளது.

<u>பொய்த்துப்போன பருவமழை</u>

கடந்த செப்டம்பர்–அக்டோபர் மாதங்களில் பெய்ய வேண்டிய மழை தமிழகத்தை முற்றிலும் ஏமாற்றிவிட்டது. அவ்வப்போது பெய்த பருவமழையை நம்பி பேரையூர் தாலுகா விவசாயிகள் மானாவாரியாக பருத்தி, பாசிப்பயறு, உளுந்தம்பயறு, மக்காச்சோளம், அவுரி மற்றும் தானிய வகைகளை விதைத்திருந்தனர்.

அக்டோபர் இறுதியிலும், நவம்பர் மாதத்திலும் பருவமழை நன்றாக பெய்து அதன்மூலம் கண்மாய்களுக்கு தண்ணீர் வரும், நீர்மட்டம் உயரும் என்று விவசாயிகள் நம்பினார்கள். பேரையூர் தாலுகாவில் பல இடங்களில் நெல் விதைப்பும் நடந்திருந்தது.

ஆனால் தொடர்ந்து மழை இல்லை. இதில் நெல் விவசாயம் பாதிக்கப்பட்டது மட்டுமின்றி, மானாவாரியும் பாதிக்கப்பட்டது. கண்மாய்கள் வறண்டு போயின. ஒட்டுமொத்தமாக வறட்சி வாட்டி எடுத்தது. விதைக்கப்பட்டிருந்த பயிர்கள் கருகின.

வாடும் பயிர்களை பார்த்து செய்தவதறியாமல் விவசாயிகள் கண்ணீர் விட்டனர். சுமார் 450 மில்லி மீட்டர் என்ற அளவிலேயே மழை பதிவாகியிருந்தது.

<u>பெரும் பாதிப்பு</u>

மழை பெய்து விடும் என்ற நம்பிக்கையில் இருந்த பணத்தையும் கடன்வாங்கியும் விவசாயிகள் விதைத்து வைத்திருந்தனர். கருகிய பயிர்களால் விளைச்சல் மட்டுமின்றி, விவசாயிகளின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டது.

இதனால் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். வறட்சி நிலை குறித்து தமிழக அரசின் துறைகள் ஆய்வு நடத்தின. வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, மற்றும் வருவாய்த்துறையினை கொண்டு கணக்கெடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் கடந்த டிசம்பர் மாதம் வறட்சி குறித்த அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டது. தற்போது அந்த அறிக்கை குறித்து முழுமையாக விசாரித்து நிவாரணம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளதாக தெரிகிறது.

<u>பாதிப்பு கணக்கெடுப்பு</u>

இந்த கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:– இறவையாக 5 ஆயிரத்து 616 ஏக்கரில் பயிரிடப்பட்ட நெல், கருகி 6 ஆயிரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மானாவாரியாக 19 ஆயிரத்து 355 ஏக்கரில் நாசமடைந்து, 29 ஆயிரத்து 178 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இறவை பயிர் 784 ஏக்கரில் வீணாகி, 781 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர பூக்கள், நெல்லி, மிளகாய், கத்திரி போன்ற பயிர்கள் குறைந்த அளவு நிலத்தில் பயிரிடப்பட்டிருந்தது. அதில் விளையாத பயிர்கள் 268 ஏக்கர் கணக்கிடப்பட்டு, 272 விவசாயிகள் நிவாரணத்திற்கு தகுதி உடையவர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஏக்கருக்கு எவ்வளவு?

பேரையூர் தாலுகா அளவில் மழை பொய்த்துப்போனதால், 26 ஆயிரத்து 639 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். 35 ஆயிரத்து 847 ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதுகுறித்த அறிக்கை மாவட்ட நிர்வாகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மானாவாரி பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம், நெல்லுக்கு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம், தோட்டக்கலை பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் வீதமும் இழப்பீடு வழங்கப்பட உள்ளது. அரசு உத்தரவு வந்ததும், இந்த இழப்பீடு தொகை விவசாயிகளின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வறட்சி பாதித்த பகுதிகளை பார்வையிட மத்திய நிபுணர் குழு மதுரை வருகை**

மதுரை, -

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததை தொடர்ந்து தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்படும் என்று முதல் அமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார். இதற்காக மத்திய அரசிடமும் நிதி உதவி கோரி உள்ளார்.இதையொட்டி மத்திய நிபுணர்கள் குழுவினர் தமிழகம் வந்தனர். இங்கு இரண்டு குழுக்களாக பிரிந்து தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்கு ஒரு குழுவும், மதுரை, விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு ஒரு குழுவும் செல்கின்றனர்.மதுரைக்கு இன்று மத்திய நிபுணர் குழு வருகின்றனர். காலை 9 மணியளவில் காளிகாப்பான் கிராமத்தில் தொடங்கப்பட்டுள்ள ‘அம்மா’ திட்டத்தை ஆய்வு செய்கின்றனர்.அதன்பின் சிவகங்கை செல்கின்றனர். நாளை (புதன்கிழமை) விருதுநகரில் விவசாய பகுதிகளை ஆய்வு செய்து விட்டு, மதுரைக்கு வருகின்றனர். அன்றைய தினம் மதுரை மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகளை ஆய்வு செய்கின்றனர்.

**சிவகங்கை மாவட்டத்தில் மத்திய அரசின் வறட்சி நிவாரண குழுவினர் ஆய்வு பாதிப்புகளை விவசாயிகளிடம் கேட்டறிந்தனர்**

சிவகங்கை,

சிவகங்கை மாவட்டத்தில் மத்திய அரசின் வறட்சி நிவாரண குழுவினர் நேற்று பார்வையிட்டு ஆய்வு நடத்தினர். பின் னர் வறட்சியினால் ஏற் பட்ட பாதிப்பு குறித்து அவர்கள் விவசாயி களிடம் கேட்டறிந்தனர்.

மத்திய நிவாரண குழு

தமிழகத்தில் நிலவும் வறட் சியை கணக்கிட மத்திய அர சின் அதிகாரிகள் கொண்ட வறட்சி நிவாரண குழு தமிழ கத்திற்கு வந்துள்ளது. 2குழுக் களாக இந்த குழுக்கள் பிரிந்து தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து தமிழ கத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி யின் பாதிப்பை நேரில் ஆய்வு செய்து வருகிறது.

மத்திய வேளாண் விற்பனை மைய சிறு விவசாயிகள் அமைப்பின் நிர்வாக இயக்கு நர் பிரவேஸ்சர்மா தலைமை யில் வந்த குழுவினர் சிவகங்கை மாவட்டத்தில் நேற்று சுற்றுப் பயணம் செய்தனர். இந்த குழுவில் திராஜ்காகாடியா, பாலசுப்பிரமணியன் மற்றும் ஹன்னா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இவர்களுடன் தமிழக அரசின் கூடுதல் செய லர் ஸ்ரீதர் மற்றும் நகராட்சி கால்நடைத்துறை, கூட் டுறவுத் துறை, ஊரகவளர்ச்சித் துறை, வேளாண்மைத்துறை உயர் அதிகாரிகளும் உடன் வந்த னர்.

மாவட்ட எல்லையான பூவந் தியில் இந்த குழுவினரை மாவட்ட கலெக்டர் ராஜா ராமன், கூடுதல் கலெக்டர் கிரண்குராலா ஆகியோர் வர வேற்று அழைத்து வந்தனர். இந்த குழுவினர் ஆலங்குளம் ஊராட்சி மகாசிவனேந்தல் கிராமத்தில் வறட்சியால் பாதிக் கப்பட்ட விவசாயிகளின் நிலங்களை பார்வையிட்ட னர்.

வறட்சியால் எவ்வளவு பாதிப்பு

அப்போது இந்த குழுவினர் விவசாயிகளிடம் எத்தனை ஏக்கரில் பயிர் செய்தனர், வறட்சியினால் எவ்வளவு பகுதி பாதிக்கப்பட்டுள்ளது. இந்த விவசாயிகளுக்கு மாநில அரசின் நிவாரண நிதி கிடைத் துள்ளதா அந்த நிதி எந்த முறையில் வழங்கப்பட் டுள் ளது என கேட்டறிந்த னர்.

பின்னர் விவசாயிகளின் வங்கி கணக்கு புத்தகத்தை வாங்கி அதில் நிவாரணநிதி வரவு வைக்கப்பட்டுள்ளதா என பார்வையிட்டனர். பின் னர் வறட்சி நிவாரண திட் டத்தில் பாண்டி என்ற விவ சாயி நிலத்தில் பண்ணை குட்டை அமைக்கப்படுவதை நேரில் சென்று பார்வையிட் டனர். பின்னர் சாத்தரன் கோட்டை யில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று பார்வையிட்டனர்.

தொடர்ந்து மல்லல் கிராமத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை பார்வையிட்ட குழு வினர் அங்கிருந்த அதிகாரி யிடம் விவசாயிகளுக்கு எந்த முறையில் கடன் வழங் கப் பட்டுள்ளது. பயிர்கடன், நகை கடன் எவ்வளவு வழங்கப் பட் டுள்ளது என கேட்டறிந் தனர்.

தீவனபுல்

மேலும் அந்த கிராமத்தில் கால்நடை பராமரிப்பு துறை மூலம் அமைக்கபட்டிருந்த முகாமை பார்வையிட்ட குழு வினர் வறட்சியை சமா ளிக்க கால்நடைக்கு தேவையான பசும் தீவனபுல் வழங்க எடுக் கப்பட்ட நடவடிக்கைகளை கேட்டறிந்தனர். பின் னர் மானிய விலையில் தீவன புல்லை வெட்டும் இயந்திரம் வழங்குவதையும், அந்த இயந்திரம் மூலம் வெட்டப் பட்ட புல்லை மாடுகள் சாப் பிடுவதையும் பார்வையிட்ட னர். இதன் பின்னர் செம் பனூர் கிராமத்திற்கு சென்ற வறட்சி நிவாரண குழுவினர் அங்கு நடைபெற்ற உழவர் பெருவிழாவில் கலந்து கொண் டனர். அத்துடன் அங்கிருந்த விவசாயிகளிடம் வறட்சியால் ஏற்பட்ட பாதிப்பு, குடிநீர் தட்டுப்பாடு அதை சரி செய்ய எடுக்க வேண்டிய நடவடிக் கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தனர். இதைபோல் இந்த குழுவினர் அதே கிராமத்தில் மகளிர் சுய உதவிகுழுவினரிடம் குறைகள் குறித்து கேட்டறிந்தனர். பின்னர் இந்த குழுவினர் ராம நாதபுரம் மாவட்டத்திற்கு புறப்பட்டு சென்றனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அதிகாரி தனபால், சிவகங்கை கோட்டாட்சியர் மலையாளம், வோண்மை இணை இயக்குநர் செல்லத் துரை, கால்நடை பாராமரிப்பு துறை இணை இயக்குநர் பாலகிருஷ்ணன், யூனியன் தலைவர்கள் செந்தில்நாதன், பாஸ்கரன், ஆரோக்கியம் மற் றும் அதிகாரிகன் உடன் சென் றனர்.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூடுதல் நிவாரணம் வழங்க வேண்டும் மத்திய குழுவினரிடம், காங்கிரஸ், விவசாயிகள் சங்கத்தினர் மனு**

சிவகங்கை,

வறட்சியால் பாதிக் கப்பட்ட அனைத்து விவ சாயிகளுக்கும்கூடு தலாக நிவாரண நிதி வழங்க வேண்டும் என்று மத்திய வறட்சி நிவாரண குழுவினரிடம் காங்கிரஸ் மற்றும் விவ சாயிகள் சங்கம் சார் பில் கோரிக்கை மனு கொடுக் கபட்டது.

அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம்

சிவகங்கை மாவட்டத்திற்கு வறட்சியை பார்வையிட வந்த மத்திய குழுவினரிடம் மாவட்ட காங்கிரஸ் தலைவர் ராஜ ரத்தினம், முன்னாள் எம். எல்.ஏக்கள் ராமசாமி, அருண கிரி ஆகியோர்

தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் கோரிக்கை மனு ஒன்று கொடுத் தனர். அதில் அவர்கள் கூறியிருப்பதாவது:-

சிவகங்கை மாவட்டம் மழையை நம்பி விவசாயம் செய்கிற மாவட்டம் ஆகும். இந்தாண்டு பருவ மழை பொய்த்து போனதால் மாவட்ட முழுவதும் விவ சாயம் பொய்த்து நஷ்டம் ஏற் பட்டுள்ளது. எனவே மாவட் டத்தில் உள்ள அனைத்து வரு வாய் கிராமத்திற்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண் டும்.

இந்த மாவட்டத்தில் பெரும் பான்மையான விவசாயம் நெல், மிளகாய், கடலை ஆகும். பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் கிடைக்க சரியான முறையான களஆய்வு விவசாயத் துறை யால் செய்து கணக்கெடுக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு ரூ.25ஆயிரம் வரை வறட்சி நிவாரணம் வழங்கவேண் டும். இவ்வாறு அவர்கள் அந்த மனுவில் கூறியிருந்தனர்.

விவசாயிகள் சங்கம்

இதுபோல தமிழ்நாடு விவ சாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஆதிமூலம் கொடுத்த மனுவில் கூறியுள்ள தாவது:-

சிவகங்கை மாவட்டத்தில் இந்தாண்டு 2 லட்சம் ஏக்கரில் நெல், மிளகாய், கரும்பு, வாழை, தென்னை, பயிறு வகைகள், எண்ணெய் வித்துக் கள் பயிரிடப்பட்டது. போதிய மழையின்மையாலும், மின் தடையாலும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததாலும் விவ சா யிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

எனவே தற்போது மாநில அரசு வழங்கி உள்ள ரூ.5ஆயி ரம் போதுமானதாக இல்லை. கடும் குடிநீர் தட்டுப்பாடும் நிலவுகிறது. எனவே மத்திய அரசு கூடுதல் வறட்சி நிவா ரண நிதி வழங்க வேண்டும். காவிரி, வைகை, குண்டாறு ஆகிய 3நதிகளை இணைக்க நிதி வழங்க வேண்டும். சோலார் மின்விளக்கு, ஆழ் குழாய் கிணறு மற்றும் பம்பு செட்டுகள் அமைக்க மானியம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர் அந்த மனுவில் கூறியி ருந்தார்.

100சதவீத இன்சூரன்ஸ்

இதுபோல தமிழ்நாடு விவ சாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் குணசேகரன் எம். எல்.ஏ, மாவட்ட தலைவர் கலையரசன் ஆகியோர் கொடுத்த மனுவில் கூறியுள்ள தாவது:-

இன்ஸ்சூரன்ஸ் திட்டத்தில் பதிவு செய்த அனைத்து விவ சாயிகளுக்கும் 100 சதவீதம் இன்ஸ்சூரன்ஸ் வழங்க வேண்டும். நன்செய் நிலத்திற்கு ஏக்கருக்கு ரூ.15ஆயிரமும், புன்செய் நிலத்திற்கு ரூ.10 ஆயிரமும் தரவேண்டும். மிளகாய் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.25ஆயிரம் வழங்க வேண் டும். பண்ணை குட்டைகள் வெட்ட கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். கண் மாய்களில் மடைக்கு ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்க வேண்டும். கூட்டுறவு கடன்களை ரத்து செய்ய வேண்டும் உள்பட பல கோரிக்கைகள் அந்த மனுவில் இடம் பெற்றிருந்தது.

இதுபோல் மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சி சார்பில் அதன் மாவட்ட செயலாளர் கந்த சாமி கொடுத்த மனுவில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூடுதல் நிவாரண நிதி வழங்க வேண் டும். குடிநீர் தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சியினால் வேலை தேடி வெளியிடங் களுக்கு செல்வதை தடுக்க வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும்

உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைள் அந்த மனுவில் இடம் பெற்றிருந்தன. இதை தவிர அந்த பகுதி விவ சாயிகள் சார்பில் வறட்சிக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும். குடிநீர் பிரச்சினை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 100நாட்கள் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் 200 நாட்களுக்கு வேலை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

**சிவகங்கை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.75 கோடி நிவாரண நிதி கலெக்டர் ராஜாராமன் தகவல்**

சிவகங்கை,

சிவகங்கை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு ரூ.75 கோடி நிவாரண நிதி வழங்கப்பட உள் ளது என்று கலெக் டர் ராஜாராமன் தெரிவித் தார்.

வறட்சி நிவாரணம்

சிவகங்கை மாவட்ட கலெக் டர் ராஜாராமன் நேற்று நிரு பர் களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதா வது:-

சிவகங்கை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயி களுக்கு வழங்குவதற்காக தமி ழக அரசு ரூ.75 கோடி வழங் கியுள்ளது. இந்த மாவட்டத்தில் நெல் மற்றும் மிளகாய் பயிர் பாதிப்படைந்தவர்களுக்கு இந்த நிவாரண தொகை வழங்கப்படும்.

நெற்பயிரை பொறுத்தவரை ஏக்கருக்கு ரூ.5ஆயிரமும், மிள காய் பயிரை பொறுத்தவரை ஏக்கருக்கு நஞ்சை பகுதிக்கு ரூ.4 ஆயிரமும், புஞ்சை பகுதிக்கு ரூ.3ஆயிரமும் வழங் கப்படும். இந்த தொகை சம் பந்தப்பட்ட விவசாயிகளின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்படும். மேலும் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் மாவட்டம் முழுவதும் 3 ஆயி ரம் இடங்களில் பண்ணை குட்டை அமைக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

ஆதார் அட்டை

ஆதார் அடையாள அட்டை எடுக்க விடுப்பட்டு போனவர்களுக்கு மீண்டும் எடுப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விடுப் பட்டு போனவர்கள் அந்தந்த பகுதி தாலுகா அலுவலகம் அல்லது கிராம நிர்வாக அலு வலங்களில் வழங்கப்படும் தேசிய மக்கள் தொகை பதி வேடு குடும்ப அட்டவணைக்கு உரியவிண்ணப்ப படிவங்களை பெற்று பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அவை களை பதிவு செய்து விடுப்பட்டு போனவர்களுக்கு ஆதார் அடையாள அட்டை வழங் கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**பாரம்பரிய விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் அமைச்சர் சுந்தர்ராஜன் பேச்சு**

பரமக்குடி,

பாரம்பரிய விவசாயத் துக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கருத்தரங்கில் அமைச்சர் சுந் தர்ராஜன் பேசினார்.

கருத்தரங்கு

பரமக்குடியில் வேளாண் துறை சார்பில் பாரம்பரிய பொருட்களின் மதிப்பு மற் றும் முக்கியத்துவம் குறித்த மாவட்ட அளவிலான விழிப்பு ணர்வு கருத்தரங்கு நடைபெற் றது. நிகழ்ச்சிக்கு கலெக்டர்

நந்தகுமார் தலைமை தாங்கி னார். முதுகுளத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் முருகன், மாவட்ட செயலாளர் ஜி.முனி யசாமி, நகரசபை தலைவர் கீர்த்திகா முனியசாமி, போக லூர் யூனியன் தலைவர் நாக நாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண் இணை இயக்குனர் சக்திமோகன் வர வேற்று பேசினார்.

கருத்தரங்கை தொடங்கி வைத்து அமைச்சர் சுந்தர்ரா ஜன் பேசியதாவது:- ராமநாத புரம் மாவட்டத்தில் 400 கிரா மங்களில் உழவர் பெருவிழா நடத்தப்படுகிறது. மக்களுக் காக அயராது உழைக்கும் முதல்-அமைச்சர் ஜெயல லிதா தான். கெமிக்கல் உணவுகளால் மக்களுக்கு பேராபத்து வருகிறது. முன்னோர்கள் பாரம்பரிய உணவுகளை சாப்பிட்டதால் நீண்ட ஆயு ளுடன் வாழ்ந்துள்ளனர். ஆனால் தற்போது கிராமங்க ளில் விவசாயம் குறைந்து வரு கிறது. விவசாயத்தை பாது காக்க வேண்டும். விவசாயி களை மேம்படுத்த வேண் டும் என்ற நோக்குடன் முதல்- அமைச்சர் ஜெயலலிதா திட் டங்களை செயல்படுத்தி வரு கிறார்.

உழவர் நலன்

பொதுமக்கள் வீடுகளில் காய்கறி தோட்டம் அமைக்க வேண்டும். அதன் மூலம் காய் கறி விலை குறைய வாய்ப்பு ஏற்படும். வறட்சி நிவாரண மாக 100 நாள் வேலையை 150 நாட்களாகவும், கூலியை ரூ.148 ஆகவும் முதல்- அமைச்சர் உயர்த்தி உள்ளார். உழவர் மற்றும் விவசாயிக ளின் நலன் கருதி உழவர் பாது காப்பு திட்டம் செயல்படுத் தப்பட்டுள்ளது. ராமநாதபு ரம் மாவட்டத்தில் 6 லட் சத்து 99 ஆயிரத்து 445 பேருக்கு உழ வர் அட்டையும், முதியோர், விதவைகள், மாற்றுத்திறனா ளிகளுக்கு ரூ.41 கோடியே 86 லட்சம் நிதியும் வழங்கப்பட் டுள்ளது. விவசாயிகளின் குழந்தைகள் கல்விக்காக ரூ.1 கோடியே 3 லட்சம் வழங்கப் பட்டுள்ளது.

விவசாயிகள் இறந்தால் ரூ.10 ஆயிரமும், விபத்தில் இற ந்தால் ரூ.1 லட்சமும் பாது காப்பு திட்டம் மூலம் வழங் கப்படும். விவசாயிகளை காக் கும் அரசாக அ.தி.மு.க. தலை மையிலான அரசு திகழ்கிறது. விவசாயிகள் குறுதானியங் கள் பயிரிட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசி னார். நிகழ்ச்சியில் மதுரை ஆராய்ச்சி நிலைய முதல்வர் பானுமதி, கடலோர உவர் ஆராய்ச்சி நிலைய தலைவர் கணேஷ்ராஜா, தோட்டக் கலை துணை இயக்குனர் இளங்கோவன், துணை இயக் குனர் ராஜகோபால் உள்பட பலர் கலந்து கொண்டனர். பரமக்குடி வேளாண்மை உதவி இயக்குனர் கண்ணையா நன்றி கூறினார்.

**வறட்சி பாதிப்பை மதிப்பிட்டு பாதிப்படைந்த விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் வழங்க கோரிக்கை**

விருதுநகர்,

வறட்சி பாதிப்பை மதிப் பிட்டு பாதிப்படைந்த அனைத்து விவசாயிகளுக் கும் நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயி கள் கலெக்டரி டம் கோரிக்கை மனு கொடுத் துள்ளனர்.

அறிவிப்பு

முதல்-அமைச்சர் ஜெய லலிதா சென்னையை தவிர பிற மாவட்டங்களை வறட்சி பாதிப்படை அடைந்த மாவட் டங்களாக அறிவித்து அந்த மாவட்டங்களில் வறட்சி பாதிப்பை கணக்கிட்டு அரசு அறிக்கை அனுப்பி வைக்குமாறு மாவட்ட நிர்வாகத்திற்கு உத் தரவிட்டார்.

மேலும் நிதி அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் அமைச்சர்கள் உயர்மட்ட குழுவினைஅனுப்பி வைத்து வறட்சி பாதிப்புபற் றிய விபரங்களை சேகரித்து அறிக்கை தருமாறு கேட்டுக் கொண்டார். இந்த அறிக்கை யின் அடிப்படையில் வறட்சி பாதிப்பின் அளவினை பொருத்து விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்கவும், உதவி தொகையினை அவர் களது வங்கி கணக்கில்நேரடி யாக வரவு வைக்கவும் உத்தர விடப்பட்டது. விருதுநகர் மாவட்டத்திற்கு வறட்சிநிவா ரண உதவி வழங்க ரூ.59கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு உள்ளது.

பாராமுகம்

ஆனால் பல கிராமங்களில் பயிர்சேதம் பற்றி மதிப்பீடுவதற்கு அதிகாரிகள் யாரும் வராமல் பாராமுகமாகவே இருந்து விட்டனர் என்று பரவலாக புகார் எழுந்துள்ளது. சாத்தூர் யூனியனில் உள்ள கண்மாய் சூரங்குடி, அருப்புக்கோட்டை யூனியனில் உள்ள ஆத்திப்பட்டி, நரிக்குடி, விருதுநகர் யூனியனில் உள்ள பெரிய பேராலி ஆகிய கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் நேற்று கலெக்டர் அலுவலகம் வந்து கலெக்டரிடம் கோரிக்கை மனு கொடுத்தனர்.

மதிப்பீடு

அதில் தங்கள் கிராமங்களுக்கு வருவாய் அலுவலர்களோ, தோட்டக்கலை மற்றும் விவசாய அலுவலர்களோ வந்து பயிர் சேதத்தை மதிப்பிட வில்லை என்றும் இரவை பாசனத்தின் மூலம் மக்காசோளம் சாகுபடி செய்த எங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும்,உடன டியாக எங்கள் பகுதி பாதிப் பினை மதிப்பீட்டு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரி உள்ளனர்.

மனுக் களை பெற்றுக் கொண்ட கலெக் டர் ஹரிஹரன் இது பற்றி உரிய நட வடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். இந்த நிலை யில் மத்திய அரசின் நிபுணர் குழு நாளை விருதுநகர் மாவட்டத் தில் வறட்சி பாதிப்பு அடைந்த பகுதிகளை பார்வையிட வரு கிறது.

**வறட்சி பாதிப்பை மதிப்பிட்டு பாதிப்படைந்த விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் வழங்க கோரிக்கை**

விருதுநகர்,

வறட்சி பாதிப்பை மதிப் பிட்டு பாதிப்படைந்த அனைத்து விவசாயிகளுக் கும் நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயி கள் கலெக்டரி டம் கோரிக்கை மனு கொடுத் துள்ளனர்.

அறிவிப்பு

முதல்-அமைச்சர் ஜெய லலிதா சென்னையை தவிர பிற மாவட்டங்களை வறட்சி பாதிப்படை அடைந்த மாவட் டங்களாக அறிவித்து அந்த மாவட்டங்களில் வறட்சி பாதிப்பை கணக்கிட்டு அரசு அறிக்கை அனுப்பி வைக்குமாறு மாவட்ட நிர்வாகத்திற்கு உத் தரவிட்டார்.

மேலும் நிதி அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் அமைச்சர்கள் உயர்மட்ட குழுவினைஅனுப்பி வைத்து வறட்சி பாதிப்புபற் றிய விபரங்களை சேகரித்து அறிக்கை தருமாறு கேட்டுக் கொண்டார். இந்த அறிக்கை யின் அடிப்படையில் வறட்சி பாதிப்பின் அளவினை பொருத்து விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்கவும், உதவி தொகையினை அவர் களது வங்கி கணக்கில்நேரடி யாக வரவு வைக்கவும் உத்தர விடப்பட்டது. விருதுநகர் மாவட்டத்திற்கு வறட்சிநிவா ரண உதவி வழங்க ரூ.59கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு உள்ளது.

பாராமுகம்

ஆனால் பல கிராமங்களில் பயிர்சேதம் பற்றி மதிப்பீடுவதற்கு அதிகாரிகள் யாரும் வராமல் பாராமுகமாகவே இருந்து விட்டனர் என்று பரவலாக புகார் எழுந்துள்ளது. சாத்தூர் யூனியனில் உள்ள கண்மாய் சூரங்குடி, அருப்புக்கோட்டை யூனியனில் உள்ள ஆத்திப்பட்டி, நரிக்குடி, விருதுநகர் யூனியனில் உள்ள பெரிய பேராலி ஆகிய கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் நேற்று கலெக்டர் அலுவலகம் வந்து கலெக்டரிடம் கோரிக்கை மனு கொடுத்தனர்.

மதிப்பீடு

அதில் தங்கள் கிராமங்களுக்கு வருவாய் அலுவலர்களோ, தோட்டக்கலை மற்றும் விவசாய அலுவலர்களோ வந்து பயிர் சேதத்தை மதிப்பிட வில்லை என்றும் இரவை பாசனத்தின் மூலம் மக்காசோளம் சாகுபடி செய்த எங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும்,உடன டியாக எங்கள் பகுதி பாதிப் பினை மதிப்பீட்டு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரி உள்ளனர்.

மனுக் களை பெற்றுக் கொண்ட கலெக் டர் ஹரிஹரன் இது பற்றி உரிய நட வடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். இந்த நிலை யில் மத்திய அரசின் நிபுணர் குழு நாளை விருதுநகர் மாவட்டத் தில் வறட்சி பாதிப்பு அடைந்த பகுதிகளை பார்வையிட வரு கிறது.

**2 லட்சம் பேருக்கு வறட்சி நிவாரணத்தொகை கலெக்டர் ஆஷிஷ்குமார் தகவல்**

தூத்துக்குடி,

தூத்துக்குடி மாவட்டத்தில் 2 லட்சம் பேருக்கு வறட்சி நிவாரணத்தொகை வழங்கப்பட உள்ளது என்று கலெக்டர் ஆஷிஷ்குமார் தெரிவித்தார்.

விவசாயிகள் கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று காலை நடந்தது. கூட்டத்துக்கு கலெக் டர் ஆஷிஷ்குமார் தலைமை தாங்கினார். கூட்டத்தில் வறட்சி நிவாரணத் தொகையை வழங்குவது, தீவனச் சோளம் மானிய விலையில் பயிரிடும் திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:-

ராஜேந்திரன்: பாசனப்பகுதியும் பாதிக்கப்பட்டு உள்ளது. அதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அய்யலுசாமி: பயிர் காப்பீடு திட்டத்தில் உள்ளவர்களுக்கு ஏற்கனவே வங்கி கணக்கு உள்ளது. அவர்கள் அதே வங்கி கணக்கில் நிவாரணத்தொகையை செலுத்த வேண்டும். சில இடங்களில் விவசாய நிலங்கள் பிளாட்டுகளாக மாற்றப்பட்டு உள்ளன. நிவாரணம் பெறும் விவசாயிகளின் பட்டியலை வெளியிட வேண்டும்.

விவசாயி: விவசாயம் செய்தவர்களுக்கு மட்டுமே நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டும்.
கலெக்டர்: முதலில் பிரச்சினை இல்லாத பகுதிகளுக்கு விரைந்து வழங்கப்படும். தொடர்ந்து சில பிரச்சினைகள் இருக்கும் இடங்களில் ஆய்வு செய்து வழங்கப்படும்.

பட்டியல்

விவசாயி: நிவாரணம் பெறும் விவசாயிகளின் பட்டியலை கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் ஒட்ட வேண்டும்.

கலெக்டர்: பட்டியல் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், பஞ்சாயத்து அலுவலகம், தாலுகா அலுவலகம், கலெக்டர் அலுவலகத்திலும் வைக்கப்படும்.

கே.பி.பெருமாள்: தீவனப்பயிர்கள் தண்ணீர் வசதி உள்ள இடங்களில்தான் பயிரிட முடியும். அதன் மூலம் ஏற்படும் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும். தீவனப்பயிர்கள் நோயால் பாதிக்கப்பட்டால் என்டோசல்பான் மருந்து தெளிக்க வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. இந்த மருந்து அரசால் தடை செய்யப்பட்ட மருந்து. அதனை அரசு ஊக்கப்படுத்துவது சரியானது அல்ல. வறட்சி நிவாரணமாக பெரிய தொகை கிடைத்து உள்ளது. இறவை சாகுபடி செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெயரை பதிவு செய்ய முடியாது என்று கூறுகிறார்கள். இதனை சரி செய்ய வேண்டும். நிவாரணம் பெறுபவர்கள் பட்டியல் வெளியிடப்பட்ட ஒரு வார காலத்துக்கு பிறகுதான் பணத்தை வழங்கினால் சிறப்பாக அமையும். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் புதிய கணக்கு தொடங்கினால் பாஸ் புத்தகம் இல்லை என்று கூறுகிறார்கள்.

வங்கி கணக்கு

கலெக்டர்: ஏற்கனவே வங்கி கணக்கு இருந்தால் அவர்கள் புதிய வங்கி கணக்கு தொடங்க தேவை இல்லை. பாஸ் புத்தகம் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இறவை சாகுடி செய்து பாதிக்கப்பட்டு இருந்தாலும் அவர்களுக்கும் நிவாரணத் தொகை வழங்கப்படும். மேலும் வறட்சி நிவாரணம் குறித்து ஆய்வு செய்ய மத்திய குழு வருகிறது. இவர்கள் கீழ ஈரால், மேலஈரால், எப்போதும் வென்றான் ஆகிய பகுதிகளில் ஆய்வு செய்ய உள்ளனர்.

இவ்வாறு கலெக்டர் ஆஷிஷ்குமார் கூறினார்.

நிவாரணத் தொகை

தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறும் போது, தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு முதல்-அமைச்சர் ரூ.103 கோடியே 91 லட்சம் நிவாரணத் தொகை வழங்கி உத்தரவிட்டு உள்ளார்.

இதன் மூலம் 1 லட்சத்து 95 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுவார்கள். இந்த தொகை இன்னும் 2 அல்லது 3 வாரங்களில் வழங்கப்படும். வறட்சி காலத்தில் கால்நடை தீவனங்கள் பற்றாக்குறை ஏற்படும். இதனை சமாளிக்க தூத்துக்குடி மாவட்டத்தில் 800 ஏக்கரில் தீவன சோளம் பயிரிட அனுமதிக்கப்பட்டு உள்ளது. இதற்காக 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது என்றார்.

**குமரி மாவட்ட குளங்களில் விவசாயிகள் மணல் எடுக்க அனுமதிக்க வேண்டும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கோரிக்கை**

கன்னியாகுமரி

குமரி மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளர் என்.முருகேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

குமரி மாவட்டத்தில் பாரம்பரியம் மிக்க ஆயிரக்கணக்கான குளங்கள் பொதுப்பணித்துறைக்கு சொந்தமாக உள்ளன. கடந்த காலங்களில் விவசாயிகள் குளங்களை தங்கள் வாழ்வாதாரத்தின் முக்கிய பங்காக கருதினர். மக்கள் குளிக்கவும், ஆடு, மாடுகளை குளிப்பாட்டவும் பயன்படுத்தினர். மேலும் குளங்களின் பாதுகாப்பை விவசாயிகள் தங்கள் பொறுப்பில் வைத்திருந்தனர். இதனால்

தங்கள் விளைநிலங்களுக்கு வண்டலை எடுத்துச்செல்லும் பழக்கம் இருந்தது. இதனால் குளங்கள் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் இருந்து பாதுகாக்கப்பட்டது.

தற்போது கிராமங்களில் விவசாயம் இல்லாமையாலும், மக்கள் குளிப்பதற்கு போகாமையாலும் பராமரிப்பின்றி குளங்கள் காணாமல் போய்விட்டது. விவசாயிகள் வண்டல் எடுக்கக்கூடாது என கனிம வளத்துறை உத்தரவிட்டதாலும் குளங்கள் மண் நிரம்பி தண்ணீர் தேங்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் மழைநீரில் மூன்றில் 2 பகுதி கடலுக்குள் வீணாக சென்று விடுகிறது. எனவே, தமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும் வியாபார நோக்கமில்லாமல் விவசாயிகள் தங்கள் சொந்த தேவைக்காக மண் எடுப்பதை அனுமதித்து குளங்களை ஆழப்படுத்த வேண்டும். பேச்சிப்பாறை அணையை தூர்வாரி அரசு மணல் குடோன் அமைத்து குமரி மாவட்ட மக்களுக்கு கட்டுமான பணிகளுக்கு தேவையான மணலை நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய மாவட்ட நிர்வாகத்தை கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**குமரி மாவட்டத்தில் பரவலாக மழை குருந்தங்கோட்டில் 68 மி.மீட்டர் பதிவு**

கன்னியாகுமரி

குமரி மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது. குருந்தங்கோட்டில் 68 மி.மீட்டர் மழை பதிவாகி இருந்தது.

<u>மின்னல் தாக்கி 2 பேர் பலி</u>

குமரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பரவலாக மழை பெய்தது. தக்கலை அருகே உள்ள காடுவெட்டி பகுதியில் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டிடத்தில் வயரிங் வேலை நடந்தது. அப்போது மின்னல் தாக்கியதில் பூதப்பாண்டி அருகே உள்ள கடுக்கரையை சேர்ந்த குமாரபிள்ளை (வயது 36), குலசேகரபுரத்தை சேர்ந்த சங்கர் (20) ஆகியோர் பரிதாபமாக இறந்தனர்.

<u>குருந்தங்கோட்டில் 68 மி.மீட்டர்</u>

குமரி மாவட்டத்தில் அதிகபட்சமாக குருந்தங்கோட்டில் 68.4 மி.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் பிறபகுதிகளில் பதிவாகி உள்ள மழையின் அளவு மி.மீட்டரில் வருமாறு :–

அடையாமடை 67, மாம்பழத்துறையாறு 64, ஆனைகிடங்கு 62, கொட்டாரம் 61.8, பூதப்பாண்டி 50.8, திற்பரப்பு 50, கோழிப்போர்விளை 50, நாகர்கோவில் 48.2, திருவட்டார் 37, மயிலாடி 36.2, கன்னிமார் 32.7, இரணியல் 27.4, சுருளோடு 23, ஆரல்வாய்மொழி 20.2, குளச்சல் 18.6, புத்தன் அணை 15.8, பெருஞ்சாணி 15.6, பேச்சிப்பாறை 12.4, சிற்றாறு–2 8.2, பாலமோர் 8, முள்ளங்கினவிளை 6, சிற்றாறு–1 6.4 என பதிவாகி உள்ளது.

தினகரன்

**எங்கே விவசாயி**

முதன்முறையாக விவசாயிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. 2001ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏறக்குறைய 1 கோடி பேர் விவசாயத்தை கைவிட்டுள்ளனர். மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரம் இது. ஆதாயம் தரும் தொழிலாக இருந்த விவசாயம் மாறிவிட்டது. எத்தனை இடர்பாடுகள் உண்டோ அத்தனையுமஂ இதில் இருக்கிறது. மழை பெய்தாலும் பிரச்னை, பெய்யா விட்டாலும் பிரச்னை, காற்றடித்தாலுமஂ பிரச்னை, அடிக்காவிட்டாலும் பிரச்னை என பல இடையூறுகள். இத்தனையும் தாண்டி லாபம் பார்ப்பது கஷ்டமான காரியம். அதனால்தான் விவசாயிகள் பலர் நிலங்களை விற்றுவிட்டு விவசாயத்துக்கு முழுக்குப்போட்டு வருகின்றனர்.

கடந்த 50 ஆண்டுகளாகவே இந்த நிலைமைதான். ஆனால் மக்கள்தொகை பெருக்கம் அதிகமாக இருந்ததால், விவசாயத்தை கைவிடுவோர் எண்ணிக்கை வெளியில் தெரியாமல் இருந்தது. இப்போது ம.தொ. பெருக்கம் குறைந்திருப்பதால் முதன்முறையாக விவசாயிகள் எண்ணிக்கை பெரிதும் குறைந்திருக்கிறது.

விவசாயிகளின் எண்ணிக்கை 11.90 கோடியாக உள்ளது. தொழிலாளர்கள் எண்ணிக்கையில் விவசாயிக்கு இரண்டாவது இடம். 2001ம் ஆண்டுடன் ஒப்பிட்டால் 7 சதவீதம் குறைந்துள்ளது. அதே நேரம் விவசாய தொழிலாளர்களின் எண்ணிக்கை 26.5 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதாவது 14 கோடியே 40 லட்சம் பேர். சொந்த விவசாயம் செய்தவர்கள் நிலத்தை விற்றுவிட்டு, விவசாயக் கூலிகளாக மாறியதால் இந்த நிலைமை. விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் சேர்த்து மொத்தம் 26.30 கோடிப் பேர் இன்னமும் மண்ணையும் மழையையும் நம்பித்தான் பிழைப்பு நடத்தி வருகிறார்கள்.

ஒரு பக்கம் விவசாய நிலம் குறைந்து கொண்டே போகிறது. காரணம் நஞ்சையும் புஞ்சையும் வீட்டடி மனைகளாக மாறுகின்றன. இன்னொரு புறம் கூலிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வேலை வாய்ப்பு குறைந்து தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, வருமானம் குறையும். ஏற்கனவே விவசாய கூலித் தொழிலாளர்கள் வேறு தொழிலுக்கு போவது அதிகமாக உள்ளது. இந்த வேகம் இன்னும் கூடும். அப்போது ந¤லத்திலும் களத்து மேட்டிலும்

இயந்திரங்களை மட்டுமே காண முடியும். மக்கள் தொகை குறைந்த நாடுகளுக்கு வேண்டுமானால் அது நன்றாக இருக்கலாம். இந்தியாவுக்கு இருக்காது.

**காவிரி வாரியம் குறித்து 2 நாளில் அறிவிப்பு**

புதுடெல்லி : காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் தேதி குறித்து வரும் 10ம் தேதிக்குள் மத்திய அரசு தெரிவிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி, காவிரி நடுவர்மன்ற இறுதி தீர்ப்பு கடந்த பிப்ரவரி 19ம் தேதி அரசிதழில் வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து, காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப் பில் கூறப்பட்டுள்ளபடி, உடனடியாக ஆணையம் மற்றும் குழுவை அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழக அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பாக, மத்திய அரசு மற்றும் கர்நாடகா, கேரளா, புதுச்சேரி மாநில அரசுகளிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்ப உச்சநீதிமன்றம் பிப்ரவரி 22ம் தேதி உத்தரவிட்டது. இந்நிலையில், மத்திய அரசு தாக்கல் செய்திருந்த பதில் மனுவில், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் பணி தொடங்கி விட்டதாகவும், கர்நாடகா தேர்தல் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதைய டுத்து, இவ்வழக்கு நீதிபதிகள் ஆர்.எம். லோதா, எஸ்.ஏ.பாப்டே ஆகியோர் அடங்கிய பெஞ்ச் முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது.

தமிழக அரசு சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் சி.எஸ்.வைத்தியநாதன், ‘ஜூன் மாதத்தில் பயிர் சாகுபடி தொடங்க உள்ள நிலையில் அதற்கு முன்பு இந்த 2 ஆணையங்களையும் அமைத்தால்தான் காவிரி நீரை பகிர்ந்து கொள்ள ஏதுவாக அமையும். எனவே, உடனடியாக அவற்றை அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்’ என்று வாதாடினார்.

இதையடுத்து, காவிரி மேலாண்மை வாரியம், ஒழுங்குமுறை குழு அமைக்கும் தேதி குறித்து வரும் 10ம் தேதிக்குள் தெரிவிக்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை 10ம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.

**டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில் மத்திய குழு விறுவிறுப்பான ஆய்வு**

மதுரை: பருவமழை பொய்த்ததால் தமிழகத்தில் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு சென்னை தவிர்த்து 31 மாவட்டங்களையும் வறட்சி பகுதியாக அறிவித்தது. வறட்சியை சமாளிக்க ஸீ20 ஆயிரம் கோடி நிதி வழங்கும்படி மத்திய அரசிடம் தமிழக அரசு கோரியது. தமிழகத்தில் வறட்சி பாதிப்பை ஆய்வு செய்ய மத்திய அரசு உயர் அதிகாரிகள் 10 பேர் கொண்ட குழுவை நேற்று அனுப்பியது. இக்குழு 2 பிரிவாக டெல்டா மற்றும் தென்

மாவட்டங்களில் ஆய்வு செய்கின்றனர். துரை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் ஆய்வு செய்ய வந்த குழுவுக்கு வேளாண்துறை நிர்வாக இயக்குனர் பரவேஸ் சர்மா தலைமை தாங்கினார். இதில் மத்திய ஊரக வளர்ச்சித்துறை இயக்குனர் திராஜ் காக்காடியா, மத்திய குடிநீர் வடிகால் அமைச்சக துணை ஆலோசகர் பாலசுப்ரமணியன், மத்திய வேளாண்துறை உதவி ஆணையர் கண்ணா மற்றும் உணவு வழங்கல் துறை உறுப்பினர் செயலர் தாமரைக்கண்ணன் ஆகிய 5 பேர் இடம்பெற்றுள்ளனர். இக்குழு முதல் கட்டமாக நேற்று மதுரையில் வைகை ஆற்றை பார்வையிட்டது. பின்னர் ஒத்தக்கடை, காளிகாப்பான் சென்று தமிழக அரசின் அம்மா திட்ட செயல்பாடுகளை ஆய்வு செய்தனர். உடன் மதுரை கலெக்டர் அன்சுல்மிஸ்ரா உட்பட பல்வேறு துறை அதிகாரிகள் இருந்தனர்.

சிவகங்கை: சிவகங்கை மாவட்டம் வந்த குழுவினர் மகாசிவனேந்தல், ஆலங்குளத்தில் பண்ணை குட்டை, சாத்தரசன்கோட்டை, செம்பனூர், மகளிர் சுயஉதவி குழுக்கள் கூட்டத்தில் பங்கேற்று விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தனர். கலெக்டர் ராஜாராமன், கூடுதல் கலெக்டர் கிரண்குராலா உடனிருந்தனர்.ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலம் அருகே பல கிராமங்களில் வறண்டு கிடந்த விவசாய நிலங்கள், சேதமடைந்த பயிர்களை பார்வையிட்டனர். உடன் ராமநாதபுரம் கலெக்டர் நந்தகுமார் இருந்தார். மேற்கண்ட இடங்களில் மத்தியக்குழு சந்தித்த பெரும்பாலான விவசாயிகள் பயிர்க் கடன் வழங்கி பல வருடங்கள் ஆகிய விட்டதாகவும், கடும் குடிநீர் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வால் தவிப்பதால் ஏக்கருக்கு ஸீ20 ஆயிரத்திற்கும் குறையாமல் நிவாரணம் வழங்க வேண்டும். விவசாயிகளின் குறைகளை அதிகாரிகள் கண்டுகொள்வதில்லை என்றும் கேட்டு கொண்டனர். குடும்ப வறுமையை போக்க கிடைத்த வேலைக்கு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் பலரும் கண்ணீர்மல்க தெரிவித்தனர்.டெல்டா மாவட்டங்கள்: டெல்டா மாவட்டங்களுக்கு சென்ற ஒரு குழு திருச்சியில் கள ஆய்வை துவக்கியது. இதற்கு மத்திய அரசின் விவசாயம், திட்டமிடுதல் துறை துணை ஆலோசகர் மணிஷ் சவுத்ரி தலைமை தாங்கினார். இதில் புகையிலை வளர்ச்சி வாரிய இயக்குனர்(பொ) மனோகரன், நிதித்துறை துணை இயக்குனர்(செலவினம்) ஸ்ரீகாந்த் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர்.

டெல்டா மாவட்டங்களில் இக்குழுவினர் நேற்று முதல் நாள் ஆய்வு பணியை துவக்கினர். திருச்சி அடுத்த பனையக்குறிச்சியில் நடந்த உழவர் பெருவிழாவில் பங்கேற்றனர். பின்னர், கீழமுல்லைக்குடி சென்ற குழுவினர், அங்கு பயிரிடப்பட்டு காய்ந்து கருகிப்போன வாழைப்பயிர்களை பார்வையிட்டனர். அதன்பின் வேங்கூரில் விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தனர். மேலும் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.தஞ்சை: தஞ்சை மாவட்டத்தில் வல்லம் அடுத்த மொன்னையம்பட்டியில் பசுந்தீவன புல் சாகுபடியை பார்வையிட்ட குழுவினர், புதுகல்விராயன்பேட்டை, சித்திரக்குடி மற்றும் கள்ளப்பெரம்பூர் ஏரியை பார்வையிட்டனர்.

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில் வடுவூர் அக்ரஹாரத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சென்று விவசாயிகளை சந்தித்தனர். பின்னர் மன்னார்குடி, முத்துப்பேட்டை வழியாக பாண்டி கிராமத்திற்கு சென்றனர். கள்ளிக்குடி, கீழபாண்டி, சிங்களாந்தி, பாமணி உள்ளிட்ட இடங்களில் விவசாயிகள் மதியம் 2 மணி முதல் காத்திருந்தனர். ஆனால், மத்திய குழுவினர் இரவு 7.30க்கு மேல் சென்றனர். தரிசு நிலங்கள், வறண்ட குளங்கள், பட்டுப்போன தென்னை மரங்கள் போன்றவற்றை அதிகாரிகள் முழுமையாக பார்வையிடவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டினர்.

**முட்டை விலை 262 காசுகளாக நிர்ணயம்**

நாமக்கல் : நாமக்கல் மண்டலத்தில் நேற்று முட்டை விலையில் 2 காசுகள் உயர்த்தப்பட்டு ஒரு முட்டையின் பண் ணை கொள்முதல் விலை 262 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த 4 நாட்களில் முட்டை விலை 50 காசு வரை குறைக்கப்பட்டது. தற்போது, பிற மண்டலங்களில் முட்டை விலை உயர்ந்துள்ளதால், இனி நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலையை குறை ப்பதில்லை என்பதை உணர்த்தும் வகையில் 2 காசு உயர்த்தப்பட்டுள்ளதாக தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு தெரிவித்துள்ளது.

ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.55 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.63 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. முட்டை விலை விபரம்(பைசாவில்) வருமாறு: பெங்களூர், 260, மைசூர், 255, ஐதராபாத், 215, மும்பை, 252, விஜயவாடா, 217, கொல்கத்தா, 267, பர்வாலா, 224, டெல்லி, 235 காசுகள்.

**தேங்காய் எண்ணெய் விலை தமிழகம், கேரளாவில் சரிவு**

கொச்சி: சர்வதேச சந்தையில் பாமாயில் உள்பட எண்ணெய் விலை சரிவடைந்ததால், தமிழகம் மற்றும் கேரளாவில் தேய்காய் எண்ணெய் விலையும் குறைந்துள்ளது. கேரளாவில் ஒரு கிலோ ரூ.63க்கு விற்பனையான தேங்காய் எண்ணெய் தற்போது ரூ.61.50 ஆக குறைந்துள்ளது.

தமிழ்நாட்டில் ரூ.60லிருந்து ரூ.58 ஆக குறைந்துள்ளது. இதுகுறித்து, தேங்காய் எண்ணெய் வணிகர்கள் சங்க துணைத் தலைவர் பிரகாஷ் ராவ் கூறுகையில், ‘‘தேங்காய் எண்ணெய்க்கு முக்கிய மாற்றாக பாமாயில் விளங்குகிறது. தற்போது பாமாயில் விலை கிலோ ரூ.48 ஆக குறைந்துள்ளது. இதனால் தொழிற்சாலைகள், பேக்கரிகளில் பெரும்பாலானோர் பாமாயிலை வாங்கத் தொடங்கிவிட்டனர். இதனால் தேங்காய் எண்ணெய் தேவை குறைந்து விலை சரிவடைந்துள்ளது‘‘ என்றார்.

**வறட்சி பாதிப்பு குறித்து 3 மாவட்டங்களில் இன்று மத்திய குழு 2ம் நாளாக ஆய்வு**

மதுரை, : வறட்சி பாதி ப்பு குறித்து 2வது நாளாக மத்திய குழுவினர் இன்று தூத்துக்குடி, விருதுநகர், மதுரை ஆகிய மாவட்டத் தில் ஆய்வு செய்கின்றனர்.
தென் மாவட்டங்களில் வறட்சியை ஆய்வு செய்ய மத்திய அரசு குழுவை அனு ப்பியுள்ளது. இக்குழு வின் தலைவரான வேளா ண் துறை நிர்வாக இயக்கு னர் பரவேஸ் சர்மா தலைமையி லான குழுவினர் நேற்று மது ரை, விருதுநகர், ராமநாதபுரம் மாவட்டத் தில் ஆய்வு செய்தனர். இரவு தூத்துக் குடி சென்று தங்கினர்.
இன்று காலையில் தூத்துக்குடி மாவட்டத்தில் எப்போதும்வென்றான், கீழ ஏரல், மேலஏரல் ஆகிய பகுதிகளில் வறட்சி பாதிப்பு களை பார்வையிட்ட பின் மதியம் விருதுநகர் மாவட்டம் வருகின்றனர். அங்கு சாத் தூர் தாலுகாவில் உள்ள நல்லி கிராமத்தில் கால்நடை மருத் துவ முகாம், சோளப்பயிர் அபிவிருத்தி திட்டம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், விவ சாய பண்ணைக்குட்டை உள்ளிட்ட பல்வேறு திட்டப்பணிகளை ஆய்வு செய்கின்றனர். அங்குள்ள மகளிர் சுயஉதவிக் குழுவினருடன் விவாதித்த பின் பெத்துரெட்டியபட்டி செல்கின்றனர். அங்கு ஊரணி ஆழப்படுத்துதல், குடிநீர் சுத்திகரிப்பு திட்ட த்தை பார்வையிடுகின்றனர்.
பின்பு மாலையில் மீண் டும் மதுரை மாவட்டத்தில் கள்ளிக்குடி அருகேயுள்ள மையிட்டான்பட்டி கிராமத்திற்கு வருகின்றனர். அங்கு பாதிக்கப்பட்ட பருத்தி, பயி றுவகை பயிர் களை ஆய்வு செய்யும் இக்குழுவினர் அதே கிராமத் தில் கண்மாய் ஆழப்படுத் தும் பணி, கால் நடை மருத்துவ முகாமை பார்வையிடுகின்றனர்.
பின்னர் திருமங்கலம் தாலுகா சிலார்பட்டியில் பாதிக்கப்பட்ட தோட்டப்பயிர்களையும், நல்லமரம் கிராமத்தில் புதிய ஆழ்குழாய் கிணற்றையும் பார்வையிடுகின்றனர்.
மூலக்கரையில் மாநகராட்சி சார்பில் அமை க்கப்பட்டுள்ள ஆழ்குழாய் மோட்டார் திட்டத்தை பார்வையிடுகின்றனர். அங்கிரு ந்து விமான நிலையம் செல் லும் குழுவினர், அங்கே யே மாவட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியபின் சென்னை செல்கின்றனர்.

**விவசாயிகளிடம் அதிகாரிகள் சரமாரி கேள்வி**

மாநில அரசும், அதிகாரிகளும் வறட்சி குறித்து அளித்துள்ள விபரங்கள் சரிதானா என்பதை அறிந்துகொள்ளும் வகையில் நிவாரண குழுவினர், விவசாயிகளிடம் சரமாரியாக கேள்விகளை கேட்டனர். மழையில்லாததால் தண்ணீர் மட்டம் எந்தளவிற்கு கீழே இறங்கியது, இதற்கு முன் நீர்மட்ட அளவு, எந்தெந்த விவசாயத்தில் பாதிப்பு எவ்வளவு, மாற்று பயிர் விவசாயம் நடந்ததா, விவசாயம் இல்லாததால் உணவிற்கு என்ன செய்கிறீர்கள், என்ன மாற்று வேலை செய்கிறீர்கள் என சரமாரியாக கேள்விகளை கேட்டு பதில்களை பெற்றனர்.
மேலும், வறட்சி குறித்து அரசு அறிவித்ததா, எந்த அதிகாரி நிலத்தில் வறட்சியை கணக்கீடு செய்தார், கூட்டுறவு வங்கியில் உறுப்பினரா, கடன் வாங்கியவரா, நகைக்கடனா அல்லது விவசாய கடனா, வட்டி சதவீதம் என்ன, வறட்சியால் கால்நடைகளை எப்படி வளர்க்கிறீர்கள், தண்ணீருக்கு என்ன செய்கிறீர்கள் என்றும் பல கேள்விகளை கேட்டனர். அனைத்து

கேள்விகளுக்கும் காளிகாப்பானை சேர்ந்த விவசாயி சரஸ்வதி, மணி, ஊராட்சி தலைவர் அரசு ஆகியோர் பதில் அளித்தனர்.

வறட்சி நிவாரணம் குறித்து விவசாயிகளுடன் கலெக்டர் ஆலோசனை

மதுரை,: வறட்சி நிவாரணம் குறித்து விவசாயிகளுடன் மதுரை கலெக்டர் ஆலோசனை நடத்தினார்.

மதுரை மாவட்ட வறட்சி நிலை குறித்து கலெக்டர் அன்சுல் மிஸ்ரா ஏற்கனவே தமிழக அரசுக்கு அறிக்கை அளித்துள்ளார். இதன்பின் தமிழக அரசு சார்பில் ஆய்வுக்குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். தற்போது மத்திய ஆய்வுக்குழுவினர் தென் மாவட்ட வறட்சிநிலை குறித்து ஆய்வில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் மதுரை மாவட்டத்தில் வழங்கவேண்டிய வறட்சி நிவாரணம் குறித்து கலெக்டர் முன்னோடி விவசாயிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார். இதில் மத்திய அரசு நிவாரணத்தின் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு 'விதைப்பை' வழங்கும் திட்டத்தை முன்வைத்துள்ளதாக கூறினார். இதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். நிவாரணத்தை பணமாக மட்டுமே வழங்க வேண்டும் என வலியுறுத்தினர். இனிவரும் காலங்களில் வறட்சியை சமாளிக்க கிராமங்கள் தோறும் சமுதாய கிணறுகள் அமைக்கும் திட்டத்தை ஊக்கப்படுத்துவது குறித்து கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

**விவசாயிகளுக்கான பண்ணை தொழில்நுட்பவியல் பட்டப்படிப்பு**

கோவை, : வேளாண் பல்கலைக்கழகத்தில் உழவர்களுக்கான பண்ணைத் தொழில்நுட்பவியல் பட்டப்படிப்பில் உழவர்கள் சேர்க்கை வரும் ஜூன் மாதம் துவங்க உள்ளதாக வேளாண்மை பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:கோவை வேளாண் மைப் பல்கலைக்கழகத்தின் திறந்தவெளி மற்றும் தொலை தூரக் கல்வி இயக்ககத்தின் மூலமாக உழவர்களுக்கு என இளநிலை பண்ணை தொழில்நுட்ப பட்டப்படிப்பு கடந்த 2010ம் ஆண்டு முதல் துவக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இப்பட்டப்படிப்பு உழவர்களின் வாழ்வு செழிக்க, உணவு உற்பத்தியை பெருக்கும் வகையில் பாடதிட்டங்களை கொண்டுள் ளது. இப்பட்டப்படிப்பில் வேளாண்மை குறித்த அனைத்து தகவல்களும் தனித்தனி பாடங்களாக தொகுக்கப்பட்டு எளிய தமி ழில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பாடத்தினை பயில அடிப்படை கல்வி தொகையாக ரூ.7,500 (ஒரு பருவம்) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 6 பருவங்கள் உள்ளது. இப்பாடத்திட்டத்தினை பயில 27 வயது நிரம்பியவர்களாகவும், பத்தாம் வகுப்பு சேர்ந்தவராகவும் இருத்தல் போதுமானது. இப்பாடத்திற்கு நடப்பு ஆண்டிற்கான உழவர்கள் சேர்க்கைகள் வரும் ஜூன் 2013 முதல் துவங்கப்பட உள்ளது. இப்பாடத்தில் சேர விரும்புவோர் இயக்குநர், திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககம், வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை, தொலைபேசி எண்: 94421&11058, 94421&1 1048 என்ற எண்களில் தொட ர்பு கொள்ளலாம். இவ்வாறு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

***திருச்சியில் மத்திய குழு ஆய்வு கடன்களை ரத்து செய்து நிவாரணம் தர வேண்டும்***

திருச்சி, : கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளின் அனைத்து கடன்களையும் ரத்து செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண் டும் என மத்திய குழுவினரி டம் விவசாயிகள் வலியுறுத்தினர்.

மத்திய அரசின் விவசா யம், திட்டமிடுதல் துறை துணை ஆலோசகர் மணிஷ் சவுத்ரி தலைமையிலான மத்திய குழுவினர் திருச்சி மாவட்டத்தில் நேற்று வறட்சி பாதித்த பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய் தனர். திருவெறும்பூரை அடுத்த பனையக்குறிச்சி யில் உழவர் பெருவிழாவில் அமைக்கப்பட்டிருந்த வேளாண் கண்காட்சியை பார்த்தனர். பின்னர் அங்கிருந்து கீழமுல்லைக்குடி சென்ற குழுவினர், அங்கு பயிரிடப்பட்டு காய்ந்து கருகிப்போன வாழைப்பயிர் களை பார்வையிட்டனர்.

அப்போது சரவணன் என்ற விவசாயி, மத்திய குழுவினரிடம் கூறுகையில், ரூ.3 லட்சம் செலவு செய்து 2 ஏக்கரில் வாழை சாகுபடி செய்தேன். ஆனால் போ திய தண்ணீரின்றி அவை காய்ந்து கருக தொடங்கவிட்டது. 4 இடங்களில் ஆழ் குழாய் கிணறு அமைத்தும் தண்ணீர் இல்லை. வழக்க மாக ஒரு வாழைத்தாரில் குறைந்தபட்சம் 8 சீப் இருக் கும். இப்போது 3 சீப் கூட இருப்பதில்லை. அதுவும் தண்ணீர் இல்லாமல் கருகி வருகிறது என்றார்.

நாட்டுக்கோழி பண் ணை நடத்தி வரும் ராஜேஷ் என்பவர் கூறுகை யில், பண்ணையில் 100 கோழி களை வளர்த்து வந்தேன். கடுமையால் வெயில், தீவனப்பற்றாக்குறையால் 50 கோழிகள் இறந்துவிட் டன என்றார்.

அதன்பின் இக்குழுவி னர் வேங்கூர் சென்றனர். அங்கு வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்தனர். அப்போது வய ல்களில் சாகுபடி இன்றி பொட்டல் வெளியாக கிடப்பதை அவர்கள் பார்வையிட்டனர்.

அங்கு விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்த னர். அப்போது விவசாயி கள் கூறுகையில், ரூ.36 ஆயி ரம் செலவு செய்து 82 அடி போர் போட்டும் தண்ணீர் இல்லை. வாழையால் ஒரு ஏக்கருக்கு ரூ.1.5 லட்சம் நஷ் டம் ஏற்பட்டுள்ளது. உரிய நிவாரணம் வழங்க வேண் டும் என்றனர்.

தமிழ்நாடு ஏரி ஆறு பாசன விவசாயிகள் சங்க தலைவர் விஸ்வநாதன் கூறுகையில், பருத்தி செடிகளுக்கு கூட தண்ணீர் இல் லாமல் காய்ந்துவிட்டன. ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் வேண்டும் என் றார்.

காங்கிரஸ் விவசாய பிரிவு நிர்வாகி முரளிதரன் கூறுகையில், மத்திய அரசு போதிய நிதி அளிக்கவில்லை என மாநில அரசு குற்றம்சாட்டி வருகிறது. எனவே மாநில அரசு எவ் வளவு நிவாரணம் வேண் டும் என்று கேட்கிறதோ, அதை மத்திய அரசு வழங்க வேண்டும். பேரம் பேசக்கூடாது என்றார்.

சிபிஎம் விவசாயிகள் சங்க தலைவர் மாசிலாமணி கூறுகையில், இதுவரை டெல்டாவில் 25 விவசாயி கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். சாகுபடி செய்து பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மட்டும் தமிழக அரசு நிவாரணம் அளித்துள்ளது. சாகுபடி செய்ய முடியாதவர்களுக்கு நிவார ணம் வேண்டும் என்றார்.

கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாவட்ட தலை வர் சின்னதுரை கூறு கையில், தேசிய நதி நீர்

திட் டத்தை செயல்படுத்த வேண்டும். 100 நாள் வேலை திட்டம் 150 நாள் என்று நீட்டிக்கப்பட்டுள்ளது. இதை 365 நாளும் நீட்டிக்க வேண்டும். சோலார் திட்டங்களுக்கு 100% மானியம் வழங்க வேண்டும் என்றார்.

புலியூர் நாகராஜன் கூறு கையில், காவிரி மேலாண் வாரியத்தை உடனே அமை க்க மத்திய அரசு நடவடி க்கை எடுக்க வேண்டும். மகாராஷ்டிராவில் விவசாயிகள் தற்கொலை செய்வது போல் இங்கு அந்த நிலை ஏற்பட்டுள்ளது. எனவே 31.3.13க்கு முன் விவசாயி கள் வாங்கிய அனைத்து விவசாய கடன்களையும் ரத்து செய்ய வேண்டும். ஏக் கருக்கு ரூ.25 ஆயிரம் நிவா ரணம் வழங்க வேண்டும் என்றார்.

இந்திய கம்யூ., தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் அயிலை சிவசூரியன் கூறுகையில், கடு மையான வறட்சியால் கால் நடை தீவனங்களின் விலை உயர்ந்துள்ளது. இதனால் அடிமாட்டுக்கு விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள் ளோம். அதிகாரிகள் ஒரு பகுதியை மட்டும் பார்த்து முடிவு செய்து விடக்கூடாது. பாதிக்கப்பட்ட எல்லா பகுதிகளையும் பார்க்க வேண்டும் என்றார்.

காங்கிரஸ் விவசாய பிரி வைச் சேர்ந்த முரளிதரன் கூறுகையில், மாநில அரசு கேட் கும் உதவித்தொகையை முழுமையாக மத்திய அரசி டம் பெற்று தர வேண்டும் என குறிப்பிட்டார்.

3 மணி நேரம்: திருச்சி யில் காலை 8. 45 மணிக்கு ஆய்வை தொடக்கிய இக்குழுவினர் பகல் 12 மணி வரை ஆய்வை மேற்கொண்டனர்.

வறட்சியால் குறைந்தது பால்: திருவெறும்பூர் பகுதி யில் மேய்ச்சல், புல் இல்லாததால் கறவை மாடுகள் அதிகளவில் விற்கப்படுகிறது. ரூ. 20 ஆயிரம் மதிப்புள்ள மாடுகள் ரூ. 5000த் துக்கு விற்கப்படுகிறது. கறவை பாலின் அளவும் அதிகளவில் குறைந்துள்ளதாக குறிப்பிட்டனர்.

புஞ்சைக்கு ரூ. 17 கோடி நிவாரணம்: அரசு அறிவித்த நிவாரணத்தொகை நஞ் சைக்கு மட்டும் தந்துள்ள னர். புஞ்சைக்கு நிவா ர ணம் தரவில்லை என விவ சாயிகள் கூறினர். கலெக்டர் ஜெயஸ்ரீ கூறுகை யில், முதல் கட்டமாக டெல்டா பகுதிகளுக்கு நிவாரணம் வந்தது. ரூ. 33 கோடி வரை நிவாரணம் வரப்பெற்று விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. தற்போது புஞ்சை பகுதி பாதிப்புக்கு நிவாரணமாக ரூ. 17 கோடி வந்துள்ளது. விரைவில் அளிக்கப்படும் என்றார்.

**புதிதாக நியமிக்கப்பட்ட திமுக விவசாய அணியினர் கே.என்.நேருவிடம் வாழ்த்து**

துறையூர், புதிதாக நியமிக்கப்பட்ட திமுக விவசாய அணி நிர்வாகிகள், கே.என்.நேருவை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

திமுக தலைவர் கருணாநிதி, பொருளாளர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் ஒப்புதலோடும் மாவட்டச் செயலாளர் கே.என்.நேருவின் பரிந்துரையின்பேரில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, மாவட்ட அமைப்பாளராக துறையூர் தர்மன் ராஜேந்திரன், துணை அமைப்பாளர்களாக நவல்பட்டு சண்முகம், எட்டரை

அருள் செல்வன், ஏழுர்பட்டி ராமவிலாஸ்மணி, கே.சாத்தனூர் துரைசாமி, திருப்பைஞ்சீலி கணேசன், சன்னாசிப்பட்டி பாலசுப்பிரமணியன் ஆகியோரை நியமித்து திமுக தலைமை கழகம் அறிவித்துள்ளது. புதிய மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் தர்மன் ராஜேந்திரன், புதிய மாவட்ட நிர்வாகிகள் மற்றும் தலைமை பொதுக்குழு உறுப்பினர் குணசீலன், ஒன்றிய செயலாளர் வாசுதேவன், மாவட்ட பிரதிநிதி அண்ணாதுரை, முன்னாள் ஊராட்சித்தலைவர் செல்வகுமார், அவைத்தலைவர் வரதராஜ், பொருளாளர் மாணிக்கம் மற்றும் துறையூர் ஒன்றிய நகர விவசாய அணி நிர்வாகிகளுடன் சென்று மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கே.என்.நேருவை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றனர்.

**மாவட்டம் முழுவதும் 25,750 விவசாயிகளுக்கு ரூ25.27 கோடி வறட்சி நிவாரண தொகை**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் 25 ஆயிரத்து 750 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்க ரூ.25.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு நிவாரண நிதி பட்டு வாடா துவங்கி விட்டது. கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு தமிழகத்தில் கடுமையான வறட்சி நிலவி வருகிறது. இதனால் நடப்பாண்டில் தமிழகத்தில் வேளாண் பணி பெருமளவிற்கு பாதித்து ள்ளது. ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி, காலிங்கராயன், மேட்டூர் வலதுகரை கால்வாய் பாசனப்பகுதிகளில் சம்பா நெல் சாகுபடி முற்றிலும் பாதிக்கப்பட்டது. குறிப்பாக பல இடங்களில் சாகுபடி செய்த பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத அளவிற்கு வறட்சி ஏற்பட்டதால் பவானிசாகர் அணையி லிருந்து தண்ணீர் திறக்க வழியின்றி பயிர்கள் காய்ந்து போனது. எனவே, பயிரிட்ட பயிர்களை காப்பாற்ற முடியாத விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவித்தொகை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை தீவிரமடைந்தது.

அதன் அடிப்படையில் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு வேளாண் துறை, வருவாய் துறை மற்றும் கூட்டுறவுத்துறை மூலமாக மாவட்டம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கணக்கெடுப்பு பணி நடந்தது. ஈரோடு மாவட்டத்தை பொறு த்த வரை வறட்சியால் பெருந் துறை தாலுகா தான் அதிகள வில் பாதிக்கப் பட்டிருப்பதாக கணக் கெடுப்பு மூலம் தெரியவந்துள்ளது. மற்ற தாலுக்காக்களில் வறட்சி பாதிப்பில் இரண்டாம் இடத்தில் சத்தியமங்கலம், மூன்றாம் இடத்தில் ஈரோடு, நான்காம் இடத்தில் கோபி, ஐந்தாம் இடத்தில் பவானி, ஆறாம் இடத்தில் அந்தியூர் தாலுகாக்கள் இடம் பெற்றிருந்தன.

இரண்டு கட்டமாக கணக்கெடுப்பு நடத்தி, மாவட்டம் முழுவதும் முதற்கட்ட கணக்கெடுப்பில் வறட்சியால் 25 ஆயிரத்து 750 விவசாயிகள் பாதிக்கப் பட்டுள்ளதாக பட்டியல் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதைதொடர்ந்து 2ம் கட்டமாக 25 ஆயிரம் விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்கள் என பட்டியல் தயாரித்து அனுப்பி வைக்கப்பட்டது. தற்போது முதற்கட்டமாக அனுப்பி வைக்கப்பட்ட பட்டியலில் உள்ள விவசாயிகளுக்கு அரசின் வறட்சி நிவாரணத் தொகை வந்து சேர்ந்துள்ளது.

இதுகுறித்து வேளாண் மற்றும் வருவாய்துறை வட்டாரங்கள் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப் பட்டவர்களின் பட்டியல் அனுப்பி வைக்க ப்பட்டதில் முதற்கட்டமாக 25 ஆயிரத்து 750 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண தொகையாக ரூ.25 கோடியே 27 லட்சத்து 40

ஆயிரம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்து அத்தொகை வந்து சேர்ந்துள்ளது. நிவாரணத் தொகை அந்தந்த பகுதி விவசாயிகளின் பெயருக்கு காசோலையாக வழங்க ப்படும். காய்ந்து போன நெற்பயிர் உள்ளிட்ட தண்ணீர் அதிகம் தேவைப்படும் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.4 ஆயிரமும், ஹெக்டேருக்கு ரூ.10 ஆயிரமும், மானாவாரி பயிர்கள் காய்ந்து போனால் ஏக்கருக்கு ரூ.3 ஆயிரமும், ஹெக்டேருக்கு ரூ.7500ம் நிவாரணத்தொகை வழங்கப்படும். தற்போது முதற்கட்ட பட்டியலுக்கு மட்டுமே நிவாரணத்தொகை வந்துள்ளதால் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள விவசாயி களுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வேளாண், வருவாய் துறையினர் தெரிவித்தனர்.

தமிழக விவசாயிகள் சங்க (கே.சி.ரத்தினசாமி பிரிவு) மாவட்ட செயலாளர் சுப்பு கூறுகையில், ‘வறட்சியால் மாவட்டம் முழுவதும் லட்சக் கணக்கான விவசாயிகள் பாதிக்கப்ப ட்டுள்ள நிலையில் முதற்கட்ட மாக 25 ஆயிரத்து 750 விவசாயிகளுக்கு மட்டுமே வறட்சி நிவாரணத்தொகை வந்துள்ளது. சட்டமன்றத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தபடி, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணத் தொகையை விரைந்து வழங்க அரசு நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும்‘ என்றார்.

**நீர் நிர்வாகம் கண்காணிக்க காவிரி நதிநீர் மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும்**

ஈரோடு, : காவிரி நதிநீர் மேலாண்மை வாரியத்தையும், நீர்ப்பாசன ஒழுங்குமுறை குழுவையும் அமைத்து நீர் நிர்வாகத்தை கண்காணிக்க வேண்டும் என்று கீழ்பவானி முறை நீர்பாசன விவசாயிகள் கூட்டமைப்பு வலியுறுத்தி உள்ளது.

கீழ்பவானி முறை நீர்பாசன விவசாயிகள் கூட்டமைப்பின் சிறப்பு பொது குழு கூட்டம் ஈரோட்டில் உள்ள ஏஈடி பள்ளி கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கூட்டமைப்பு தலைவர் காசியண்ணன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை அரசு இதழில் வெளியிட செய்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்துகொள்வது, கீழ்பவானி பாசனத்திற்கான தண்ணீர் தேவை ஆண்டுக்கு 36 டிஎம்சியாக இருந்ததை நடுவர் மன்றம் 28 டிஎம்சியாக குறைந்துள்ளது. காவிரி நடுவர் மன்ற மேல்முறையீட்டு வழக்கில் 36 டிஎம்சியாக பெற்றுத்தர தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வது, மத்திய அரசு உடனடியாக காவிரி நதிநீர் மேலாண்மை வாரியத்தையும், காவிரி நீர்பாசன ஒழுங்குமுறை குழுவையும் அமைத்து நீர் நிர்வாகத்தை கண்காணிக்கும்படி கேட்டுக்கொள்வது, காவிரி நடுவர் மன்ற தீர்ப்புக்கும் காவிரி நதிநீர் மேலாண்மை வாரியம் அமைப்பதற்கும் இடைப்பட்ட காலத்தில் நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின்படி நீர் நிர்வாகம் செய்யப்பட வேண்டும், நீர் விடும் காலம், அளவு ஆகியவற்றை தீர்ப்பின்படி முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்வது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் கூட்டமைப்பு ஆலோசகர் பாலன், வக்கீல் தங்கவேல், மாநில தலைவர் ரத்தினசாமி, கூட்டமைப்பு செயலாளர் வடிவேலு, பொருளாளர் ஈஸ்வரமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**இளநீர், சீயக்காய், பருத்தி விழிப்புணர்வு பேரணி**

பவானி, : பவானி வட்டார வேளாண்மைத்துறை சார்பில் பாரம்பரியம் மிக்க வேளாண் பொருள்களான இளநீர், சீயக்காய் மற்றும் பருத்தி பொருள்கள் குறித்த விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

பவானி புதிய பஸ் ஸ்டாண்டில் துவங்கி குருப்பநாயக்கன்பாளையம் வரை நடைபெற்ற இப்பேரணியை ஊராட்சி ஒன்றியக் குழு துணைத் தலைவர் என்.ரவி தொடங்கி வைத்தார். வேளாண்மை உதவி இயக்குனர் நாச்சிமுத்து பாரம்பரிய பொருள்களின் முக்கியத்துவம் குறித்து பேசினார்.

குருப்பநாயக்கன்பாளையம் பஞ்சாயத்துத் தலைவர் விஜயலட்சுமி, வேளாண் பொறியாளர் ரவீந்திரநாத் தாவூர், தோட்டக்கலைத்துறை துணை அலுவலர் ரத்தினம், வேளாண் அலுவலர்கள் அமுதா உள்பட 400க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.தொடர்ந்து, குருப்பநாயக்கன்பாளையத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவுக்கு ஈரோடு வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கினார். துணை இயக்குனர் மாரியப்பன் சிறப்புரையாற்றினார். விழாவில், வேளாண்மை கண்காட்சி, செயல் விளக்கங்களுடன் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சித்தூரில் காய்கறி விலை கிடுகிடு உயர்வு பீன்ஸ் கிலோ ரூ.85

சித்தூர் : சித்தூரில் காய்கறி விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. கிலோ பீன்ஸ் ரூ.85க்கு விற்கப்படுகிறது.

டீசல் விலையேற்றத்தால் அத்தியாவசிய பொருட்களின் விலையும் நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே போகிறது. இதில் குறிப்பாக காய்கறியின் விலை விண்ணைத் தொடும் அளவுக்கு உயர்ந்து வருகிறது. கடந்த 10 நாட்களுக்கு முன்பு வரை கிலோ ரூ.15க்கு விற்பனையான தக்காளி தற்போது ரூ.30க்கு விற்கப்படுகிறது. பாகற்காயின் விலையை கசக்கும் அளவிற்கு கிலோ ரூ.40க்கு விற்கப்படுகிறது. இதேபோன்று கேரட் ஒரு கிலோ ரூ.40க்கும், உருளை ரூ.35க்கும், கோஸ் ரூ.20க்கும், பீட்ரூட் ரூ.22க்கும், கத்தரிக்காய் ரூ.25க்கும், வெண்டைக்காய் ரூ.25க்கும் விற்கப்படுகிறது. இவை எல்லாவற்றையும் விட பீன்ஸ் கிலோ ரூ.80 முதல் 85 வரை விற்கப்படுகிறது. இதனால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.